இந்திய இலக்கியச் சிற்பிகள்

# கு.அழகிரிசாமி

வெளி ரங்கராஜன்



கு. அழகிரிசாமி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவா விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.நாகார்ஜுன மலைச் சிறபம் கி பி. இரண்டாம் நூற்றாண்டு.

(பட உதவி நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# கு. அழகிரிசாமி

வெளி ரங்கராஜன்

சாகித்திய அகாதெமி

*Ku. Azhagirisamy*: Monograph in Tamil by. Veli Rangarajan, Sahitya Akademi, New Delhi, 2006 Rs.25

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு. 2006

**சாகித்திய அகாதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

**விற்பனை**

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ

ISBN 81-260-2207-8

அச்சு : M.L பிரிண்ட்ஸ், சென்னை

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 வாழ்க்கைப் பாதை | 11 |
| 2 சிறுகதைகள் | 18 |
| 3. கட்டுரைகள் | 38 |
| 4. பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடு | 62 |
| 5. இசை ஈடுபாடு | 76 |
| 6. நாடகங்கள்,நாவல்கள், மொழி பெயர்ப்புகள் | 86 |
| 7 கடிதங்கள் | 98 |
| 8. இலக்கிய உறவுகள் | 109 |
| 9. படைப்பிலக்கியப் பார்வை | 117 |
| நூற்பட்டியல் | 121 |

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி, புதுமைப்பித்தன் உருவாக்கிய புத்திலக்கிய மரபை உத்வேகமாகக் கொண்டு தமிழ் உரைநடை இலக்கியத்தை வளப்படுத்திய அடுத்த தலைமுறை எழுத்தாளர்களில் கு.அழகிரிசாமி மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர் தென் தமிழ்நாட்டில் ஒரு கிராமத்தில் பிறந்து இலக்கியத்திலும் இசையிலும் தீவிர ஈடுபாடு கொண்டு ஒரு பிரபஞ்ச உணர்வுடன் மண்ணையும் மக்களையும் நேசித்து வறுமையிலும் போதாமையிலும் பெரும் பகுதி வாழ்வைக் கழிக்க நேர்ந்தாலும் தீராத நேசத்துடன் வாழ்ந்து மடிந்த அழகிரிசாமி தம்முடைய எழுத்தின் மூலமும், இடைவிடாத தேடலின் மூலமும் ஒரு பெரும் உத்வேகத்தை உருவாக்கி மறைந்தவர். தேசிய உணர்வுகளும் புதிய சமூக மறுமலர்ச்சிக்கான கருத்துகளும், புதிய இலக்கிய உணர்வுகளால் மொழியை வளப்படுத்தத் துடிக்கும் உத்வேகங்களுமாக உணர்வுகள் பெருகிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த அழகிரிசாமி அத்தகைய உணர்வுகளின் பிரதிபலிப்பாகத் தாம் வாழ்ந்த கரிசல்காடடு வாழ்க்கைச் சூழலின் பல்வேறு உணர்வுகளைச் சிறப்பாகப் படம் பிடித்துத் தமிழில் ஒரு வகையான சூழல் சார்ந்த வட்டார உணர்வுகள் கொண்ட இலக்கியத்தை முன்னிலைப்படுத்தியவர் பண்டிதர்களுக்கும், புலவர் களுக்கும் மட்டுமில்லாது மொழியின் அழகுகளும், நுட்பங்களும் அனைவருக்கும் உரியவை என்கிற உணர்வுடன் தமிழ் இலக்கியத்தின் நயங்களை அனைவரும் அனுபவிக்கும் விதமாக எளிமையாக அவற்றை விளக்கி அவை குறித்த ஒரு ஈடுபாட்டை உருவாக்கியவர் இன்னும் வெளி உலகத்துக்குத் தெரியாத எண்ணற்ற தனிப்பாடல்களையும், மக்களின் வாய்மொழி இலக்கியங்களையும், நாட்டுப்புறச் சொல்லாடல்களையும், இசை மற்றும் நாட்டியக்கூறுகளையும் திரட்டி அவைகளைப் பிரபலப் படுத்த வேண்டும் என்று திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்தவர்.

அவ்விதமாகத் திரிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் மக்களிடையே வழங்கி வந்த இசை லயத்துடன் கூடிய காவடிச்சிந்து பாடல்களைப் பல வருடங்கள் அலைந்து முறையாகத் திரட்டிப் புதிய வடிவில் அவர்

பதிப்பித்ததுதான் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து நூல் இதேபோல் கம்பராமாயணத்தின் மீது பெரும் ஈடுபாடு கொண்டு அதன் ஐந்து காண்டங்களை அனைவரும் புரிந்து கொள்ளும் விதமாக விரிவான உரையுடன் புதிய வடிவில் பதிப்பித்தவர். இவ்விதமாகப் பாரதி, புதுமைப்பித்தன் போன்றோர் வகுத்த நவீன இலக்கியத் தடத்திலேயே இயங்கி புதிய இலக்கியங்களை அவர் உருவாக்கினாலும் பிரபலமாகாத தமிழ் சிற்றிலக்கியங்களும், மக்களின் வாய்மொழி இலக்கியங்களும் சமூகத்தில் உரிய கவனம் பெற வேண்டும் என்பதிலும் ஈடுபாடு கொண்டு ஒட்டு மொத்த கலாச்சாரச் செயல்பாடு என்பது பழையது, புதியது என்கிற வேறுபாடு இல்லாதபடி எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்கிற ஒரு முதிர்ந்த இலக்கிய மனத்தை அவர் அடையாளப்படுத்தினார். இவ்வாறு தன்னை ஒரு குறிப்பிட்ட வகைமையுடன் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு சுயம் சார்ந்த மனநிலையுடன் அவர் செயல்பட்டதால் தான் கலாச்சாரம் சார்ந்த ஒவ்வொரு நுண் செயல்பாட்டிலும் சிறப்பாக அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

இதனால் அவர் 47 ஆண்டுகளே வாழ்ந்தாலும் அக்குறுகிய கால கட்டத்தில் சிறப்பான தடங்களை விட்டுவிட்டுச் செல்ல முடிந்திருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், பத்திரிகை, பதிப்பு, கடிதங்கள், பேச்சு என கலாச்சாரத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் தன்னை இணைத்துக் கொண்டு ஒரு முழுமையான இலக்கியவாதியாக வாழ்ந்தவர். அழகிரிசாமியின் எளிய வாழ்க்கையும், எழுத்தும், மனித நேயமும் பின் தலைமுறை எழுத்தாளர்களுக்குப் பெரும் உத்வேகமாக அமைந்தன. பிரச்சாரத்தொனியற்ற வட்டார உணர்வுகள் கொண்ட ஒருவகையான யதார்த்த இலக்கியம் அவரால் புத்துயிர் பெற்றது

ஆனால் தமிழ் இலக்கியத்தில் சிறப்பான சாதனைகள் செய்த பல எழுத்தாளர்களைப்போலவே அழகிரிசாமியும் இளம் வயதில் மடிய நேர்ந்திருக்கிறது. நோய்வாய்ப்பட்டதின் காரணமாகவே அவர் இறக்க நேர்ந்தாலும் பல படைப்பிலக்கியவாதிகளுக்குத் தமிழ்ச் சமூகத்தில் நேர்ந்த புறக்கணிப்புதான் இவருக்கும் நிகழ்ந்திருக்கிறது அரசாங்க வேலையிலும் பின்னர் அது பிடிக்காமல் குறைந்த சம்பளத்தில் வெவ்வேறு பத்திரிகைகளில் வேலை செய்தும் ஓர் எழுத்தாளானாகத் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அவர் அரும்பாடுபட்டிருக்கிறார் ஆனால் அவர் இறந்த பிறகே அரசாங்கம் அவருக்குச் சாகித்ய அகாடமி விருது வழங்கி கௌரவித்தது.

ஆனால் பல இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் இலக்கியத்தையும் வாழ்க்கையையும், பிரபஞ்சத்தையும் வருத்தங்கள் இன்றி நேசித்து, இறவாப் பாத்திரங்களை உருவாக்கிய ஒரு கலைஞராகவே அழகிரிசாமி வாழ்ந்து மறைந்திருக்கிறார். சமரசங்களின்றி அர்ப்பணிப்பு உணர்வுடன் இலக்கியத்துக்காகப் பாடுபடும் தமிழ் எழுத்தாளர்கள் எத்தகைய வாழ்க்கையை எதிர்கொள்ள நேர்கிறது என்பதைத் தமிழ்ச் சமூகம் இந்த சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும்

# 1

# வாழ்க்கைப் பாதை

**1923ல்** திருநெல்வேலி மாவட்டத்தில் கோவிலபட்டியை அடுத்த இடைசெவல் கிராமத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவர் அழகிரிசாமி அவர் பிற்காலத்தில் சென்னை மலேயா என்று பெரு நகரங்களில் வாழ நேர்ந்தாலும், தாம் வளர்ந்து உருவான கிராமச் சூழ்நிலையும் கிராமிய உணர்வுகளையும் கிராமிய மனிதர்களையும் தம் வாழநாளில் என்றைக்கும் அவர் மறந்ததே இல்லை அவருடைய எல்லா எழுத்துக்களுக்கும் அடிப்படையாக அமைந்தவை அவர் தன்னுடைய கிராமிய பினபுலததில் பெற்ற வாழ்க்கை மதிப்பீடுகள் தான் அவருடைய கலைநேயம், மனித நேயம், சூழல் நேயம் ஆகிய எல்லாவற்றுக்கும் அடிப்படையாய் அமைந்தவை அவர் தம்முடைய இளம் வயதில் பெற்ற உணர்வுகளே சிறுவயதில் அவருடைய கையில் ஏற்பட்ட ஊனம காரணமாக அவரால் கிராமத்தில் இருந்து தம்முடைய குடுமபத்தொழிலில் ஈடுபட முடியவில்லை. அதனால் படிப்பில அதிக கவனத்தைச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. படிப்பு ஓவியம் இசை எனறு இயலபாகவே அவருடைய ஈடுபாடுகள் வளர்ந்தன அவருடைய பககதது வீட்டுக்காரரும் சிறுவயதுத் தோழருமான கி ராஜநாராயணனுடன் சேர்ந்து பஜனைப் பாடல்களைப் கேட்பதிலும் இட்டுக்கட்டிப் பாடுவதிலும் அதிகத் திறமையை வளர்த்துக் கொண்டார். கிராமபோன் இசைத்தட்டுகளிலிருந்து கர்நாடக இசை ராகங்களைக் கேட்டு ரசிப்பது என்பது இருவருக்கும் பிடித்தமான பொழுது போக்காக இருந்தது சிறுவயதிலிருநதே ஒரு செழுமையான இசை உணர்விற்குப் பழக்கப்பட்டுப்போய் பின்னர் அதுவே தமிழ்க்கவிதையை இசைக்கூறுகளின் அடிப்படையில் ஆழ்ந்து அறியக்கூடிய பார்வையை அவருக்கு அளித்தது அதே போல் வீடுகளில் கோலங்கள் வரைவதிலும் வீட்டுச்சுவர்களில் சித்திரங்கள் வரைவதிலும் ஆர்வம் கொண்ட இவர் பாவைக் கூத்து நிகழ்சசி ஒன்றைத் தாமே தயார் செய்து அதற்கான சித்திரங்களை வரைந்திருக்கிறார் தம்முடைய 16 வயதிலேயே இவரும் கி.ராஜநாராயணனும் சேர்ந்து திருவனந்தபுரம் போய் அங்குள்ள சித்திராலயத்தில் ரவிவர்மாவின் ஓவியங்களைக் கண்டு

மகிழ்ந்திருக்கின்றனர். போகும் வழியில் புத்தேரியில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையைச் சந்தித்து அவருடன் இலக்கிய அறிமுகம் செய்து கொண்டனர் சிறுபிராயத்தில் ஒருவர் ஏற்படுத்திக் கொள்கிற ஆழ்ந்த தோழமைகளே பின்னாளில் அவர்களுக்கு உத்வேகங்களாக அமைகின்றன அவ்வாறு படிப்பு, ஓவியம், இசை என்று அழகிரிசாமி சிறுபிராயத்தில் கொண்ட தேடல்களே அவருடைய வாழ்க்கைப் பாதையைக் கட்டமைக்கின்றன. எஸ் எஸ்.எல் சி. படித்து முடித்த பிறகு தமிழ் இலக்கியத்தையும் ஆங்கில இலக்கியத்தையும் கொஞ்சம் ஆழ்ந்து படித்து அதில் ஈடுபாடுகளை வளர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்கு கிடைக்கிறது.

பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஆரம்பப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகவும், சார்பதிவு அலுவலகத்தில் எழுத்தாளராகவும் அழகிரிசாமி வாழ்க்கையை ஆரம்பிக்கிறார் ஆனால் இலக்கிய தாகம் கொண்ட அழகிரிசாமிக்கு அரசாங்க வேலையில் மனம் ஒட்டவில்லை. ஏற்கனவே அவருடைய கதைகள் ஆனந்த போதினி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன ஆனந்தபோதினி ஆசிரியர் நாராயண துரைக் கண்ணன் அழகிரிசாமியின் இலக்கியத் திறமைகளைக் கேள்விப்பட்டு அவரை சென்னைக்கு வந்து உதவி ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கிறார் ஆனால் சென்னைக்கு வந்து இங்கு பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அந்த சம்பளத்தில் சென்னையில் காலம் தள்ள முடியாது என்ற நினைப்புடன் மீண்டும் தென்காசிக்கே வந்து தான் ராஜினாமா செய்த சார் பதிவாளர் அலுவலக வேலையையே மீண்டும் ஏற்கிறார் அதிலிருந்துகொண்டே அவ்வப்போது குற்றாலத்தில் ரசிகமணி டி கே சியைச் சந்தித்து உரையாடலாம் என்பதுதான் அவருக்கிருந்த ஒரே நம்பிக்கையாக இருந்தது ஆனால் அரசாங்க வேலையில் கொஞ்சமும் அவர் மனம் ஈடுபடமுடியவில்லை சென்னைக்கு வந்து கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. பத்திரிகையில் வேலை செய்து கொண்டு மற்ற இலக்கியத் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் உண்டு என்ற நம்பிக்கையுடன் மீண்டும் சென்னைக்கே வந்து ஆனந்த போதினி பத்திரிக்கையில் உதவி ஆசிரியராகச் சேர்கிறார். அதற்குப் பிறகு அவருடைய வாழ்க்கை பத்திரிகை எழுத்து இலக்கியம் என்றே சுழல ஆரம்பிக்கிறது ஆனால் அவருடைய வேலை மற்றும் வாழ்க்கைப் போக்கு குறித்த தேர்வுகளிலெல்லாம் முன்னுரிமை பெறுவது அவருடைய இலக்கியம் குறித்த கனவுகளே.

பிரசண்ட விகடன், சக்தி ஆகிய பத்திரிகைகளில் வேலை பார்த்த காலகட்டங்களில் தான் கதைகள் கட்டுரைகள் என அவருடைய இலக்கியப் பங்களிப்புகள் துவங்கி அவர் ஒரு படைப்பாளியாகப் புதுமைப்பித்தன், ரகுநாதன், வல்லிக்கண்ணன் போன்ற சக படைப்பாளிகளால் அறியப்படுகிறார். சென்னையில் பல படைப்பாளிகளுடைய ஆழ்ந்த நட்பு அவருக்குக் கிடைத்தாலும் சென்னை வழ்க்கை அவருக்குச் சந்தோஷ மானதாக இல்லை என்பதை அவர் கி. ராஜநாராயணன் போன்ற நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் தெரிவிக்கினறன. பணப்பற்றாக் குறையாலும், உடல்நலக்குறைவாலும் அந்த நாட்களில் அவர் பெரிதும் பாதிக்கப்பட்டார். ஒரு எழுத்தாளராகத் தான் சென்னையில் வாழ்ந்த வாழ்க்கைபற்றி அவர் இவ்வாறு எழுதுகிறார் ''வெ்வ்வேறு பத்திரிகாலயங்களில் வேலை பார்த்தேன் உதவி ஆசிரியராகவும், பெயர் போடாத ஆசிரியராகவும், பெயர் போட்டும் சரிவரப் போடாத ஆசிரியராகவும் எட்டு வருஷ காலம் வேலை பார்த்தும் மாதம் 125 ரூபாய் சம்பளத்தைக் கூட எட்ட முடியவில்லை எந்த சமயத்திலும் 100 ரூபாயை ஒரே சமயத்தில் வாங்கியது இல்லை அதிக சம்பளத்திற்கு ஆசைப்பட்டு குறுக்கு வழியில் இறங்கவோ, அனுபவித்து வரும் ஓரளவு சுதந்திரத்தையும் இழக்கவோ, பெயருக்காகவும் பணத்திற்காகவும் எனக்குத் திருப்தியளிக்காதவாறு எதையாவது எழுதிக் கொடுக்கவோ நான் முயற்சி செய்யாததோடு மட்டுமல்ல, நினைக்கக்கூட இல்லை ஒதுங்கியிருந்து பிழைப்பது என்னுடைய இரண்டாவது இயற்கையாகிவிடவே 1952 வரையிலும் எழுத்தாளர்களில் பலருக்கே என் பெயர் தெரியாது வாசகர்களுக்கு எவ்வளவு தூரம் தெரிநதிருக்கும் என்பதை இதிலிருந்தே கண்டு கொள்ளலாம்.''

சென்னை நகரத்தைப் பற்றி மேலும் எழுதுகிறார் ''இந்த நகரில் கவிதை எழுதுவது என்பது நடக்காத காரியம் வேண்டுமானால் செய்யுள கட்டலாம். இதை ஒரு போர்டில் எழுதி எழுமபூர் ஸ்டேஷனிலும் சென்டரல் ஸ்டேஷனிலும் தொங்க விட்டால் இங்கே குடியேறுவதற்காக வரும் உண்மைக் கவிஞர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகக் கூட இருக்கும்'' ஆனால் பட்டினி கிடந்தாவது படைப்பாளியாக வாழ்வது என்ற தீர்மானத்துடன் இருந்த அழகிரிசாமி இந்த இடர்பபாடுகளைப் பொருட்படுத்தவில்லை ஆனால் சக்தி பத்திரிகையில் இணைந்து வேலை செய்த காலத்தில்தான் அவருடைய பல இலக்கியக் கனவுகள் நனவாயின புனைவு இலக்கியத்தைத் தாண்டி கடடுரை, மொழிபெயர்ப்பு என அவருடைய எல்லைகள் விரிவு பெறறன பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் சந்திக்கும் இடமாக இருந்த சகதி காரியாலயம் பல மார்க்சிய

சிந்தனையாளர்களை அழகிரிசாமிக்கு அறிமுகப்படுத்தியது. சிறு வயதிலிருந்தே ரஷிய எழுத்தாளர்களான மாக்சிம் கார்க்கி, டால்ஸ்டாய், ஆன்டன் செகாவ் ஆகியோரின் எழுத்துக்களால் உத்வேகம் பெற்றிருந்த அழகிரிசாமி தோழர்களின் உரையாடல்களால் மேலும் தாக்கம் பெற்று 'அமெரிக்காவிலே' மற்றும் 'லெனினுடன் சில நாட்கள்' ஆகிய மாக்சிம் கார்க்கியின் படைப்புகளைத் தமிழாக்கம் செய்தார். அழகிரிசாமி தொகுத்த அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச் சிந்து'வையும், கம்பராமாயணப் பதிப்புகளையும் சக்தி பதிப்பகம் வெளியிட்டது. 'கு. அழகிரிசாமியின் கதைகள்' என்ற நூலையும் சக்தி பதிப்பகம் 1952ல் வெளியிட்டு அழகிரிசாமியைக் கௌரவப்படுத்தியது. சென்னையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நாட்களில் கூட அவ்வப்போது லீவு எடுத்துக் கொண்டு கோவில்பட்டிக்கு வந்து நண்பர்களுடன் உரையாடுவதிலும், முறையான இசைப்பயிற்சி மேற்கொள்வதிலும் நேரத்தைச் செலவிட்டுச் சில மாறுதல்களை உருவாக்கிக்கொண்டார்.

1952ல் தமிழ்நேசன் பத்திரிகையின் பொறுப்பை ஏற்க மலேசியா சென்றபோதுதான் அழகிரிசாமியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது அவர் தமிழ்நேசன் பத்திரிகையின் பொறுப்பாளராக இருந்த ஐந்தாண்டு காலகட்டத்தில் (1952-1957) சிறந்த தமிழ்ச் சிறுகதைகளையும் உலகச் சிறுகதைகளையும் அங்கு அறிமுகப்படுத்தி மலேசியத்தமிழ்ச் சூழல் மேம்படுவதற்கு பல முயற்சிகள் செய்தார். பல மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தமிழ்நேசனில் வெளியிட்டு அவர்களை உற்சாகப்படுத்தியதோடு அவர்கள் இன்னும் சிறப்பாக எழுதுவதற்கு ஆலோசனைகளும் வழங்கினார் அனைத்து மலேசியத் தமிழ் எழுத்தாளர்களும் பங்கு கொள்ளும் விதமாக மாதந்தோறும் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து சிறுகதைகள் குறித்த உரையாடலுக்கும், விவாதங்களுக்கும் உதவினார். இதற்கிடையில் 1955ல் வல்லீபரதம், முக்கூடற்பள்ளு ஆகிய இசை நாடகங்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இசைத் தேர்ச்சி கொண்ட சீதாலட்சுமியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஏற்கனவே அழகிரிசாமியின் கதைகளால் கவரப்பட்டிருந்த சீதாலட்சுமி அந்த இசை நிகழ்ச்சியால் மேலும் ஈர்க்கப்பட்டு அவர்கள் வாழ்வில் இணையக்கூடிய சந்தர்ப்பம் உருவானது. இசை உணர்வு கொண்ட அழகிரிசாமிக்கு அவர் விரும்பியபடியே இசை ஞானம் கொண்ட ஒரு மனைவி வாய்க்கப்பெற்றது அவரது வாழ்க்கையில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

1957ல் மலேசியாவில் தமிழர்களுக்கான உரிமைகளை வலியுறுத்தித் தமிழ்நேசனில் அழகிரிசாமி எழுதிய தலையங்கள் சர்ச்சைகளைக்

கிளப்பியபோது அரசியல்வாதிகளின் தலையீட்டுக்கு அடிபணிந்த பத்திரிகை நிர்வாகம் அறிவிப்பின்றி ஆசிரியரை மாற்றியது. தம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் விதமாக மிகுந்த மனப்போராட்டத்துடன் தமிழ்நேசன் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பிலிருந்து விலகி மீண்டும் சென்னை திரும்பினார். பத்திரிகையிலிருந்து விலக நேர்ந்தாலும் அழகிரிசாமி எழுப்பிய உரிமைக் குரலுக்கு மலேசிய அரசாங்கம் செவிசாய்த்து அங்குள்ள தமிழர்களுக்குப் பல சலுகைகளை அளிக்க முன்வந்தது. தம்முடைய எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் மலேசியத் தமிழர்களிடம் கலாச்சார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவர் உருவாக்கிய விழிப்புணர்ச்சி அவர் மீது ஆழ்ந்த மதிப்பையும், பின்பற்றுதலையும் மலேசியாவில் உருவாக்கியது. அவரை முன்னோடியாகக் கொண்டு கமலநாதன், துரைராஜ் போன்ற புதிய சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினர் அழகிரிசாமியின் 'கவிச்சக்ரவர்த்தி,' மற்றும் 'வஞ்சமகள்' ஆகிய இரு நாடகங்களும் மலேசியாவில் உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகத்திலும் பாடப்புத்தகமாக இடம் பெற்றன அழகிரிசாமி மலேசியாவை விட்டு வந்து கிட்டத்தட்ட 26 ஆண்டுகளுக்குப் பிறகு 1983 இல் 'கு அழகிரிசாமி கதைகள்' என்ற அவரது தொகுப்பு அவரது மனைவி சீதாலட்சுமியால் மலேசியாவில் வெளியிடப்பட்டது. அத்தொகுப்பில் அழகிரிசாமியின் தேர்ந்தெடுத்த சிறுகதைகளுடன் அவருடைய மலேசிய இலக்கிய நண்பர்களின் கருத்துரைகளும் மலேசிய அமைச்சர்கள் சிலரின் வாழ்த்துரைகளும் இடம் பெற்றிருந்தன 1957ஆம் ஆண்டில் விட்டுப்போன தொடர்பு 26 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இந்த நூல் வெளியீட்டினால் புதுப்பிக்கப்படுகிறது நம்நாட்டுச் சிறுகதையை வளர்த்து விட்ட ஒருவரது நூல் நம் நாட்டிலே வெளியீடு காண்பது பெருமைக்குரியதாகும் நம் நாட்டுச் சிறுகதைக்கு இது மேலும் உறுதுணையாகும் '-என்று மலேசிய அமைச்சர் டத்தோ கு.பத்மாநாபன் குறிப்பிட்டுள்ளார்

இவ்வாறு அழகிரிசாமியின் மலேசிய வாழக்கை தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் வெற்றிகரமானதாக அமைந்தாலும் அழகிரிசாமியின் படைப்பு மனம் மலேசிய வாழ்க்கையில் முழு திருப்தி அடையவில்லை. அங்கு அவருக்கு இணையான இலக்கிய அனுபவங்கள் உள்ளவர்கள் இல்லாதிருந்ததும், தினசரியில் இருந்து கொண்டு படைப்பிலக்கியத்தில் சிறப்பாக ஈடுபடமுடியாத நிலையும் அவருக்குப்பெரும் மனக்குறையாக இருந்தன. வசதிகள் குறைவான நிலையிலும் நம்முடைய தமிழ்ச்சூழலில்தான இவை சாததியம் என்பதால் மீண்டும் மலேசியாவுக்கு செல்வதைப் பற்றிய பேச்சு வந்த போது அதை

அவர் மறுத்துவிட்டார். வசதியான வாழ்க்கைச் சூழலில் தம் வாழ்நாளைச் செலவழிக்க விரும்பாமல் இடர்ப்பாடுகளுக்கிடையிலும் நம்முடைய பண்பாட்டுச் சூழலிலேயே இயங்க விருப்பம் கொண்டவராக இருந்தார் அழகிரிசாமி.

1957ல் மனைவிமக்களுடன் சென்னை திரும்பிய அழகிரிசாமி மூன்று வருடங்கள் காந்தி நூல்வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராக வேலை பார்த்தார். அப்போது கார்க்கியின் 'யுத்தம் வேண்டாம்', 'விரோதி பணியாவிட்டால்' ஆகிய கட்டுரைத் தொகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். கார்க்கி எழுத்துக்களைத் தொடர்ந்து 'பல நாட்டுச் சிறுகதைகள்', முன்னாள் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தின் 'இந்திய ஒருமைப்பாடு' லாரன்ஸ் பன்யனின் 'அக்பர்' ஆகிய நூல்களை இந்த கால கட்டத்தில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அழகிரிசாமி 1960 முதல் நவசக்தி பத்திரிகையின் துணை ஆசிரியராகச் சேர்ந்து 1965வரையில் அந்தப் பத்திரிகையில் இருந்தார். நவசக்தி பத்திரிகையில் ஐந்தாண்டுகள் செய்தி ஆசிரியராக இருந்த காலத்தில் கல்கி, தாமரை, சுதேசமித்திரன், கணையாழி போன்ற இதழ்களில் நிறைய கட்டுரைகள் எழுதினார். அந்தக் காலகட்டத்தில்தான் அவருடைய முக்கியமான சிறுகதைகளான காற்று,மற்றும் குமாரபுரம் ஸ்டேஷன் ஆகியவை தாமரை மற்றும் கல்கி இதழ்களில் பிரசுரமாயின. ஆனால் நாளிதழில் வேலை செய்து கொண்டு அதிமான படைப்பிலக்கிய முயற்சிகளில் அவரால் ஈடுபட முடியவில்லை. ஆனால் அந்தக் கால கட்டத்தில்தான் அவருடைய முக்கியப் படைப்பான 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்' நாடகம், எழுதப்பட்டு நாடகக் கலைஞர் எஸ் வி சகஸ்ரநாமம் குழுவினர் பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தில் அதை அரங்கேற்றினர்.

1965லிருந்து 1970வரை அதாவது அவரது இறுதிக்காலம் வரை சுதந்திர எழுத்தாளராகவே வாழ்ந்தார். தமது கருத்துக்கு மதிப்பளித்த சுதேசமித்திரன், கல்கி, கணையாழி, தாமரை, தீபம் ஆகிய பத்திரிகைகளில் மட்டும் கதைகள், கட்டுரைகள் எழுதினார். ரஷிய இலக்கியங்களை படித்தும், மொழிபெயர்ப்புச் செய்தும் கலாச்சார உறவுக்கு வித்திட்ட அழகிரிசாமியைக் கௌரவிக்கும் விதமாக சோவியத் நிறுவனம் சோவியத் நாடு இதழில் அவருக்குப் பணி அளித்தது. ஆனால் அங்கு மூன்று மாதங்களே அவரால் வேலை பார்க்க முடிந்தது அவருடைய முதுகுத்தண்டில் உருவான எலும்புருக்கி நோயின் விளைவாக அவர் உடல் நலம் சீர்கெட்டு அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட நேர்ந்தது சிகிச்சையில் முன்னேற்றம் ஏற்பட்டு அவர் வீடு திரும்ப இருந்த போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் 5 7 1970 அன்று அவர் உயிர் பிரிந்தது

அழகிரிசாமி ஆஸ்பத்திரியில் இருந்தபோது கூட ஆனந்தவிகடன் நடத்திய திருநெல்வேலி மாவட்ட சிறுகதைப் போட்டியின் நீதிபதியாக இருந்து கதைகளையெல்லாம் படித்துத் தம்முடைய தேர்வைத் தெரியப்படுத்தினார். இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு முறை ஜெயகாந்தன் ஒரு கூட்டத்தில் அவரைச் சந்தித்து தனியே உரையாடிக் கொண்டிருந்த போது மரண பயம் குறித்த ஜெயகாந்தனின் பேச்சுக்கு அழகிரிசாமி பல சமாதானங்கள் கூறியதாக ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளார் அதே போல் ஆஸ்பத்திரியில் தம்மைப் பார்க்க வந்த நா.பார்த்தசாரதியிடம் அழகிரிசாமி தம் தலையணை அடியிலிருந்து ஒரு துண்டு காகிதத்தை எடுத்துக் கொடுத்து, 'நம்முடைய பத்திரிகைகளில் காலமாகிவிடும் எழுத்தாளர் களின வாழ்க்கைக்குறிப்புகளை சரியாக வெளியிடுவதில்லை. இதில் என்னைப் பற்றிய சரியான விவரங்கள் இருக்கின்றன' என்றிருக்கிறார்

இவ்விதமாக அழகிரிசாமி கொண்ட வேடிக்கையும், விலகலுமான பார்வைதான் இந்த லௌகீக வாழ்க்கையின் இடர்ப்பாடுகளை தாங்கிக் கொள்ளக்கூடிய மனோபலத்தை அவருக்கு அளித்திருந்தது பலவிதமான நேசங்களில் அவர் கட்டுண்டிருநதாலும் மனித வாழ்க்கையின் இயலாமைகள் குறித்த தெளிவை அவர் கொண்டிருந்தார் இந்திய அரசாங்கம் அவருக்கு இலக்கியத்துக்கான சாகித்திய அகாதெமி பரிசை வழங்கிய போது அதை வாங்குவற்கு அவர் உயிருடன் இல்லை

# 2
# சிறுகதைகள்

அழகரிசாமி பன்முகப்பட்ட இலக்கிய ஆளுமை கொண்டவராக இருந்தாலும் மற்ற வடிவங்களை விட சிறுகதைகளில் அவர் ஒரு சிறப்பான கலைஞராக வெளிப்படுவதை உறுதியாகக் கூறமுடியும். முக்கியமாகச் சிறுவயதில் அவர் படித்த மாக்சிம் கார்க்கி, டால்ஸ்டாய், செகாவ் ஆகியோரின் ரஷியப் புனைகதைகள் அவரிடம் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தி இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக வறுமையும் இயலாமைகளும் நிறைந்த கரிசல் காட்டு வாழ்க்கையும் அந்த நில வெளியும், மனிதர்களும் அவரிடம் எண்ணற்ற மனச் சித்திரங்களை உருவாக்கி இருந்தன இசை ஈடுபாடும் நண்பர்களின் நேசமும் பலவிதமான மனநெகிழ்ச்சிகளுக்கு அவரை உட்படுத்தியிருந்தன. தமிழ் இலக்கியத்தையும், மொழியின் வளமைகளையும் அவர் கற்றுத் தேர்ந்தது அவர் கதைமொழி செம்மைப்பட உதவியது.

மனித வாழ்க்கையின் அவலங்கள் குறித்த பரிவும் நெகிழ்ச்சியுமே அழகிரிசாமியிடம் கதைகளாக வெளிப்பட்டன என்றாலும் அவருடைய எழுத்து பொய்யான நம்பிக்கைகளை அளிக்காமல் நிதர்சனம் குறித்த தெளிவை நோக்கி அழைப்பதாகவே உள்ளது தீர்மானமான முடிவுகள் இன்றி வாழ்க்கையின் இயல்புத்தன்மையையும் பல்வேறு சாத்தியங் களையும் அங்கீகரிக்கும் ஒரு மனநிலையுடனேயே அவர் செயல் படுகிறார் அவலங்களும் அவஸ்தைகளும் போலவே வாழ்க்கையில் விபத்துகளும் வேடிக்கைகளும் விசித்திரங்களும் நிரம்பியிருப்பதை ஒரு வித சமன நிலையில் அவரால் பார்க்க முடிகிறது. முக்கியமாக மனித நடத்தைகளின் விசித்திரங்களையும் விபரீதங்களையும் ஒரு புரிதல் மனித்துடன் அணுகக் கூடிய பார்வையை அவருடைய பல கதைகள் வெளிப்படுத்துகின்றன. சிறுசிறு விஷயங்கள் கூட அவருடைய பார்வையில் விஷேச கவனங்கள் பெற்றுக் கதைகளுக்கான சாத்தியங்களை அதிகரிக்கின்றன எந்த சந்தர்ப்பத்திலும் எதையும் உபதேசித்துப் பேசவோ உரத்துப் பேசவோ செய்யாமல் ஒரு கேலியான விலகல் பார்வையுடன் அவர் செயல்படுகிறார். வாழ்க்கை என்பது சிறுசிறு சந்தோஷங்களும்

பெரும் துயரங்களும் கொண்டது என்பதை ஏற்று மனித இயல்புகளுக்கு அதிக பட்ச சலுகைகள் அளிப்பவராக இருக்கிறார். முக்கியமாக இந்த பிரபஞ்சத்தையும் மனிதர்களையும் வருத்தங்களின்றி நேசிக்கவும், ரசிக்கவும், தெரிந்த ஒரு கலை மனத்தையே அவருடைய கதைகள் வெளிப்படுத்துகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட அவரது சிறுகதைகளில் பல்வேறு மனநிலைகள் வெளிப்பட்டாலும் சில கதைகளின் தன்மைகளை சற்று விரிவாகப் பார்க்கும் போது அவருடைய கதைகளின் வசீகரம் அதிகம் புலப்படும்.

ஒரு உணர்ச்சி கலவாத அன்புப் பிரவாகம் அழகிரிசாமியின் எழுத்தைக் கட்டமைக்கிறது என்பதற்கு அவருடைய குமாரபுரம் ஸ்டேஷன் கதை சிறப்பான சாட்சியமாக இருக்கிறது. கோவில் பட்டியிலிருந்து 7வது மைலில் உள்ள குமாரபுரம் அரை மைல் சுற்றளவுக்கு எந்த ஊரும் இல்லாத ஒரு காட்டு ஸ்டேஷன். கிராமவாசிகள் எப்போதாவது வந்து போவார்கள். புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கு பால்ய நண்பரான சுப்புராம ஐயர் தன் நண்பரைக் காண குமாரபுரம் வருகிறார். ஸ்டேஷனின் அமானுஷ்யத் தோற்றம் சந்தோஷத்தையும் தனிமையையும் ஒருசேர அவருக்கு அளிக்கிறது நண்பரின் வீட்டில் சிறிது நேரம் செலவழித்து விட்டு ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வருகிறார் குளிர்ந்த காற்றும் மலர் மணமும் சூழ ஸ்டேஷன் பெஞ்சில் உட்கார்ந்து புத்தகம் படிப்பது சுகமாக இருக்கிறது. யாரும் வராத அந்த ஸ்டேஷனை எதற்குக்கட்டியிருக்கிறார்கள் என்று அவருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நிலத்தில் வேலை செய்பவர்கள் குடி தண்ணீர் பிடிப்பதற்கு மண் கலயங்களோடு அங்கு தினமும் வருவதை ஸ்டேஷன் மாஸ்டர் குறிப்பிடுகிறார். ஒரு காரியத்திற்கென்று உண்டாக்கப்பட்டது மற்றொரு காரியத்திற்கு பிரயோஜனப்படுவது உலக வழக்கமாகத்தானே இருக்கிறது. ஸ்டேஷன் மாஸ்டருக்கு அந்தக் கல் கட்டிடத்தின் மீது அவ்வளவு பாசம். எந்த விஷயத்தையும் பயன்பாட்டு நோக்கில் பார்ப்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை

மறுநாள் கோவில்பட்டி சந்தை கூடும் நாள் என்பதால் பிரயாணிகளின் நடமாட்டம் கொஞ்சம் இருக்கிறது சுப்பராம ஐயர் வழக்கம் போல் பெஞ்சில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார் கறுப்பு மண் பாலைவனத்திலிருந்து வீசும் நறுமணமும், இளங்காற்றும் அவருக்கு ஆச்சரியமாக இருக்கின்றன மண்ணை நம்பி வாழும் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் அந்த கரிசல் மண்ணிலிருந்தே மணமும், உயிர்ப்பும் பெறுவதை ஒட்டி அவர் சிந்தனை ஓடிக் கொண்டிருக்கிறது நாட்டுப்புறவாசிகளின் சுபாவமான உரத்த சம்பாஷணையும அவர்

கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது ஒரு மணிக்கு முன்னதாகவே வந்து காத்துக் கொண்டிருக்கும் சூதுவாதில்லாத ஜனங்களிடத்தும், மண்ணிலும், புல்லிலும், புல் நடுவே பூத்துக் குலுங்கும் காட்டு மலர்களிலும், சாம்பல் நிற கற்றாழைகளிலும் அவருக்கு அன்பும் அனுதாபமும் பிறக்கின்றன அவரும் அந்த ரயிலில் ஊருக்குத் திரும்ப வேண்டியவராக இருப்பதால் அவருடைய உணர்வுகள் இன்னும் அழுத்தம் பெறுகின்றன. கிராமவாசிகளின் பேச்சில் உண்மையோடு சுவாரஸ்யமும் கலந்திருப்பது அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை ஆதியோடந்தமாகத் தெரிந்து கொள்ளும் ஆவலை இவரிடம் உருவாக்குகிறது

அவருடைய பெட்டியில் நான்கு சிறுவர்களும் ஒரு பருத்த ஆகிருதி படைத்த ஒருவரும் ஒரு அம்மாளும் இருக்கிறார்கள். சிறுவர்களுக்கு எல்லாம் ஆனந்தமாக இருக்கிறது சுப்பராம ஐயரின் தோற்றம் அவர்களுடைய பள்ளிக்கு வரும் இன்ஸ்பெக்டர் போன்று அவர்களிடம் மரியாதையையும், பயத்தையும் உண்டு பண்ணுகிறது இடைசெவல் கிராமத்துப் பள்ளியிலிருந்து கோவில்பட்டியில உள்ள உயிர்நிலைப் பள்ளியில் சேர்வதற்கான தயாரிப்புடன் அவர்களை அழைத்துக் கொண்டு கிராமப்பெரியவர் உடன் வருகிறார். சுப்பராம ஐயர் மௌனமாக அந்தப் பெட்டியில் நடக்கும் உரையாடலைக் கவனித்துக் கொண்டு வருகிறார். திருநெல்வேலியில் உள்ள ஒரு ஹோட்டல் சொந்தக்காரரான அந்தப் பருதத மனிதர் சிறுவர்களுடைய அறிவுத்திறனைச் சோதிக்கிற மாதிரி கேள்விகள் கேட்டு கொண்டு வருவது பெரியவருக்குச் சந்தோஷமாகவும் சுப்பராம ஐயருக்கு சுவாரஸ்யமாகவும் இருக்கிறது. அவர்களுடைய உரையாடலில் தென்படும் ஒரு ஒளிவுமறைவற்ற இயல்பான நெருக்கம் அவரை மேலும் ஈடுபாடு கொள்ளச் செய்கிறது அவருடையை கையில் உள்ள டால்ஸ்டாயின் 'அன்னாகரீனா' புத்தகத்தைப் பார்த்துவிட்ட சிறுவர்கள் 'டோல்ஸ்டோய்' என்று உச்சரிக்கிறார்கள். உச்சரிப்பு சொல்லிக் கொடுக்காத வரை அவர் டோல்ஸ்டோய் தானே பிறகு தங்கள் ஸ்கூலில் ஹெட்மாஸ்டர் தங்களுக்காக ஆங்கிலத்தில் தயாரித்துக் கொடுத்த பசுவைப் பற்றிய வியாசம், நரி திராட்சை கதை, ஓநாய் ஆட்டுக்குட்டி கதை, நண்பனுக்குக் கடிதம் என்று இவை பற்றியெல்லாம் அந்த ஹோட்டல்காரரிடம் சொல்லி அவர் நம்பிக்கையைப் பெறுகிறார்கள் அந்த ஆசிரியர் தகப்பன் போல பையன்களிடம் பிரியம் காட்டியதைப் பெரியவர் நினைவுகூர்கிறார்.

கோவில்பட்டி வந்ததும் இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்த ஒரு போர்ட்டர் அவர்களை வரவேற்று வீட்டுக்கு அழைத்துப் போகிறான். அவனுடன் தங்கிப் பிறகு பள்ளிக்கடம் போய் பரிட்சைகளை

வெற்றிகரமாக முடித்து தலைமையாசிரியர் அறைக்குள் நுழையும்போது சிறுவர்களுக்கு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது. குமாரபுரம் ஸ்டேஷனிலிருந்து டால்ஸ்டாய் புத்தகமும் கையுமாக அவர்களோடு பயணம் செய்த சுப்பராம ஐயர்தான் அவர். கேள்விகளெல்லாம் கஷ்டமாக இருந்ததா என்ற அவர் கேள்வி சிறுவர்களுக்கு அன்புக்குரலாக ஒலிக்கிறது. எல்லோருக்கும் விடை கொடுத்தனுப்பி மீண்டும் குமாரபுரம் ஸ்டேஷனை சுப்பராம ஐயர் நினைவுகூர்வதாக கதை முடிகிறது ஒரு மென்மையான பிரவாகம் பிரவகித்துச் செல்வதுபோல் கதை முழுவதும் ஒரு வெகுளித்தனமான சந்தோஷமும் அமைதியும் விரவிக்கிடக்கின்றன.

இதேபோல் 'ஞாபகார்த்தம்' கதையில் காதலுக்காக ஏங்கித் தவிக்கும் இரு உள்ளங்களின் பரிதவிப்பு நுட்பமான வார்த்தைகளில் வடிவம் பெற்றிருக்கிறது. கோவிந்தராஜனுக்கும் பக்கத்துவீட்டுப்பெண் நிருபமாவுக்கும் அன்பு மெலிதாகத் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது அதை அவர்கள் வெளிப்படையாகப் பேசிக்கொள்ளாவிட்டாலும் அவர்களது உடல்மொழி அவர்களுக்கு அதை உணர்த்திவிடுகிறது. இருந்தாலும் நேரிடையாகப் பேசி அதை உறுதி செய்து கொள்ளாதவரை அவர்களுக்கு நிம்மதி இல்லை இருவரும் அதற்கான சந்தர்ப்பத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது சிறுசிறு விஷயத்தின் பொருட்டு அவர்கள் சந்திக்கும் தருணங்களிளெல்லாம் அவர்களை பயமும், தயக்கமும் ஆட்கொள்கின்றன. ஒருமுறை அவன் கொடுத்தனுப்பிய புத்தகத்துக்குள் தான் தைத்த கைக்குட்டையை வைத்து அனுப்புகிறாள். அதை அவன் கவனிக்கத் தவறிவிடுகிறான் அவள் ஒருமுறை ஊருக்குப் போவதற்காக பை கேட்டு வரும்போது அதில் அன்று பறித்த மலர்களைப் போட்டு அனுப்புகிறான். கொஞ்சம் நம்பிக்கையுடன் அவள் திரும்பிவரக் காத்திருக்கிறான். அவள் ஊரிலிருந்து வந்ததும் திருப்பித் தரும் பையில் அவளுடைய கடிதம் இருக்கிறது. அதில் அவள் ஏற்கனவே அனுப்பியிருந்த கைக்குட்டையைப் பற்றி குறிப்பிடுகிறாள். கைக்குட்டையை எங்கு தேடியும் அவனுக்கு அது கிடைக்கவில்லை. ஆனால் இனி அவனுக்கு ஞாபகார்த்தப் பொருள்கள் தேவையில்லை. அவனுக்கு ஞாபகார்த்தமாக அவளே பிரசன்னமாகிறாள் அவர்களது அன்பு உறுதிப்படுகிறது. தங்களது காதலை நேரடியாக சொல்லத் தவித்துப் பூடகமாக உணர்த்தும் குறிப்புகளும் எட்டாமல் போய் எதிர்பாராத ஒரு தருணத்தில் மனம் திறந்து கொள்வதை மென்மையாக சொல்லிச் செல்கிறது கதை பரிதவிப்பின் நுண்ணிய இழைகளை அதன் சிறுசிறு கூறுகளில் விவரித்துச் செல்கிறது கதை. கதை முழுவதும் ஒருவிதமான குறுகுறுபபுத் தன்மையும் மெல்லிய குதூகலமும் விரவி நிற்கின்றன. அழகிரிசாமி பெரும்பாலும் தம்முடைய கதைகளி

சம்பவங்களை அடுக்கிச் செல்லாமல் எளிதில் வகைப்படுத்த முடியாத மன உணர்வுகளுக்கும், சிக்கல்களுக்கும் அதிக இடம் அளிப்பதால் அவர் கதைகள் அதிக நெகிழ்வுத் தன்மை கொண்டவைகளாக இருக்கின்றன.

முக்கியமற்று தனித்துவம் இழந்த உதிரி மனிதர்களே பெரும்பாலும் அவர் கதைகளில் இடம் பெறுகின்றனர் 'இருவர் கண்ட ஒரே கனவு' கதையில், ஏழைச்சிறுவர்கள் இருவர் கண்ட ஒரு கனவின் ஊடாக அறியப்படாத துயரத்தின் அவலங்கள் கவனம் கொள்கின்றன மாட்டுத் தொழுவத்தையே வீடாகக் கொண்டு கூலி வேலை செய்யும் ஏழை விதவையான வெள்ளையம்மாள் உடல் நலமில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கிறாள் அவளிடம் உடுத்திக்கொள்ள உடையும் இல்லை சாக்கை சுற்றிக்கொண்டு படுக்கையில் கிடக்கிறாள். அவளுடைய ஆறுவயதும் ஐந்து வயதும் ஆன இரண்டு குழந்தைகள் பசியால் அழுதபடி இருக்கிறார்கள் பக்கத்தில் உள்ள வேலையாள் குழந்தைகளிடம் இரக்கப்பட்டு அவர்களுக்குக் குடிப்பதற்குக் கஞ்சி கொடுக்கிறான். மற்றவர்களிடம் கஞ்சி வாங்கிக் குடிக்கக் கூடாது என்று அம்மா சொல்லியிருந்ததால் பெரியவன் சிறியவனுடன் சண்டையிட்டதில் கஞ்சி கீழே கொட்டி விடுகிறது. இருவரும் அழுதபடி அம்மாவிடம் முறையிட வருகிறார்கள் அதற்குள் அம்மா இறந்து விட்டிருக்கிறாள் அம்மா இறந்தது தெரியாமல் அம்மாவிடம் செத்துப் போகாதே என்று சிறுவர்கள் புலம்புகிறார்கள் ஆனால் வெள்ளையம்மாளின் பிணம் எடுக்கப்பட்டு தகனம் செய்யப்படுகிறது பிணத்தின்மீது போர்த்துவதற்கு ஒரு வெள்ளைச்சேலை தர்மமாகக் கிடைக்கிறது அம்மா இறந்ததற்காக அழுது கொண்டிருந்தாலும் அமமாவை புதுச்சேலையில் பார்ப்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதுபோன்ற ஒரு சேலை தங்களுக்குக் கிடைக்காதா என்று அவர்கள் ஏங்குகிறார்கள் அன்றிரவு அவர்கள் இருவருக்கும் அம்மா புதுச்சேலையை போர்த்திக்கொள்ள தந்துவிட்டு மறைந்து விடுவதாக கனவு வருகிறது உருக்கம் நிறைந்த இந்தக் கதை சிறிதும் உணர்ச்சிக் கலப்பின்றி ஒரு கொடிய யதார்த்தத்தைச் சலனமின்றி முன் நிறுத்துகிறது கலை குறிததும் யதார்த்தம் குறித்தும் ஒரு மேம்பட்ட பார்வைக்கு அழகிரிசாமியின் இந்தக்கதை ஒரு சிறப்பான உதாரணமாகும்.

அதேபோல் 'காற்று' சிறுகதை புகைசூழ்ந்த ஒரு சிறு அறையில்வாழ்ந்து கொண்டு திறந்த வெளிக்காகவும காற்றுக்காகவும் ஏங்கும் ஒரு சிறுபெண்ணில் பார்வையில் சொல்லப்படுகிறது நூறு வீடுகள் கொண்ட தெருவில் ஒரே ஒரு வீட்டில்தான் திண்ணை இருக்கிறது அங்கு வந்து விளையாடுவது என்றால் அந்தத் தெருக்குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கிறது ஆனால் குழந்தைகளின் கூச்சலும்,

இரைச்சலும் வீட்டுக்காரருக்குப் பிடிப்பதில்லை அந்தக் குழந்தைகள் தங்களை மறந்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு தருணத்தில் அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து சில குழந்தைகளைக் கண்டபடி அடித்து விரட்டுகிறார் அடிபட்ட குழந்தை கற்பகம் அழுதுகொண்டே வீட்டுக்கு வருகிறாள். வீட்டைவிட்டு வெளியே போய் அடி வாங்கி வந்ததற்காக அம்மா அவளை மேலும் திட்டுகிறாள். வெளியேயும் போக முடியாமல் ஒரே அறை கொண்ட வீட்டில் புகைக்கு நடுவே அவளுக்கு மூச்சுத் திணறுகிறது. அப்பாவிடம் திண்ணை உள்ள வீட்டுக்குப் போய்விடலாம் என்று கெஞ்சுகிறாள். 48 ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைத் தொழிலாளி என்ன செய்ய முடியும்? யாருக்கும் சொந்தமில்லாத தெருவுக்குக்கூட அவள் போய் விளையாட முடியவில்லை. அவ்வப் போது தெரு வாசலில் போய் கொஞ்சம் நிற்கத்தான் முடியும். அவர்கள் இதுவரை விளையாடிக் கொண்டிருந்த திண்ணை அவளுக்கு எட்டாத ஒரு நிரந்தரக் கனவாகவே மாறிவிட்டது அந்த சிறைவாசத்தால் நாளுக்கு நாள் அவள் முகத்தில் இருள் படர்ந்து உடல் மெலிதாகிப்போனது.

அதிலிருந்து மீளும் வழியை யோசித்துக் கடைசியில் அவளுடைய அப்பா அவளை பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறார் புதிதாகக் கிடைத்த விடுதலையில் திளைக்கும் குழந்தை கற்பகம் பள்ளிக்கடம் விட்டதும் வீட்டுக்கு வராமல் எங்காவது தெருவில் சுற்றித்திரியலாம் என்று ஆசைப்படுகிறாள். சில மாதங்களுக்கு முன் அப்பா அவளைச் சாந்தோம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றது நினைவுக்கு வருகிறது ஓடியாடி விளையாடுவதற்கு அங்கே கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் இடம் இருந்ததையும், குளுகுளுவென்று காற்று வீசிக்கொண்டிருந்ததையும் நினைத்துப் பார்க்கிறாள் அதுதான் வாழ்க்கைக்கு ஏற்ற லட்சிய உறைவிடம் என்று நினைக்கிறாள் அங்கே குறுக்குச் சுவர்கள் இல்லை எங்கேவிளையாடினாலும் அடிப்போரும் தடுப்போரும் இல்லை புகைக்குப் பதில் காற்றும் சுகமும் வேண்டியமட்டும் இருந்தன இந்த நினைப்புடன் ஒருநாள் சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டதும் பெரிய சாலையைக் கடந்து சாந்தோம் கடற்கரை இருக்கும் பிரதான சாலையை நோக்கி வேகமாகப் போகிறாள் வழிநெடுகப் பெரிய கட்டிடங்களும், பூக்கள் குலுங்கும் வீடுகளும், மரங்களும், ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களும் அவளை பரவசப்படுத்து கின்றன அந்த சாலை முழுவதும் அவளுக்குச் சொந்தமானதாத் தோன்றுகிறது. திடீரென எதிர்பாராத ஒரு தருணத்தில் வேகமாக வந்த லாரி ஒன்று அவளை அடித்துவிட்டுச் சென்றுவிடுகிறது. காற்றுக்காக வாழ்நாளெல்லாம் ஆசைப்பட்ட அந்தச் சிறுபெண் கடைசியில் காற்றாகவே ஆகிவிடுகிறாள்.

அந்தக் குழந்தை இறக்க நேர்வது ஒரு விபத்துதான் என்றாலும் ஏழைகளுக்கு அவர்கள் விரும்புகிற விடுதலை மரணத்தில்தான் சாத்தியப்படுகிறது என்கிற ஒரு தொனியை அழகிரிசாமி இக்கதையில் வெளிப்படுத்துகிறார். ஆனால் எதையும் நேரிடையாக உரத்துச் சொல்லாமல் ஒரு செறிவான வாழ்க்கைச் சித்திரத்தின் ஊடாகவே வாழ்வின் பரிதவிப்பு குறித்த ஒரு தீவிரமான உணர்வை அழகிரிசாமி உருவாக்கிவிடுகிறார். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது எழுத்து வாழ்வின்மீது நிராசையையோ, அவநம்பிக்கையையோ எழுப்பாமல் வாழ்க்கைக்கான மனிதனின் போராட்டம் முடிவற்றதாக இருக்கிறது என்பதான உணர்வையே எழுப்புவதாக உள்ளது இலக்கிய முதிர்ச்சியுடன் அழகிரிசாமி கையாளும் ஒருவகையான வடிவ அமைதியே இந்த உணர்வைத் தொற்றவைப்பதில் துணை நிற்கிறது. இதுவே அழகிரிசாமியின் கதைமொழியின் வசீகரத்துக்குக் காரணமாக இருக்கிறது.

மனித நடத்தைகளின் விசித்திரங்கள் குறித்த புரிதலையும் பரிவுணர்ச்சியையும் அவருடைய பல கதைகள் வெளிப்படுத்துகின்றன. அவைகளைக் குரூரமான விசாரணைகளுக்கு உட்படுத்தாமல் அவைகளுக்கும் வாழ்க்கையில் இடம் உண்டு என்பதை அங்கீகரிக்கும் மனம் அழகிரிசாமியிடம் இருக்கிறது. அவருடைய 'அழகம்மாள்' கதை இதற்கு ஒரு சிறப்பான உணாரணமாகும் கல்லூரியில் படிக்கும் கோபால் விடுமுறையில் கிராமத்தில் உள்ள தன் தாய் தந்தையைப் பார்க்க ஊருக்கு வரும்போதெல்லாம் ஒரு சிக்கலான பிரச்னையைச் சந்திக்க நேர்கிறது. அவன் வரும்வரை வயதான காலத்திலும் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வரும் அப்பாவை அனுசரணையுடன் பார்த்துக் கொள்ளும் அம்மா அழகம்மாள் அவன் ஊரில் இருக்கும் நாட்களில் அப்பாவிடம் கடுமையாக நடந்து கொள்கிறாள். இதனால் மதுரையில் பெரியப்பா வீட்டில் தங்கிப் படிக்கும் கோபால் விடுமுறையில் ஊருக்கு வருவதைத் தவிர்க்கிறான். ஒருமுறை அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் நீண்ட நாள் கழித்து ஊருக்கு வரும்போது அப்பாவும், அம்மாவும் அவனைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார்கள். அவனுக்கு ஓரளவுக்கு காரணம் புரிந்தாலும் மூவரும் வெளியில் சொல்ல முடியாத வேதனையில் தவிக்கிறார்கள். மகனின் கல்லூரிப் படிப்பு அவனுக்கு கிராமத்தில் ஒரு அந்தஸ்தை உருவாக்கி இருக்கிறது. எல்லாரும் அவனுடன் வலிய வந்து பேசுகிறார்கள். பெரிய அந்தஸ்திலுள்ள பண்ணையார் கூட அவர்களுடைய குடிசைக்கு வந்து அவருடைய மகனுடைய மேல்படிப்பு விஷயமாக அவனிடம் ஆலோசனை கேட்கிறார். இவையெல்லாம் அழகம்மாளுக்குப் பெருமிதமாக இருந்தாலும்

தன்னுடைய மகனின் புதிய அந்தஸ்துக்குச் சமதையாக இல்லாமல் தங்களுடைய வறிய நிலை குறுக்கிடுவதில் வருத்தமும் அதற்குக் காரணமான தன் கணவர் கிருஷ்ணக்கோனார் மீது வெறுப்பும் கோபமும் ஏற்படுகின்றன. மகன் உடனிருக்கும்போதெல்லாம் அதைக் குரூரமாக வெளிப்படுத்துகிறான். இரக்கப்பட்டு அவருக்கு வாழ்க்கைப்பட்டதில் இழந்துபோன தன் யௌவனம் அவளை மேலும் துன்புறுத்துகிறது. அதனால் மகன் வரும்போதெல்லாம் கணவன் கந்தலாகக் கட்டி இருந்தாலும் தான் நல்ல உடை உடுத்தி தன்னை அலங்காரமாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறாள் சுடு சொல்லைக் கேட்டுக் கேட்டு வருந்துவதைத் தவிர கிருஷ்ணகோனாருக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அவருக்கு உடலும் மனமும் தளர்ந்து விட்டது. மகன் கோபாலுக்கு அம்மாவின் மனநிலை புரிந்தும் புரியாமலும் இருக்கிறது.

ஒருநாள் இரவு அம்மா அழகம்மாள் "சேனைத் தளத்தோட - உன்னை சேர்ந்திருக்கக் கிட்டலையே" என்று உரத்த குரலில் புலம்பி அழுவதைக் கேட்கும் கோபாலுக்கு அதன் பொருள் சரியாகப் புரியாவிட்டாலும், அம்மாவுக்கு ஒரு மாறுதல் தேவை என்பதை உணர்ந்து கொள்கிறான். தன் படிப்பு முடியும் வரை அம்மாவை பெரியப்பாவின் பராமரிப்பில் சில காலம் விடுவது என்றும் அதுவரை அப்பாவை தங்கள் பாட்டியின் ஊரில் இருந்து அங்கே நிலபுலன்களை கொஞ்சகாலம் பார்த்துக் கொண்டிருக்கச் சொல்லி பிறகு வரவழைத்துக் கொள்வது என்றும் முடிவு செய்கிறான். ஏதோ ஒரு தீர்வு சாத்தியப்படும் என்ற நிச்சயமற்ற ஒரு ஆறுதலில் அன்றைய இரவை அவர்கள் கழிக்கிறார்கள்

மனித மனத்தின் விசித்திரங்களையும் அந்தரங்கங்ளையும் விமர்சித்து ஒதுக்கித் தள்ளாமல் அவைகளையும் வாழ்வின் இயல்பான ஒரு பகுதியாய் ஏற்று அவையும் உரிய மதிப்புடன் எதிர்கொள்ளப்பட வேண்டும் என்ற அழகிரிசாமியின் பார்வை ஒரு முதிர்ந்த கலை மனத்துக்கே உரியது

அதேபோல் கற்பக விருட்சம் கதையில் தற்கொலைக்குத் தயாரான ஒருவனின் மனத்தில் அதற்குக் காரணமாக இருந்த ஒரு விஷயம் ஒரு சிறிய சிந்தனைப் பொறியில் வாழ்வின் ஆதாரமாக மாறிவிடுகிறது எஸ்.எஸ் எல் சி பரிட்சையில் பெயிலான ஸ்ரீனிவாசன் தன்னைக் கற்பக விருட்சமாக நம்பியிருந்த அப்பாவையும், அம்மாவையும், வயதுவந்த தங்கையையும் எதிர்கொள்ளத் துணிவில்லாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுடன் மாம்பலம் ஸ்டேஷனுக்கு வருகிறான. அவனிடம் அடிக்கடி வந்து சந்தேகங்கள் கேட்டுக்கொண்ட அழகும், கர்வமும்

கொண்ட எதிர்வீட்டுப் பெண் சுகன்யா பாஸானது வேறு அவன் மனத்தை அவமானத்தால் அலைக்கழித்துக் கொண்டிருந்தது. மாலைவரை காத்திருந்து இருட்டானதும் ரயிலில் பாய்ந்து உயிர்விடத் தயாராகிறான். ஸ்டேஷனைத் தாண்டி வந்து தண்டவாளத்தின் ஓரமாக நடந்து செல்லும்போது தற்கொலைக்குப் பின் என்ன ஆகும் என்று யோசிக்க ஆரம்பிக்கிறான் அப்பா அம்மா தங்கை மூவரும் கதறுவார்கள். யாராவது ஒருவேளை தற்கொலை கூட செய்து கொள்ளலாம் அந்தக்கர்வம் பிடித்த பெண் சுகன்யா கவலைகூட படமாட்டாள். அப்படிப்பட்ட ஒரு பெண்ணிடம் அவமானப்படுகிறோம் என்று தான் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றுகிறது உண்மையில் அவனுடைய தற்கொலை எண்ணத்துக்கு அதுதானே பிரதான காரணமாக அவனுக்கு தோன்றியது தகுதியற்ற அந்தப் பெண்ணுக்காகத் தன்னுடைய பெற்றோரை ஏன் தவிக்கவிட வேண்டும் என்று எண்ணம் தோன்றியதும் அவன் தற்கொலை முடிவைக் கைவிட்டு வீடு திரும்புகிறான்

அதற்குள் அவனைக் காணாமல் அவன் அப்பா, அம்மா, தங்கையெல்லாம் தவித்துப்போகிறார்கள் அப்பா அவனைத் தேடி எல்லா இடங்களிலும் அலைகிறாா அவன் பாஸாகாவிட்டாலும் பரவாயில்லை வீடு திருமபினால்போதும் என்று எல்லோருக்கும் தோன்றுகிறது சுகன்யாவும் அடிக்கடி வநது விசாரித்துவிட்டுப் போகிறாள் சாப்பிடப் பிடிக்காமல வீட்டில் அழுதுகொண்டு படுத்திருக்கிறாள அப்போது சீனு வநது விடுகிறான அழுகையுடன் எல்லோருக்கும் நிம்மதியும் பிறக்கிறது. சுகன்யா சீனு எனறு அழைததுக் கொண்டே அவனைக் கண்ணீருடன் எதிர்கொளகிறாள் கருகிப்போன ஒரு கற்பகத்துக்கு மாற்றாக இன்னொரு கற்பகம் அங்கே துளிர்விடுகிறது வெறுப்பினால் அப்போது அவன் சாகவிலலை இனி அன்பினால் சாகமாட்டேன் என அவன் உறுதி கொள்கிறான்

விசித்திரமான மனித நிலைமைகள் ஒரு சிறு அசைவில்கூட மாறக்கூடியவை என்பதை இக்கதை சொல்லிச் செல்கிறது. கற்பிதங்களால் வாழ்வின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்திவிட முடியாது என்பதே அழகிரிசாமியின் நம்பிக்கையாக இருக்கிறது

மனித இயல்புகளையும், பலகீனங்களையும் ஒரு அறவியல் பாாவையில் ஆராய்ந்து கொண்டிருக்காமல் அவைகளை அவற்றின் இயல்புத் தன்மையுடன் மதிக்கவும், அங்கீகரிக்கவும் ஆன மனநிலை யிலேயே அவருடைய கதைகள் வெளிப்படுகின்றன. அவருடைய 'முருங்கைமர மோகினி' கதையில் மற்றவர் பொருளுக்கு ஆசைப்படும்

மனித இயல்புக்கும் சுய கௌரவத்துக்கும் இடையே நடைபெறும் போராட்டம் சிறப்பாக வெளிப்படுகிறது பலகாரக்கடை வைத்து கறார் ஜீவனம் நடத்திவரும் நல்லபெருமாள் பிள்ளை ஊரின் வடபுறம் உள்ள ஈரணக்கவுண்டர் தோட்டத்துக்குளத்தில் இருபத்து ஐந்து வருட காலமாக தினமும் காலையில் குளித்து வருபவர் திடீரென குளிர் ஜுரம் வந்து இரண்டு மாத காலம் அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டது அநத இடைக்காலத்தில் அவருடைய பலகார வியாபாரமும் கொஞ்சம படுத்துவிட்டது அவருடைய மனைவியால் அந்த அளவுக்கு அவரையும், வியாபாரத்தையும் கவனிக்க முடியவில்லை அதற்குள் கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து விட்டது அதனால் வியாபாரத்திலும் தினசரி சாப்பாட்டிலும் அதிக சிக்கனத்தைக் கடைபபிடிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது

இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு வழக்கம்போல் காலையில் ஈரணகவுண்டர் தோட்டத்துக் கிணற்றில் குளிக்கப் போகும்போது சுற்றிலும் ஏற்பட்டிருந்த சில மாறுதல்கள் அவர் கண்ணில் பட்டன மிளகாய்ச் செடிகளும், அவரைச் செடிகளும் நன்கு காய்த்திருந்தன தெனனை மரங்களில் இளநீர்க்குலைகள் தொங்கின அவரைக் கொடிகளுக்கு நடுவே ஒரு சிறு முருங்கை மரத்தில் ஐந்தாறு காய்கள் தொங்கின காய்களுக்குப் பாதுகாப்பாகத் தென்னை மரத்தில் முள் கம்பியும் முருங்கை மரத்தில் செருப்பையும் தொங்கவிட்டு இயனறவரை காவல் போட்டிருநதது நல்ல பெருமாள் பிள்ளைக்கு அந்த முருங்கைக காய்களின்மீது ஆசை பிறந்தது காவலைப் பார்த்ததும் அவைகளை எடுத்துவிட வேண்டும் எனற ஆசை இன்னும் தீவிரப்பட்டது. முருங்கைக் காய்கள் இருந்தால் ஒரு மூன்று நாள் சாப்பாட்டுச் செலவு மிச்சம்தானே என்று அவருக்குத் தோன்றியது

முருங்கை மரத்தில் கட்டப்பட்டிருந்த செருப்பைப் பாாதது அவர் மானத்துக்குக் கொஞ்சம் பயந்தாலும் ஒருநாள் துணிந்து அதிகாலையில் போய் முருங்கைகளைப் பறிததுவிட்டார் செருப்பையும் சேர்த்து இழுக்கும்போது முருங்கைக்கிளை ஒடிந்துவிட்டது அவசர அவசரமாக ஓடிவரும்போது வேஷ்டியெல்லாம் சேறாகி ஒரு வழியாகக் காய்களுடன் வீடு வந்து சேர்ந்தார் காய்கறிக் கூடைக்காரியிடம் காய் வாங்கியதாகச சொல்லி சமைக்கச் சொல்லிவிட்டு கவுண்டர் கண்டுபிடித்து விடுவாரோ என்ற பயத்துடனேயே கடைக்குச் சென்றுவிட்டார் மததியானம் சாப்பாட்டுக்கு இலையின்முன் உட்கார்நதபோது அவர் மனைவி முருங்கைக்காய் சாம்பாரை சாதத்தில் விட வந்தாள். ஏனோ அவர் மனம் அதைச் சாப்பிட மறுத்துவிட்டது ஏதோ சமாதானம் சொல்லிக் கீரையை மட்டும் சாப்பிட ஆரம்பித்துவிட்டார். ஒன்றும் புரியாத அவர் மனைவி

அவர் 'ஜலதோஷத்துக்கென்று மிளகு ரசம் கொண்டு வர உள்ளே போகிறாள் என்கிற குறிப்புடன் கதை முடிகிறது. யதார்த்தத்தை மனச்சாய்வின்றி அழகிரிசாமி அணுகும் விதமும், மனித பலகீனங்களை ஒரு பரந்த புரிதலுடன் அவர் சித்தரிக்கும் விதமும் சிறுசிறு மனச் சலனங்கள் குறித்தும் அவர் செலுத்தும் கவனமும், அக்கறையும் அவருடைய சித்தரிப்புக்கு ஒரு உயிரோட்டமான நம்பகத் தன்மையை அளிக்கின்றன

அவருடைய 'சுயரூபம்' கதையிலும் இதேபோன்ற ஒரு மனநிலையே வெளிப்படுகிறது. வேப்பங்குளம் கிராமத்தில் பழம் பெருமையைத் தவிர வேறு எதுவும் மிஞ்சாது வாழ்ந்து நொடித்துப்போன ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் மாடசாமித் தேவர். தாத்தா வீரப்பதேவரின் வீர தீரத்தையும், கோபித்துக் கொண்டு தங்கை வீட்டிலும் கை நனைக்காத தன்மானத்தையும் பறைசாற்றிக் கொள்வதைத் தவிர அவருக்குச் சொல்லிக் கொள்வதற்கு வேறொன்றுமில்லை ஒரு நாள் காலையில் கிணற்றடியில் பல் விளக்கிக் கொண்டிருக்கும்போது முத்தையாத் தேவர் என்ற ஒருவர் திடீரென்று பிரசன்னமாகி மாடசாமித் தேவரிடம் தான் கொடுத்த பாக்கிக்காக அவரை வசவு வார்த்தைகளால் பேசுகிறார் கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த ஒரு வேற்று ஜாதிக்காரின் முன்னிலையில் இப்படி அவமானப்படுவது பொறுக்க முடியாது ஒப்புக்கு வீராவேசமாகப் பேசிக்கடன் பாக்கியை மதியம் தந்து விடுவதாகக் கூறுகிறார். அவை வெற்று வாாத்தைகள் என்று முத்தையாத் தேவருக்குத் தெரியாதா என்ன?

பிறகு மாடசாமித் தேவர் டிரங்க்ரோடில் உள்ள முருகேசம் பிள்ளையின் பலகாரக்கடைக்குச் செல்கிறார் கோவில்பட்டிக்கும், கயத்தாறுக்கும் இடையே பிரியும் சாலையில் பஸ்கள் நிற்கும் இடத்தில் அமைந்த பலகாரக்கடையில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள் வந்து சாப்பிட்டுவிட்டுப போவார்கள் இரண்டு நாளாக சரியாகச் சாப்பிடாத மாடசாமித்தேவர் பலகாரக்கடை முருகேசம் பிள்ளை இரக்கப்பட்டு ஏதாவது தருவார் என்று அந்தக் கடையிலேயே பழியாகக் கிடக்கிறார் இந்த தரித்திரம் வந்து விட்டது என்று முருகேசம் பிள்ளையும் இந்த அற்பப் பயல் கொஞ்சம் கூட இரக்கப்பட மாட்டேன் என்கிறானே என்று மாடசாமிததேவரும் மனசுக்குள் கருவிக் கொண்டாலும் வெளிப்படையாக அதைச் சொல்லாமல் ஒப்புக்கு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். முருகேசம் பிள்ளையிடம் சுமுக உறவு ஏற்படுத்திக் கொள்ள மாடசாமித் தேவர் செய்யும் முயற்சிகள் யாவும் வீணாகின்றன. வாய்திறந்து இட்டிலி கொடு என்று கேட்டுவிட்டு அதை அவர் மறுத்துவிட்டால் என்னாவது என்ற பயத்தில் மாடசாமித்தேவர் கேட்பதைத் தள்ளிப் போட்டுக் கொண்டபடி இருக்கிறார் மதியம் முடிந்து இரவும் வந்து கடையை

மூடிவிட்டு மிஞ்சியவைகளை எடுத்துக் கொண்டு திரும்பும் நேரமும் வந்தபோது மாடசாமித்தேவர் வெட்கத்தை விட்டு மிஞ்சிய இட்டிலிகளைத் தரும்படி கேட்கிறார் இந்தத் தரித்திரம் வந்ததால் வியாபாரம் டல்லானது என்ற எரிச்சலில் இருக்கும் முருகேசம் பிள்ளை மேலும் கோபமடைந்து பிடிவாதமாகத் தர மறுக்கிறார். வழக்கம்போல் மாடசாமித் தேவர் தாத்தாவின் பிரதாபங்களை எடுத்துவிடும்போது முருகேசம்பிள்ளை அந்த வெற்றுப்பேச்சை ஏளனம் செய்கிறார் இது மாடசாமித் தேவரின் கோபத்தைத் தூண்டிவிட இருவரும் கைகலப்பில் இறங்குகிறார்கள். கடைசியில் அடிதடியும் மன்னிப்புமாகச் சோர்வுற்ற மாடசாமித் தேவரிடம் 'இந்தா தின்னுத் தொலை' என்று முருகேசம்பிள்ளை இட்டிலிகளைக் கொடுக்க வந்தபோது இந்தப் பயலிடம் பிச்சை வாங்குவதா என்று மாடசாமித் தேவர் மீண்டும் அவரைத் தாக்கி சோர்வுற்று விடுகிறார். ஒரு வழியாகச் சமாளித்து வீடு திரும்பும்போது இந்தக கடும்பசியிலும் அந்த அற்பப் பயல் யாசகமாகக் கொடுத்த இட்டிலியைச் சாப்பிட்டுத் தன் தன்மானத்தை இழக்கவில்லை என்பது அவருக்கு ஒரு அற்ப சந்தோஷத்தை அளிக்கிறது.

ஒரு கொடுமையான வாழ்க்கையின் இடையே மனித உணர்ச்சிகள் பல்வேறுவிதமாகச் சிக்கித் தவிப்பதை மிகுந்த பரிவுடன் அழகிரிசாமி அணுகுவதை இதுபோன்று பல கதைகளில் பார்க்க முடிகிறது.

இதே போல் வறுமையின் கோரப் பிடியில் சிக்கும் மனிதர்கள் எத்தகைய அசாதரண நிலைக்கும் துணிந்து விடுவதை 'அக்னி கவசம்' கதை சிறப்பாகச் சொல்கிறது தலைவன்குறிசசி கிராமத்தில் உள்ள முத்துமாரி அம்மன் அங்கிருநத கிராமங்களுக்கு எல்லாம் வெறும் தெய்வம் மட்டுமில்லாமல் சகல நோய்களையும் தீர்க்கும் மருந்தாக இருந்தாள். சகல சக்தி வாய்ந்த அந்த அம்மனுடைய கோபத்துக்கு எந்தச் சந்தர்ப்பதிலும் ஆளாகக் கூடாது என்று கிராம மக்கள் பயபக்தியுடன் வருடா வருடம் பொங்கலிட்டுப் படையல் செய்து வந்தார்கள். ஆடு வெட்டு, புதுப்பானைப் பொங்கல், வில்லடி, கரக ஆட்டம், பம்பை மேளம்,சேற்றாண்டி வேஷம், முளைப்பாரி, மஞ்சள் நீராட்டம் இப்படி விமரிசையாக ஆண்டாண்டுக் காலமாக நடைபெற்று வந்த ஊர்ச் சாத்திரை என்றும் கொடை என்றும் பொங்கல் என்றும் சொல்கிற திருவிழா அந்த வருடம் நடைபெறவில்லை அதற்குக் காரணம் தெற்குத் தெருவாசி களுக்கும் வடக்குத் தெருவாசிகளுக்கும் ஒரு பெண் விஷயமாக சண்டை மூண்டு அவர்கள் இரண்டு கோஷ்டியாகி அடித்துக் கொண்டதுதான் இரண்டு குடும்பங்களுக்குள் நடந்த ஒரு சண்டை ஊரை இரண்டாக்கி வெட்டு, குத்து கொலை, தீ வைப்பு, சூறையாடல் என விஸ்வரூபம் எடுத்து

பெரிய போலீஸ் கேஸாகி, கோர்ட் வரை போனது. ஊர் கூடித்தான் பொங்கல் இடவேண்டும் என்பதால் பொங்கல் நின்றுவிட்டது. நித்தியப்பூஜைக்கும் தடுமாற்றம் ஏற்பட்டு கோவில் கதவு அடைக்கப்படும் நிலை வந்து விட்டது. பூசாரியின் குடும்பம் வறுமையில் தவித்தது மட்டுமின்றி அவர் ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர் என்ற வதந்திகளால் பூசாரி உயிருக்குப்பயந்து ஊரை விட்டே ஓட நேர்ந்தது. பூசாரியின் மனைவியும் குழந்தைகளும்தான் அந்தத் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி வந்தது.

அதற்குள் ஊரில் பருவ மழை நின்று விட்டது வைசூரி, பட்டினிச் சாவுகள் என கிராமம் சின்னா பின்னமாகிப் போனது.இதில் சம்பந்தப்படாத பக்கத்துக் கிராமங்களும் பாதிப்புக்கு உள்ளாயின. திருவிழாவை நாங்களாவது நடத்துகிறோம் எனப் பக்கத்து கிராமத்தார்கள் முன் வந்த போது தலைவன்குறிச்சி கிராமப் பெரியவர்கள் தன்மானப் பிரச்சினை என்று அதை ஏற்கவில்லை. ஆனால் விவசாயம் தடைபட்டு வேலைகள் போய் பசி பட்டினி எனப் பஞ்சம் தலைவிரித்தாடிய போது கிராம மக்கள் ஒன்று சேர்ந்துத் திருவிழா நடத்தி அம்மனின் கோபத்தைத் தணித்தால் ஒழிய விமோச்சனமில்லை என்று முடிவு செய்து திருவிழாவுக்கு நாள் குறித்தார்கள். கோவிலை வெள்ளையடிப்பதற்காகத் திறந்து பார்த்தபோது அம்மனின் சிவப்புச் சிற்றாடையைக் காணாமல் அதிர்ச்சி அடைந்தார்கள் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும் துணிச்சல் அங்கு யாருக்கும் வராது என்ற நம்பிக்கையுடன் அம்மன் பார்த்துக் கொள்வாள் என்று திருவிழாவுக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இறங்கினார்கள் பூசாரி ஆறுமுக பண்டாரத்தின் மனைவிதான் ஒரு நாள் நள்ளிரவில் மகனைவிட்டுக் கோவிலை திறக்கச் சொல்லி அம்மனின் சேலையை எடுத்து வந்து மானத்தைக் காப்பாற்றிக் கொண்டவள் அந்த இருவரைத் தவிர அந்த ஊர் சலவைக்காரி காளிக்கும் இந்த விஷயம் மறைமுகமாகத் தெரிந்தது. இந்த விஷயத்தை அப்படியே வெளியே சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள் என்பதால் பொங்கல் தினத்தன்று ஆவேசம் வந்து ஆடும் போது மாரியம்மனாக மாறி உண்மையைக் கக்கிவிடுவது என்று முடிவு செய்துகொண்டாள்.

திருவிழா கோலாகலமாக விமரிசைகளோடு கொண்டாடப்பட்டது ஆட்டம் பாட்டம் சாமியாடல் என அமளிப்பட்டுக் கொண்டிருந்த போது வருஷம் தோறும் ஆடும் காளியும் விரித்த தலையோடு குரவையிட்டுக் கொண்டு சாமியாடத் தொடங்குகிறாள். செய்த குற்றத்தை மன்னித்து ஊரைக் காப்பாற்றும்படி எல்லோரும் இறைஞ்சும் சமயத்தில் காளி கூட்டத்தில் இருந்த பூசாரி மனைவியின் புடவையைக் கையில் பிடித்துக் கொண்டு 'என் கிட்டே திருடி நீ தப்பவா. என் சேலையைக் கட்டி அசிங்கம்

பண்ணின ஒன்னை இங்கேயே பலி வாங்குவேன்' என்று ஓலமிட்டவுடன் ஊரே ஆவேசமாகி பூசாரியின் மனைவியை தாக்கப் பாய்ந்தது. மீண்டும் ஏதாவது கொலை கேஸ் என்று ஆகிவிடப் போகிறது என்று பயந்து ஊர்ப் பெரியவர்கள் அம்மனே தண்டனை கொடுப்பாள் என கூட்டத்தைச் சமாதானம் செய்கிறார்கள்.

பூசாரியின் மனைவி இனித் தப்ப முடியாது. உயிர் போனாலும் போகட்டும் என்று துணிந்து பயம் நீங்கி வலிய வந்த மாரியம்மனை சும்மா விடக்கூடாது என்று 'மாரியம்மா நீ சாமியா இல்லை குத்துக்கல்லா ஒனக்குக் காலமெல்லாம் பூசை பண்ணின என் புருஷனை காப்பாத்திக் கொடுக்க உனக்கு சக்தியில்லை. நான் புள்ளைக் குட்டிகளை வச்சிக்கிட்டு ராப்பட்டினி கெடக்கிறதைக் கண்ணாலே பார்க்கலே. கடைசியிலே ஒரு முழத்துணி கூட இல்லாமே அடிச்சிட்டே. சாமி என்னத்தைக் கட்டுவேன் சொல்லு' என்று கோபத்துடனும் ஆங்காரத்துடன் சொல்கிறாள் இவ்வளவு காலமும் அவளைச் சுட்டெரித்த வறுமைத் தீ இப்போது சாமி உட்பட அண்டியவர்களையெல்லாம் நோக்கி ஜ்வாலை வீசியது மற்றவர்களிடம் கோபாஸ்திரங்கள் எல்லாம் பாய முடியாதவாறு அவளுக்கு அந்த அக்னியே கவசமானது. யாரும் தடுக்க முடியாமல் அப்படியே குழந்தை குட்டிகளுடன் ஊரைவிட்டு ஓடிவிடுகிறாள் ஓடிப்போன பூசாரி மனைவி பக்கத்து ஊரில் கடைசியில் பூசாரியைக் கண்டு பிடிக்கிறாள் அம்மனுக்குச் செய்த அபச்சாரத்துக்குப் பரிகாரமாக பூசாரி வந்து மாரியம்மனுக்கு ஒரு செம்பட்டு சாத்திய பிறகு தான் அவர்கள் பயம் நீங்குகிறது.

கிராம மக்களின் நம்பிக்கைகள், பயங்கள், மூடத்தனங்கள், வறுமை, துணிச்சல் இவை குறித்த ஒரு செறிவான கிராமியச் சித்திரத்தை இந்தக் கதை வழங்குகிறது. சார்போ, விமர்சனமா அற்று யதார்த்தம் குறித்த கூர்மையான பார்வையுடன் தான் சார்ந்த கிராமியக் களன் மீதும் மக்கள் மீதும் ஆழ்ந்த அன்பு மேலோங்க அவர்களுடைய உணர்வுகளை இலக்கியமாகப் பதிவு செய்யும் விழைவுகளே அழகிரிசாமியின் எழுத்துக்கான ஆதாரங்களாக இருக்கின்றன என்பதை இந்தக் கதை மீண்டும் மீண்டும் உறுதி செய்கிறது

கற்பிதங்களுக்குள் ஆழ்ந்துபோகாமல் வாழ்க்கையையும் மனிதர்களையும் அதன் பலங்களுடனும் பலகீனங்களுடனும் அப்படியே எடுத்துக்கொண்டு உணர்ச்சி வசப்படாமல் ஒரு பார்வையாளன் போல் விலகி நின்று பார்க்கக்கூடிய பார்வை கொண்டிருப்பதால் பல விஷயங்களை அதற்குரிய இடத்தில் வைத்துப் பார்த்து ரசிக்க அழகிரிசாமியால் முடிகிறது. அவருடைய 'உலகம் யாருக்கு' கதை

தாமதமாகச் செல்லும் ஒரு பஸ்ஸில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் தங்களுடைய அவஸ்தை முன்னுரிமை பெறுவதை மிகவும் சாதாரணமாகச் சொல்லிச் சென்று விடுகிறது விருதுநகர் ஸ்டேஷுக்கு வந்து சென்னை ரயிலைப் பிடிக்கத் தங்கள் ஊரிலிருந்து இருவர் பஸ்ஸில் கிளம்புகிறார்கள். அவர்கள் வேலையிலிருந்து லீவு எடுத்துக்கொண்டு வந்திருப்பதால் அந்த ரயிலைப் பிடித்து உரிய நேரத்தில் சென்னை செல்லாவிட்டால் அவர்களுடைய வேலை போய் விடும். அதனால் மிகுந்தப் பதட்டத்தில் இருக்கிறார்கள். பஸ்ஸில் 29 பேரும் உட்கார்ந்து விட்டார்கள். பஸ்ஸில் ஏற்பட்ட ஏதோ ஒரு கோளாறினால் பஸ் உடனே கிளம்பவில்லை. சில பயணிகளிடமிருந்து கேலியும் கிண்டலும் வந்து விழுகின்றன. ஒரு வழியாக பஸ் புறப்பட்டு விடுகிறது ஆனால் பஸ் வழக்கத்தைவிட மெதுவாகவே செல்கிறது கேலியும் கிண்டலும் கொஞ்சம் கொஞ்சமாக பஸ் நேரத்துக்குப் போய்விடுமா என்று பயமாக மாறுகின்றன. பக்கத்தில் விழுப்புரம் செல்ல வேண்டிய பயணி தன் அதிர்ஷ்டத்தை நொந்தபடியே வருகிறார் பஸ் மெதுவாகச் செல்வது பற்றி திடீரென ஒரு பயணிக்கும் கண்டக்டருக்கும் வாக்குவாதம் முற்றி ரஸாபாசமாகிறது. உடனே கண்டக்டர் கொஞ்சதூரம் வரை தன்னுடைய வீரப் பிராதபங்களைப் பிரஸ்தாபித்துக் கொண்டு வருகிறார். டிரைவரே பொறுமை இழந்து பஸ்ஸைக் கொஞ்சம் வேகமாக ஓட்ட ஆரம்பிக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் விழுப்புரம் பயணி தான் பயணம் செய்ய நேர்ந்த அவசியத்தை விலாவாரியாகச் சொல்ல ஆரம்பிக்கவே இன்னொரு பயணி ஒவ்வொருவருக்கும் ஒரு அவசரம். ஏன் புலம்பிக் கொண்டே வருகிறீர்' என்று அவரை அடக்குகிறார் தன்னுடைய அவசரத்தைப் பற்றியும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிவிடலாம் என்று நினைத்த சென்னை நண்பர் கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொள்கிறார் ஒவ்வொருவருக்கும் பஸ் வேகமாகப் போகவில்லையே என்று ஆத்திரமாக இருக்கிறது இடையில் சாத்தூரில் கொஞ்சம் பேர் இறங்கிக் கொஞ்சம் பேர் ஏறுகிறார்கள். கணவனுடனும் பெரியம்மாளுடனும் ஏறிய ஒரு நடுத்தர வயதுப் பெண் அழுதுகொண்டே வருகிறாள். விருதுநகரில் அவளுடைய தகப்பனார் இறந்த துக்கத்துக்கு அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். நீண்ட நேரமாக பஸ்ஸுக்குக் காத்திருந்து அப்போதுதான் அவர்களுக்கு பஸ்ஸில் இடம் கிடைத்திருக்கிறது அன்று தான் பதிதாக எல்லோருக்கும் ஒரு அவசரம் வந்திருப்பதாக ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் திடீரென்று நடுக்காட்டில் ஒரு பயணி பஸ்ஸை மறித்து விருதுநகரில் செத்துப்போன ஒரு ஆளை நான் போய் அடக்கம் செய்ய வேண்டும்' என்று கண்டக்டரிடம் கெஞ்சி பஸ்ஸில் ஏறிக்கொள்கிறார். ஒவ்வொருவருக்கும் உள்ள பதட்டத்துடன் இழவு வீட்டுக்குப் போகிற கூட்டம் பஸ்ஸின் சூழ்நிலையில் மேலும் சோகத்தைக் கொண்டு வருகிறது

நாலு பர்லாங் தூரம் சென்றதும் மது இறக்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் போலீஸ்காரர்கள் இரண்டு பேர் பஸ்ஸில் மப்டி உடையில் ஏறிக்கொண்டனர். எல்லோருக்கும் இரக்கப்பட்டோ என்னவோ பஸ் டிரைவர் ராட்சத வேகத்தில் பஸ்ஸைச் செலுத்த ஆரம்பித்தார். விருதுநகர் கண்ணுக்குப் புலப்பட ஆரம்பித்ததும் சில நிமஷங்களில் தகப்பனைப் பிணமாகக் காணும் துக்கத்தில் அந்த நடுத்தர வயதுப் பெண் ஓலமிட்டு அழ ஆரம்பித்துவிட்டாள். ஒரு திருப்பத்தில் திடீரென ஒரு மதுவிலக்கு போலீஸ்காரர் வண்டியை நிறுத்திச் சோதனை இடுவதற்காக எல்லோரையும் இறங்கும்படி சொல்கிறார் பஸ்ஸில் ஏறிய இரண்டு போலீஸ்காரர்கள் இறங்க மறுக்கிறார்கள் தங்கள் உடமைகளைக் காட்டிவிட்டு ரயிலைப் பிடிக்க ஓட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கும் பயணிகள் பொறுமை இழக்கிறார்கள். இந்த சமயத்தில் ஒரு பயணி வந்து இப்படித்தான் போனவாரமும் ஆகிவிட்டது என்று கதை சொல்ல ஆரம்பிக்கிறார் மடையன் என்று அவனைத் திட்டநினைத்த சென்னை நண்பர் பஸ்ஸில் உள்ள ஒவ்வொரு பயணியையும் நினைவு கூர்ந்து உலகம் தனக்காகத்தான் இருக்கிறது என்று யார்தான் நினைக்கவில்லை என்று ஆறுதல் கொள்கிறார் தங்களுக்கே உரிய பிரத்யேகமான பதட்டத்தின் இடையிலும் வெவ்வேறு மனித இயல்புகள் பலவிதமாக வெளிப்படுவதை மிகவும் உயிரோட்டமாகச் சொல்கிறது இக்கதை

இயற்கையாகவே சங்கோஜ சுபாவம் கொண்ட அழகிரிசாமி குழந்தைகளிடம் அதிக நெருக்கத்தை உணர்கிறார் குழந்தைகளின் இயல்புகள் பற்றியும் அவைகளின் மனஉலகம் பற்றியும் அவர் தீட்டியுள்ள சித்திரங்கள் உயிரோட்டமானவை. 'அன்பளிப்பு', 'ராஜா வந்திருக்கிறார்', 'பேதமை' ஆகிய கதைகளில் குழந்தை உலகத்தின் விளையாட்டுத் தன்மைகளும் வெகுளித்தனங்களும் சிறப்பாக வெளிப்படுகின்றன

குழந்தைகளிடம் தாம் காணும் அற்புதத்தையும், அவைகளிடம் தான் கொண்டுள்ள உறவையும் அவர் பெரும்பாலும் நேரடியாகவே சொல்ல விரும்புவதால் அவருடைய பெரும்பாலான குழந்தைக் கதைகள் தன்மை மொழியிலேயே அமைகின்றன. 'அன்பளிப்பு' கதை இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாக இருக்கிறது இக்கதையில் பக்கத்து வீடுகளில் உள்ள குழந்தைகளான சுந்தரராஜன், சித்ரா, பிருந்தா, சாரங்கன் ஆகியோருடன் ஆசிரியர் கொண்ட உறவே கதையாக வெளிப்படுகிறது குழந்தைகளுக்காகவென்று நாம் இயல்புக்கு மாறாக சில பாவனைகள் செய்தாலும் குழந்தைகள் அப்படி செய்வதில்லை அவை உண்மையான ஈடுபாட்டுடன் நடந்து கொள்கின்றன இரவு விழித்துவிட்டு காலை நீண்ட

நேரம் தூங்கும் ஆசிரியரைத் தூங்கு மூஞ்சி மாமா என்று அடித்து எழுப்புவது முதல் அவருடன் விளையாடுவது சண்டையிடுவது என எல்லா உரிமையும் எடுத்துக் கொள்கின்றன. ஆசிரியரும் அவர்களது அன்பை மதித்து அவர்களை நண்பர்களாக பாவிக்கிறார். அவர் தினமும் ஆபீஸிலிருந்து வரும்போது அவர்களுக்குப் புத்தகம் கொண்டு வராவிட்டால் அந்தக் குழந்தைகள் அவர் புத்தக ஷெல்பைக் கலைத்துப் போட்டு வீட்டை த்வம்சம் செய்து விடும். முதலில் பழக்கமான சுந்தரராஜன், சித்ரா இருவர்மீதும் அதிக பிரியமுள்ள அவர் டைரிகள் வாங்கி வந்து அவர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கிறார். மற்ற குழந்தைகள் இதை சகஜமாக எடுத்துக் கொண்டாலும் சாரங்கனுக்கு மனதில் ஏதோ ஒரு வருத்த உணர்ச்சி தோன்றுகிறது. அவன் ஒரு முடிவுடன் ஆசிரியரை வீட்டுக்கு அழைக்கிறான். இதற்குள் உடல் நலமில்லாது படுக்கையில் இவர் நினைவாகவே புலம்பிக் கொண்டிருக்கும் பிருந்தாவின் வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறுகிறார். சாரங்கனும் இவரை வற்புறுத்தி வீட்டுக்கு அழைக்கிறான். ஏற்கனவே அவர் வீட்டிலே ஏதோ நினைப்புடன் அவன் திடீரென ஒருநாள் அழுது புலம்பியது இவர் மனதை வருத்தியிருந்தது. அதனால் பெற்றோர்களின் அழைப்புக்காகக் காத்திருக்காமல் அவன் வீட்டுக்குச் செல்கிறார். அப்போது அவன் ஏற்கனவே மற்ற குழந்தைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்ததைப் போன்ற ஒரு டைரியை எடுத்து அதில் 'சாரங்கனுக்கு அன்பளிப்பு' என்று எழுதித் தரும்படி அவரைக் கேட்பதுடன் கதை முடிகிறது. குழந்தைகள் அன்புக்காக ஏங்குவதையும், தம்மையும் சமமாக எல்லோரும் பொருட்படுத்த வேண்டும் என்று நினைப்பதையும் இக்கதை சிறப்பாகச் சொல்கிறது.

அதேபோல் 'ராஜா வந்திருக்கிறார்' கதையில் பணக்காரப் பையனுக்கும் ஏழைப் பையனுக்கும் விளையாட்டுத்தனமாக ஆரம்பிக்கும் படப்போட்டி உன் வீட்டில் அது இருக்கிறதா என் வீட்டில் இது இருக்கிறது என்று வளர்ந்து கடைசியில் என் வீட்டுக்கு ராஜா (ஜமீன்தார் மகன்) வந்திருக்கிறார் என்று சொன்னதற்குப்பதிலாக முதல் நாள் இரவு தங்கள் வீட்டுக்கு அடைக்கலமாக வந்த அநாதைப் பையன் ராஜாவை நினைத்து 'எங்கள் வீட்டுக்கும் ஒரு ராஜா வந்திருக்கிறான் வந்து பாரு' என்று அந்த ஏழைக் குழந்தைகள் சொல்கின்றன. தாங்கள் யாருக்கும் இளைத்தவர்கள் அல்ல என்று நினைக்கும் குழந்தைகள் மனோபாவம் இக்கதையில் சிறப்பாக வெளிப்படுகிறது. மேலும் இக்கதையில் தன் குழந்தைகளைப் போலவே அடைக்கலமாக வரும் அநாதைச் சிறுவனையும் கவனித்து அன்பைப் பொழியும் தாய்ம்மாவின் சித்திரம் ஏழைக் குடும்பமானாலும் அன்புக்குப் பஞ்சமில்லாத ஒரு கிராமிய மாதிரியை முன்நிறுத்துகிறது.

'பேதமை' கதையில் ஒரு குருட்டுக் கிழவனின் சோற்றில் மண்ணை அள்ளிப்போட்ட இரு சிறுவர்களை ஒருவன் ஓடிப்பிடித்து கண்மண் தெரியாமல் அடிக்கிறான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியருக்கும் அந்தச் சிறுவர்கள் மேல் கோபம் வந்தாலும் தண்டனை எல்லையைத் தாண்டவே அவர்களைக் காப்பாற்றி அவர்கள் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்று அவர்கள் அம்மாவிடம் ஒப்படைக்கிறார். இதேபோல் அந்தச் சிறுவர்கள் நிறைய விஷமங்கள் செய்வதாகப் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் ஆசிரியருக்கு அச்சிறுவர்கள் மேல் இரக்கம் தான் ஏற்படுகிறது. அப்போது அந்தக் குடிசைக்கு அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் வருகிறான் அவன் வேறு யாருமல்ல. அச்சிறுவர்களின் தகப்பன்தான் என்று தெரிந்ததும் ஆசிரியருக்கு அச்சிறுவர்களின் செயலை எப்படி எடுத்துக்கொள்வது என்றே தெரியவில்லை. 'குழந்தைகளே' என்று விளிப்புடன் கதையை முடிக்கிறார் குழந்தைகளின் ஒரு வகைப்படுத்த முடியாத பேதைமை உலகம் இக்கதையில் வெளிப்படுகிறது.

வெகுளித்தனமான அன்பு, விவரிக்க முடியாத காதல், உரிமை கொண்டாட முடியாத சொந்தம் இவையெல்லாம் வாழ்க்கையில் சகஜமாக வந்து போய்க்கொண்டிருப்பவை என்பதை அழகிரிசாமியின் 'சிரிக்கவில்லை' கதை அழகாகச் சொல்கிறது. அம்மாவுடன் வசித்துக் கொண்டு ரயிலில் புக்கிங் கிளார்க் வேலை பார்க்கும் ராஜாராமனுக்குப் பகல், மாலை என்று ஷிப்ட் மாறி வருவதால் வீட்டில் பெரும்பாலான நேரங்களில் தூங்கியபடி இருப்பான். அவன் தங்கியிருக்கும் ரயில்வே உத்தியோகஸ்தர்களின் வீடுகளுக்கு அடுத்தாற்போல் உள்ள ஒரு வீட்டிலிருந்து பாப்பம்மாள் என்கிற வெகுளித்தனமான பெண் ராஜாராமனுடைய அம்மாவுக்கு ஒத்தாசை செய்யும் சாக்கில் இவன் வீட்டுக்கு அடிக்கடி வருவாள் வந்தால் வீட்டுச் சாமான்களை எல்லாம் அவளாகவே ஒழுங்கு செய்வாள். ராஜாராமன் தூங்கும் அறைக்குள் உரிமையுடன் வந்து அவனை எட்டிப் பார்ப்பாள் கண்ணாடியில் தலையை வாரிக் கொள்வாள். ராஜாராமன் தூங்கியும் தூங்காமலும் அவள் சேஷ்டைகளை ரசித்தபடி இருப்பான். ஒருநாள் ராஜாராமனின் அம்மா திட்டிவிட்டாள் என்று கொஞ்சநாள் வீட்டுக்கு வரவில்லை திடீரென்று தன் வீட்டில் மாடு கன்று போட்ட செய்தியைச் சொல்ல ஓடோடி வந்தாள். அப்புறம் தினமும் சாயந்திரத்துக்கு அவள் வீட்டிலிருந்தே பால் வரும் ராஜாராமனின் அம்மா மத்தியானம் வீட்டு வேலையை முடித்துவிட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்களுடன் பேசப் போய்விடும் நேரத்தில் பாலை எடுத்துக் கொண்டு வருவாள் ஒருநாள் அப்படி வரும்போது ராஜாராமன் தூங்குவது போல் நடிக்கிறான் அவன் அம்மா கூப்பிடுவது போல் ராசா

ராசா என்று அவனைக் கூப்பிடுகிறாள். அவன் எழுந்து அவளை அணைத்து முத்தமிடுகிறான். இருவருக்கும் சந்தோஷமாக இருக்கிறது. பிறகு அவள் ஓடிவிடுகிறாள்.

திடீரென்று பாப்பம்மாள் உடல்நலமில்லாமல் போய் படுக்கையில் விழுந்து விடுகிறாள். ராஜாராமன் குற்ற உணர்வால் அவளைப் பார்க்கப் போகாமல் இருக்கிறான். அதற்குள் அவனுக்கு சொந்தத்தில் திருமணமாகி திருமணமும் நடந்து விடுகிறது. பாப்பம்மாள் அதை வித்தியாசமாக எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவன் வேறு ஜாதி என்பதால் அவனுடன் கல்யாணம் சாத்தியமல்ல என்பதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறாள். அவன் கல்யாணத்துக்குப் பிறகும் அவர்கள் வீட்டுக்கு வந்து போகிறாள். அவன் மனைவியுடன் அன்பாக உறவாடுகிறாள். அவர்கள் மூவரும் சந்தோஷமாகச் சிரித்து பேசிக் கொள்கிறார்கள். ராஜாராமன் மனைவி கர்ப்பமாகி அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அது முழுக்க ராஜாராமன் சாயலிலேயே இருக்கிறது. அதைப்பார்த்ததும் இன்னொரு ராஜாராமன் அவன் மனைவி வயிற்றில்தானே பிறந்திருக்கிறது. இனி தான் யார் அவர்களுக்கு என்ற எண்ணம் பாப்பம்மாளுக்குத் தோன்றுகிறது. அவளுடைய ஒரு சொந்தம் நழுவிவிட்டது போன்ற ஒரு உணர்வு அப்போதுதான் அவளுக்கு ஏற்படுகிறது. மிகவும் மென்மையாகச் சொல்லப்படும் இக்கதை ஒரு நெகிழ்வான உணர்வுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

அதேபோல் குழந்தைப் பேறு சமயத்தில் இளம் தம்பதியரிடையே உருவாகும் இன்பமான உணர்வு எவ்வாறு கட்டுகளை மீறியது என்பதை அழகிரிசாமியின் 'பெரிய மனுஷி' கதை மிகவும் நெகிழ்வாகச் சொல்கிறது. கர்ப்பமான இளம் மனைவியை ஊருக்கு அனுப்பிய கணவன் அவளைப் பார்க்கப் புறப்படுகிறான். அவள் சரியாகக் கடிதம் எழுதுவதில்லை என்று அவள்மேல் கோபமாக இருக்கிறான். ஆனால் ஊர் நெருங்க நெருங்க அவன் கோபம் மாறிவிடுகிறது. அச்சிறு பெண்ணின் மீது அன்பும் பரிவும் பொங்கி அவள் நன்றாகக் குழந்தை பெற வேண்டுமே என்று தவிக்கிறான். பிரசவ நாள் வந்து அவனுக்கு அழைப்பும் வருகிறது. ஆனால் அது கஷ்டமான பிரசவமாகிவிடுகிறது. அச்சிறு பெண்ணுக்குத் துன்பம் கொடுத்துவிட்டோமே என்று குற்ற உணர்வாலும், வேதனையாலும் அவளைச் சந்திக்கத் தயங்குகிறான். ஆனால் அறைக்குள் நுழைந்ததும் என் பக்கத்தில் வந்தால் தீட்டுப் பட்டுவிடுமா' என்று சொல்லி அவனை அணைக்கக் கை நீட்டுகிறாள். பலவிதமான தவிப்புகளை மிகவும் மென்மையாகவும், நெகிழ்வாகவும் சொல்லிச் செல்கிறது அழகிரிசாமியின் கதைமொழி.

மனித நடத்தைகளின் விசித்திரங்களை ஒரு வேடிக்கை உணர்வுடன் பார்த்துச் செல்லும் மனநிலை அவருடைய பல கதைகளில் வெளிப்படுகிறது. ஒருவன் சுவரேறி மற்றொரு வீட்டில் குதிப்பதை வைத்து ஆதாரமின்றி எழுப்பப்படும் வதந்திகள் எப்பக்கமும் சாயக்கூடிய தன்மை கொண்டிருப்பதை 'ஆதாரம் இருக்கிறதா' கதையில் பார்க்கலாம். அதேபோல் ஒரு இளைஞன் ஒரு அழகான பெண்ணுடனும் ஒரு அழகில்லாத பெண்ணுடனும் பழகும்போது எழுப்பப்படும் சந்தேகங்களின் உளவியல் தன்மையை 'இரண்டு பெண்கள்' கதை மையப்படுத்துகிறது. வெறும் கற்பதங்களின் வழியாக அன்றி வாழ்க்கை யதார்த்தம் சார்ந்த மனித உணர்ச்சிகளின் பல்வேறு கூறுகளை ஆழமாகப் பார்த்து அதற்கான ஒரு செறிவான களனை வழங்குவதாலேயே அழகிரிசாமியின் கதைகள் அதிகபட்ச நம்பகத் தன்மையும் ஈர்ப்பும் கொண்டவைகளாக இருக்கின்றன.

# 3

# கட்டுரைகள்

தம்முடைய சிறுகதைகளைப் போலவே கட்டுரைகளிலும் அழகிரிசாமி சிறப்பான மனநிலைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய சிறுகதைகளும் புதினங்களும் பல்வேறுபட்ட மனித உணர்வுகளை ஒரு அழகியல் களத்தில் வெளிப்படுத்துவதாக அமைந்தது போல் அவருடைய கட்டுரைகளும் இலக்கிய ரசனை சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும், வரலாறு சார்ந்தும் சூழல் சார்ந்தும் பல்வேறு கூறகளை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. கட்டுரைக்கான பொருளாக ஒரு குறிப்பிட்ட விஷயம்தான் அமைய வேண்டும் என்று எந்த வரையறையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் நடைமுறை வாழ்க்கையிலும், அழகியல் மனநிலையிலும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய எந்த விஷயத்தையும் கட்டுரைப் பொருளாக எடுத்துக் கொள்ள அவர் தயங்கவில்லை. தூக்கபுராணம், படிக்கும் பழக்கம், புகையிலையும் இலக்கியமும், அச்சு மையின் அபார சக்தி என்றெல்லாம் மிகவும் ஸ்தூலமான வாழ்க்கையுடன் இணைந்த சிறுசிறு விஷயத்தைப் பற்றியெல்லாம் கூட அவர் கருத்து சொல்லத் தயங்கியதில்லை.

சக்தி, பிரசண்ட விகடன் பத்திரிகைகளில் அவர் வேலை செய்த காலகட்டத்தில் தான் அவர் அதிகக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அந்த சமயத்தில்தான் பத்திரிகைத் தேவைக்காகவும் மொழிபெயர்ப்பு அவசியம் கருதியும் பல துறைச் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் அவர் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பல விதமான கட்டுரைகள் எழுதவேண்டிய அவசியமும் ஏற்பட்டது நாளடைவில் கட்டுரைகள் எழுதுவதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடும் சுவையும் உருவானது என்றே சொல்லலாம். பொதுவாகப் புனைவு இலக்கியத்தில் ஈடுபடுபவர்கள் கட்டுரைகள் எழுதுவதில் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை. அவசியம் கருதி மட்டும் சில கட்டுரைகள் எழுத முற்படுவார்கள். ஆனால் அழகிரிசாமியிடம் கட்டுரை எழுதுவது என்பது ஒரு இலக்கியச் செயல்பாடாகவே தங்கிப்போனது. அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியது போலவே அவற்றுக்கு இணையான கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் மலேசியாவில் இருந்த ஐந்து

வருட காலகட்டத்தில் அவர் அதிகம் கட்டுரைகளே எழுதியிருக்கிறார். அவர் மலேசியா திரும்பப் போக விருப்பப்படாததற்கு படைப் பிலக்கியத்தில் அதிகம் ஈடுபடுவதற்கான சூழல் அங்கு அவருக்கு ஏற்படவில்லை என்பதும் ஒரு காரணமாக இருந்தது. அவர் தம்முடைய இறுதிக்காலகட்டங்களில் கூட கதைகள் தவிர்த்து கட்டுரைகளே அதிகம் எழுதினார். எனவே அவரது கட்டுரைகளும் அவருடைய இலக்கியப் படைப்பாக்கத்தின் ஒரு பகுதியாகவும், அழகியல் மனநிலையின் பிரதிபலிப்பாகவுமே அமைந்திருப்பதைப் பார்க்கலாம். இலக்கியப் படைப்புகள் குறித்தும், இலக்கிய ஆசிரியர்கள் குறித்தும் இலக்கிய கருத்தாக்கங்கள் குறித்தும், இலக்கியத்தில் இசை குறித்தும், அவர் எழுதியுள்ள கட்டுரைகளே அதிகம் என்றாலும் வரலாறு பற்றியும் நாட்டுப்புற வாழ்வியல் பற்றியும் தன் சென்னை வாழ்க்கை பற்றியும் தான் ரசிக்கும் விஷயங்கள் பற்றியும் கணிசமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தன் சொந்தவாழ்க்கை சம்பந்தப்பட்டு அவர் எழுதியுள்ள பல விஷயங்கள் மிகவும் ஈர்ப்புடன் ஒரு அந்தரங்கமான குரலில் ஒலிக்கின்றன.

'சென்னைக்கு வந்தேன்' என்ற ஒரு கட்டுரையில் அவர் இவ்வாறு எழுதுகிறார்: ''சென்னையில் இருந்த 26 நாட்களில் நான் சிந்தித்தவை: இங்கே எனக்கு 30 ரூபாய் சம்பளத்தில் தான் உதவியாசிரியர் வேலை தருவார்களாம். அப்படியானால் ....? ரூம் வாடகை 5 ரூபாய் போக மீதி மின்சார ரயில், டிராம் கட்டணங்களுக்கு மற்றொரு 5ரூபாய். பத்து ரூபாய் போக மீதி இருப்பது இருபதே ரூபாய்கள் தான். இதில் நான் சாப்பிடுவேனா, தலை சிரைப்பேனா, வேட்டி வாங்குவேனா, வேட்டி வெளுக்கக் கூலி கொடுப்பேனா, மண்ணெண்ணெய் விளக்குக்கு எண்ணெய் வாங்குவேனா, என் பெற்றோருக்குப் பணம் அனுப்புவேனா. அபாயம். அபாயம். தென்காசியில் கிளார்க் வேலை பார்த்தபோது போத்தி ஹோட்டலில் அருமையான சாப்பாடு சாயங்காலங்களில் அல்வா உள்ளிட்ட சிற்றுண்டி. ஞாயிற்றுக் கிழமைகளில் குற்றால ஸ்நானமும் டி.கே.சி. தொடர்பும் பெட்டி நிறையக் கதர் வேட்டி. கதர்ச் சட்டைகள் இவ்வளவும் போக மாதத்தில் பத்துப் பதினைந்து மிச்சம். கை நிறைய 35 ரூபாய் சம்பளம் வாங்கிவிட்டு இங்கே 30 ரூபாய்க்கு காலி புரூப் வாசித்துச் சாவானேன். இந்த சென்னையில் அந்த 35 எந்தக் காலத்தில் கிடைக்குமோ? இந்த 30 தான் எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமோ? சீச்சீ. இந்தத் தரித்திரத்தில் இலக்கியமாவது சேவையாவது, நல்ல படியாக ஊருக்குத் திரும்பிப் பிழைக்கிற வழியைப் பார்க்க வேண்டும்.''

திரும்பவும் சப் ரிஜிஸ்தரார் ஆபீஸில் உட்கார்ந்தபின் ஏற்பட்ட சிந்தனைகள் பின் வருமாறு: பட்டினி கிடந்தாவது சென்னையில் இலக்கியச்

சேவை செய்திருந்தால் ஆத்ம திருப்தி ஏற்பட்டிருக்கும். ஆத்மாவுக்கு உணவளிக்காமல் ஐந்தறிவுப் பிராணிகளைப்போல சரீரத்தை மட்டும் வளர்ப்பதற்காகவா மனிதன் பிறந்தான்? மேல் நாட்டில் நம்மைவிட ஏழைகளாக இருந்தவர்கள் இந்த 35 ரூபாய் சம்பாத்தியத்துக்குக்கூட வழியில்லாமல் பசியும் பட்டினியுமாக இருந்து சாகாவரம் பெற்ற இலக்கியங்களைப் படைத்துக் கொடுத்திருக்கிறார்களே! ஆகவே நாம் அவசரப்பட்டுச் சென்னையை விட்டு ஓடி வந்தது பெருந்தவறு."

சென்னையில் தன்னுடைய இலக்கிய வாழ்க்கையைப் பற்றி அவர் இவ்வாறு எழுதுகிறார்-"சென்னைக்கு வந்ததால் நான் இலக்கியத்தில் புதுத் திறமைகளை சம்பாதித்ததாகவோ, என்னிடம் பிரமாதமான அறிவுப்புரட்சி ஏற்பட்டதாகவோ சொல்லுவதற்கு கொஞ்சம் கூட இடமில்லை இலக்கியத்தின் சகல துறைகளையும் பற்றிய அடிப்படையான கருத்துக்களை என்னுடைய கிராமத்திலிருக்கும்போதே நான் தேடிக்கொண்டு விட்டேன். இங்கே வந்து இன்று வரையில் அந்த அடிப்படை மாறவில்லை. மாறப் போவதும் இல்லை. சென்னையில் அநேக புதுப் புத்தகங்களைப் படித்ததால் புத்தக அறிவு ஒருவேளை விரிவடைந்திருக்கலாம். ஆனால் இலக்கிய முயற்சிக்கே ஜீவனாக, கருவாக உள்ள எந்த அடிப்படையையும் இங்கே நான் தேடிக்கொள்ள வில்லை. தேடிக் கொள்ளவும் முடியாது. சென்னையில் சில நல்ல அம்சங்களையும் இங்கே சொல்ல வேண்டும். இங்கே அருமையான சில இலக்கிய நண்பர்களும் மற்ற நண்பர்களும் உள்ளன்புடைய உபகாரிகளும் கிடைத்திருக்கிறார்கள். மேலும் நான் வழக்கமாக முடிவெட்டிக் கொள்ளும் சலூனின் சொந்தக்காரர், மாதம் 2 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு எனக்கு காலைக் காப்பி வாங்கிக்கொண்டு வந்து கொடுத்த வேலைக்காரன், இரண்டொரு சில்லரைக் கடைக்காரர்கள் முதலியோரும் நான் சென்னையில் கண்ட சில நல்ல ஆத்மாக்கள். இவர்கள் எனக்கு மட்டுமல்ல சமூகத்துக்கே பெரிய உபகாரிகள். மலாயாவிலிருந்து திரும்பி வந்த பின் இவர்களையெல்லாம் போய்ப் பார்த்து க்ஷேமம் விசாரித்துவிட்டு வந்தேன்."

'மண்ணுலகத்து ஓசைகள்' என்ற கட்டுரையில் தான் ரசித்த ஓசைகளைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார் - "சென்னையில் கேட்ட ஒலிகளில் என் மனதைக் கவர்ந்தவை, என்னால் மறக்க முடியாதவை, இரண்டு. ஒன்று முள்ளங்கி விற்கும் இரண்டு சிறுவர்களின் குரல். ஏக காலத்தில் 'முள்ளங்கி! முள்ளங்கி!' என்று கூவுவது காலைக் காற்றில் கலந்து சிறிது தூரம் பிரயாணம் செய்து நான் குடியிருந்த வீட்டின் மாடியில்

ஏறி, ஜன்னல் வழியாக ஏதோ தெய்வ ஸ்வரங்களை மிழற்றிக்கொண்டு என் அறைக்குள் வரும். மற்றொரு குரல்: இது தெய்வீகக் குரலேதான். கோலப்பொடி விற்கும் ஒரு ஏழைப் பெண்ணின் குரல் இது. கோலப் பொடியை சென்னையில் 'மொக்கு மாவு' என்று சொல்லுவார்கள். இந்தப் பெண் 'மொக்கு மாவூ' என்று கூவும்போது அந்தச் சொல்லில் ஒரு எழுத்துக்கும் மற்றொரு எழுத்துக்கும் இடையில் எத்தனையோ அழகான இனிய அசைவுகள். விம்மியும் மெலிந்தும் ஒலி வெளிப்படும்போது எத்தனையோ நெளிவுகள், அதை விவரித்துப் புரிய வைக்க முடியாது. எந்த சங்கீத வித்வானாலும் அதுபோலக் கூவிக் காட்ட முடியாது.

தினந்தோறும் இந்தக் குரல் காலை நேரத்தில் கேட்கும். உதய கன்னி உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலுமே நர்த்தனம் செய்கிறாள். ஒரு பகுதியில் கடல் முழக்கமும், மற்றொருபகுதியில் அரண்யங்களின் ஓசையும், வேறொரு பகுதியில் அருவியொலியும் அவளுக்கு நாட்டிய இசையாக அமைகின்றன. சென்னையில் நான் வசித்த தெருவில் உதய கன்னியின் முதல் நடனத்துக்கு கீதம் இசைப்பவள் 'மொக்கு மாவு' விற்கும் இந்த ஏழைப் பெண்தான் ஏதோ ஒரு பறவை தன் மழலை முற்றாத குரலில் தாயைப் பார்த்துக் கூவுவது போல இவளுடைய குரல் கேட்கும். இவளை வெகு நாட்கள் வரையில் நான் பார்க்கவில்லை. ஒருநாள் அதிகாலையிலேயே எழுந்து இவளுடைய வருகைக்காக நான் தெருவோரத்தில் வந்து நின்று கொண்டேன். மொக்கு மாவு விற்றுக் கொண்டு அவளும் வழக்கம்போல வந்தாள். சுமார் 25 வயதுடைய பெண். அழுக்குப் புடவை, சிக்கு விழுந்த கூந்தல், மொக்கு மாவைத் துழாவியதால் வெள்ளைப்பொடி அப்பிய விரல்கள். குரலுக்கேற்ற அழகியல்ல அவள். அத்துடன் அருகில் நின்று கேட்கும்போது அந்தக் குரலில் இருந்த சுகம் முக்கால்வாசி மறைந்தும் விட்டது. அந்தக் குரல் காற்றோடு கலந்து, காற்றோடு அசைந்து, எங்கெங்கோ முட்டி, எத்தனையோ கரகரப்புகளை உதறிவிட்டு, அநேக எதிரொலிகளைப் பின்னணி இசைகளாக ஏற்றுக் கொண்டு என் அறையில் புகும்போதுதான் இனிமையாக இருந்தது. காற்றில் கலந்த ஒலியின் மகிமை இது

இப்படிப்பட்ட ஏதாவது ஒரு ஒலி ஒவ்வொருவரையும் கவரக்கூடும். நடுநிசியில் வண்டியோட்டிச் செல்கிறவனின் தெம்மாங்குப்பாட்டு, ஏற்றமிரைக்கிறவர்களின் கீதம், காலையிலே ஊர்க்கோவிலில் வாசிக்கும் நாதஸ்வரத்திலிருந்து பிறக்கின்ற பூபாள ராகம், இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள தண்டவாளத்தில் சீட்டியடித்துக் கொண்டு ஓடும் ரயில் முழக்கம் - இப்படி எத்தனை எத்தனையோ ஒலிகளில் மனிதர்கள் பரவசம்

அடைந்திருக்கிறார்கள். இந்த ஓசைகள் யாவும் மண்ணுலகத்துக்கே உரிய ஓசைகள். மண்ணுலகத்து நல்லோசைகளை எல்லாம் நமக்குக் காற்றெனும் வானவன் கொண்டு வந்து கொடுத்த வண்ணமாக இருக்கிறான்.''

வாழ்க்கையுடன் நெருங்கியத் தொடர்புடைய ஆனால் இலக்கியத்தில் அதிகப் பிரஸ்தாபிக்கப்படாத விஷயங்கள் குறித்து விசேஷக்கவனம் எடுத்துக் கொண்டு அவையும் இலக்கியத்தில் கொண்டாடப்பட வேண்டும் என்பதில் அழகிரிசாமி அதிக ஆர்வம் கொண்டவராக இருக்கிறார். இப்படிப்பட்ட அவருடைய ஒரு கட்டுரைதான் 'புகையிலையும் இலக்கியமும்'.

பாடுமினோ பெண்காள்
பாடிக் களிசிறந்து
ஆடுமினோ வந்திங்கு
அபிநயமாய் - கூடிநிதம்
பண்டுக்கும் இன்றைக்கும்
பார்மேல் கலி தீர்க்கும்
திண்டுக்கல் அங்கப்பன்
சீர்-

என்று புகையிலை இன்பம் பற்றிய அவருடைய கவி நண்பர்களின் வெண்பாக்கள் கொண்டாட்டத்துடன் துவங்கும் இக்கட்டுரை புகையிலை கண்டு பிடிக்கப்பட்ட வரலாறிலிருந்து தொடங்கி நம்முடைய பழைய இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், மேல்நாட்டு இலக்கியங்கள் எனப் பல்வேறு இலக்கியங்களிலும் புகையிலை இடம் பெற்றுள்ள விதம் பற்றிச் சுவையாகவும் அபூர்வமானதுமான பல தகவல்களை விஸ்தாரமாகச் சொல்கிறது.

கொலம்பஸ் புகையிலைச் செடியைப் பார்த்ததிலிருந்து பின்னர் அதை ஸ்பெயினுக்கு கொண்டு வந்து பின்னர் அது உலக நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் பரவி உலகம் முழுவதும் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆரம்பத்தில் சொல்லிப் பின் இலக்கியத்தில் அது எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பதை விரிவாகச் சொல்கிறது கட்டுரை. இலக்கியத்திலும் நடைமுறைச் சொல்லாடல்களிலும் பழங்குடியினரின் கதைகளிலும் நாட்டுப்புறப் பாடல்களிலும் புகையிலைக் குறித்த குறிப்புகளை இவ்வாறு திரட்டித் தருகிறார் 'தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சுடுகாட்டுக்குப் பிணத்தை அடக்கம் செய்யப் போனவர்

களுக்கு சுடுகாட்டிலிருந்து திரும்பும்போது புகையிலையோ, சுருட்டோ கொடுப்பார்கள் இதனால் 'பொணத்தோடே போனாலும் புகையிலை கிடைக்கும். இவனோட போனால் என்னடா கிடைக்கும்?' என்றும் பழமொழியைப் போல சொல்லிக் கொள்கிறார்கள்.'

''ஒரு தற்காலப் புலவர் தாம் வணங்கும் பாவைடை ராயன் என்னும் தெய்வத்தின் பெருமையைப் புகையிலையைச் சம்பந்தப்படுத்திக் கூறுவது ரசமாக இருக்கிறது பாவாடை ராயன் மலையனூரில் எழுந்தருளியிருக்கும் தெய்வம். அவனைப் பாராட்டும்போது

மது மாமிசங்களும்
அபினி கஞ்சா இலை
மாசனம் ரொட்டியுடனே
பன்றியாடுகள் கோழி
முப்பூசை வாங்கி மிக
பட்சிக்கும் அதிகாரனே!
மேலும்
மதிக்கின்ற கஞ்சாவும்
புகையிலை மது உண்ண
மயக்கமுமது காணுமோ

என்று பாவாடை ராயனுக்கு எளிதில் மயக்கம் வராது என்று அவன் புகழ் பாடுகிறார்.

''புகையிலையைப் பாராட்டுவதற்காகவே 'புகையிலை விடு தூது' என்ற ஒரு சிறு பிரபந்தம் இயற்றப்பட்டிருக்கிறது மேலும் புகையிலையைப் பற்றி பாடல்கள், கதைகள், பழமொழிகள் முதலியனவும் உள்ளன'' என்று நம்முடைய பழங்குடியினரிடம் வழங்கிய ரசமான கதைகள் சிலவற்றைக் கூறுகிறார் அவற்றில் ஒரு கதை - ''ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் மிகவும் குள்ளமாக இருப்பாள் கண்ணோ மாறுகண் உடம்பெல்லாம் புண்கள் ஒரு கை ஊனமாக வேறு இருந்தது ஆனால் முகம் மட்டும் கிளியைப் போல அழகாக இருந்தது அவளுடைய குரலோ மைனா பேசுவதைப் போல அவ்வளவு இனிமை பொருந்தியது. இந்த ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று நினைத்த அரசன் அவளுக்கு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தான் அவளும் எல்லாவற்றையும் அணிந்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். ஆனாலும் அவளை விரும்பி வந்து

கல்யாணம் செய்து கொள்ள யாரும் தயாராக இல்லை. ராஜகுமாரியோ இல்லற இன்பத்தில் மட்டுக்கு மீறிய பிரியம் உள்ளவள். தன்னை மணந்து கொள்ள யாரும் வராததால். அவள் மிகவும் விசாரப்பட்டு வனாந்திரத்துக்குப் போய்விட்டாள். அங்கு மகாப் பிரபு (கடவுள்) வைச் சந்தித்து அவரைச் சரச சல்லாபத்துக்கு அழைத்தாள்.

மகாப்பிரபுவுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே 'இனிமேல் நீ பெண்ணாக இருக்க மாட்டாய். நீ புகையிலைச் செடியாக மாறுவாயாக. சகல மனிதர்களும் உன்னிடத்தில் இனி இன்பத்தைத் துய்ப்பார்கள்' என்று சபித்துவிட்டார். அவ்வளவுதான். ராஜகுமாரி புகையிலைச் செடியாக மாறிவிட்டாள். அன்றுமுதல் மனிதர்கள் உணவையும், மனைவியாரையும் விட புகையிலையை அதிகமாக விரும்பத் தொடங்கினார்கள்.

மற்றொரு கதை ஒரு ஸ்திரீ குழந்தையில்லாமலே இருந்து கடைசியில் செத்துப் போய்விட்டாள். அவளுடைய ஆத்மா மகாப்பிரபுவிடம் சென்று பின்வருமாறு வேண்டிக் கொண்டது. எனக்குக் குழந்தைகள் கிடையாது. இந்த உலகத்தில் என்னைக்கவனிப்பார் இல்லை. அதனால், இந்த உலகத்தில் நான் மறுபடியும் பிறக்கும்போது என்னை ஒவ்வொரு வீட்டிலும் வரவேற்று என்னிடம் ஆசை வைக்கும்படியாக எனக்கு வரம் தர வேண்டும்.

மகாப்பிரபு சந்தோஷத்துடன் வரம் கொடுத்தார்.

"பழையபடியும் உலகத்துக்குப் போ. உன்னுடைய எலும்பிலிருந்தும் உன் மார்பின் தோலிலிருந்தும் புகையிலைச் செடி முளைக்கும் நீ ஒவ்வொரு வீட்டிலும் வாழ்ந்து வருவாய்."

ஆத்மா வரம் கேட்ட விவரம் இது இனிச் செத்துக்கிடக்கும் அந்த ஸ்திரீயின் சடலத்தை என்ன செய்தார்கள் என்று பார்ப்போம். அவளுடைய பிணத்தைக் கொண்டு போய்ச் சுடுகாட்டில் வைத்து எரித்தார்கள். ஆனால் அவளுடைய எலும்புகளோ மார்புத் தோலோ தீயில் பொசுங்கவில்லை. மூன்றாம் நாள் சுடுகாட்டில் ஒரு புகையிலைச் செடி முளைத்திருக்கக் கண்டார்கள்.

இதேபோல் மத்திய இந்திய பூர்வீக ஜாதி மக்களின் கதைகளிலும் பலவிஷயங்கள் கூறப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் - ஒரு பெண் தன் கணவனை இழந்துவிட்டாள். கணவனுடைய மரணத்தைத் தாங்காமல் அவள் அழுது கொண்டே இருந்தாள். எத்தனையோ சமாதானங்கள் செய்தும் எவ்வளவோ ஆறுதல்கள் கூறியும் அவள் அழுகையை நிறுத்தவில்லை. கடைசியில் அவளுடைய வாயில் ஒருத்தி

புகையிலையைக் கொண்டுபோய் வைத்தாள். அவள் உடனே அழுகையை நிறுத்தினாள். துக்கத்தையும் மறந்தாள். இதனால்தான் இழவு வீடுகளில் மறக்கப்பண்ண எல்லோருக்கும் புகையிலை கொடுக்கப் படுகிறதாம்.

• 'புகையிலை விடு தூது' என்ற நூலைப் பற்றிய குறிப்புகளை பின்வருமாறு தருகிறார் - ''இந்த நூலை இயற்றியவர் சீனிச்சக்கரைப் புலவர். இவருடைய ஊர் ராமனாதபுரம். இவர் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். பழனி மலையில் எழுந்தருளியுள்ள முருகன் மீது ஒரு மங்கை காதல் கொண்டுவிட்டாள். தன் காதலை முருகனிடம் தெரிவித்து அவன் அணிந்துள்ள கடப்ப மாலையை வாங்கிவரும்படி புகையிலையைத் தூதாக அனுப்புகிறாள். அப்படி அனுப்பும்போது புகையிலையைப் பலவாறாக முதலில் பாராட்டிவிட்டு கடைசியில் தன் செய்தியைக் கூறுகிறாள். இந்தப் புத்தகத்தில் மொத்தம் 59 கண்ணிகள் உள்ளன. அவற்றில் 53 கண்ணிகளும் புகையிலையின் பிரதாபங்களைத் தான் எடுத்துரைக்கின்றன. மீதியுள்ள 6 கண்ணிகளில்தான் காதல் விவகாரம் பேசப்படுகிறது திருமால், சிவன், பரிமன் ஆகிய ஒவ்வொரு மூர்த்திக்கும் புகையிலைக்கும் சிலேடையாக சில கண்ணிகளைக் கூறிவிட்டுத் தமிழுக்கும் புகையிலைக்கும் சிலேடையாக நான்கு கண்ணிகள் கூறுகிறார். அதன்பின் புகையிலையின் வரலாறும், புகையிலையின் பெருமைகளும், பழனி முருகனுடைய பெருமையும் தூது அனுப்பும் காரணமும் முறையே சொல்லப்படுகின்றன. உதாரணத்துக்கு ஒரு பாடல்:

மோகப் பயிராய் முளைத்த புகையிலையே
தாகப்பயிரான சஞ்சீவி
நண்ணிய மாதவத்தோர் நாடோறும் தேடுகின்ற
புண்ணியமான புகையிலையே
சென்றுரைத்துத் திண்புயமேல் சேர்ந்தியங்கு பூங்கடப்ப
மன்றல் கமழ் தார் வாங்கி வா-

இவ்விதம் சொல்லித் தூது அனுப்புகிறாள்.

புகையிலைக்குறித்து வழங்கப்படும் பல பழமொழிகளும் நாட்டுப்பாடல்களும் கட்டுரையில் விரிவாகச் சொல்லப்படுகின்றன போயிலைத் தோட்டத்துக் கோமாளி போயிலைக் கறுப்பன், விடிந்தெழுந்து இவன் முகத்தில் விழித்தால் பொடி, புகையிலை கூடக் கிடைக்காது. இவை பழமொழிகள், விறலி விடுதூதில் தாய்க் கிழவியை வர்ணிக்கும்போது

**நீட்டும் கழுத்தும் நெளிப்பும் எலிச்செவியும்**
**போட்ட புகையிலையும் பொழ்வாயும் -**

என்று வருகிறது. இதே போல் மேனாட்டு இலக்கியங்களிலும் புகையிலை இடம்பெற்ற விவரங்களை பலவாறாகத் தருகிறார். மேனாட்டு இலக்கிய ஆசிரியர்கள் சிலர் புகையிலைக்குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்:

ஐ.எச்.ப்ரௌன் (1705-1760): புகையிலையே உன்னாலும் உன் சகோதரி மதுவாலும் கவிஞர்கள் பேரின்பக் களிப்படைந்திருக்கின்றனர். அந்தக் களிப்பினால் தங்கள் அருகில் அமீனா வந்து நிற்பதையும் கூட அவர்கள் பொருட்படுத்துவது கிடையாது.

மார்க் ட்வைன் (1835-1910): சுருட்டுக் குடிப்பதை நிறுத்துவது மிகவும் சுலபம். ஏனென்றால் நான் அதைப் பல தடவைகள் நிறுத்தியிருக்கிறேன்.

காரன் மார்க்ஸ்: மூலதனம் எழுதும்போது நான் குடித்த சுருட்டு களுக்குச் செலவழித்த பணம் கூட மூலதனம் விற்பனையால் எனக்குக் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு புகையிலையை முன் வைத்து இக்கட்டுரையில் பல சுவையான அரிய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

இதேபோல் உயிர்ப் பிராணிகள் அனுபவிக்கும் இன்பங்களில் தலைசிறந்த இன்பமான தூக்கத்தின் அருமை பெருமைகள் பற்றிய பல சுவையானத் தகவல்களை அவருடைய தூக்க புராணம் கட்டுரை கொண்டிருக்கிறது. அவருடைய கட்டுரை இவ்வாறு ஆரம்பிக்கிறது - ''கந்த புராணம், கருட புராணம், பத்ம புராணம், பாகவத புராணம் என்று பதினெட்டுப் புராணங்களை எழுதியவர்கள் தூக்கத்துக்கு என்று தனியாக ஒரு புராணத்தை எழுதி வைக்கவில்லை. சிலர் எந்தப் புராணத்தைக் கேட்டாலுமே தூங்கி விழுவதைப்பார்த்துவிட்டு தூக்கத்துக்குத் தனிப்புராணம் தேவையில்லை என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும் ஆனாலும் இது நியாயம் அல்ல என்பதே என் அபிப்பிராயம். முன்னோர்கள் செய்யத் தவறிய காரியத்தைச் சின்னஞ்சிறு அளவிலும் செய்தே ஆக வேண்டும் என்று நான் விரும்பியதின் விளைவே இந்தத் தூக்க புராணம்'.

நாய்கள், மரங்கள் என உயிர்ப் பிராணிகள் அனைத்துக்கும் தூக்க சுகம் உரியது. அகிமுஷ்கின் என்ற ரஷிய எழுத்தாளர் தூக்கம் பற்றித் தொகுத்துள்ள பல விவரங்களை இக்கட்டுரையில் சுவையாக திரட்டித்

தருகிறார் அழகிரிசாமி. அதில் பெறப்படும் தகவல்கள் இவை: இந்திய நாட்டுக்கரடி நன்றாகத் தூங்கும் பிராணிகளில் முன்னணியில் நிற்கிறது. பறவைகள் 13 முதல் 16 மணி வரை தூங்குகின்றன. பாம்பு 24 மணி நேரத்தில் இரண்டு மணி நேரம்தான் விழித்திருக்கிறது. அப்போதுதான் அது தனக்கு இரை தேடுகிறது. முயல்கள் இருபது தடவை விட்டுவிட்டுத் தூங்கும். யானை ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம்தான் தூங்குகிறது. அதுவும் நின்று கொண்டே. குதிரைகளும் அதேபோல்தான். அதேபோல் நின்று கொண்டே தூங்கும் மற்ற பிராணிகள் கழுதை, ஆடு, பசு, எலி, நரி ஆகியவை. வௌவால்கள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு தூங்குகின்றன. மனிதர்களைப் போல் சில பிராணிகளுக்கும் தலையணை தேவைப்படுகிறது. யானைகள் புதரிலோ கரையான் புற்றிலோ தலை வைத்துக் கொண்டு தூங்கும். நரி தன் வாலையே தலையணையாக வைத்துக்கொண்டு தூங்குகிறது. வாத்து தண்ணீரில் ஒரு காலை நீட்டி படகுத் துடுப்பு மாதிரி அவ்வப்போ துழாவிக் கொண்டே தூங்குகிறது. அப்படிச் செய்யாவிட்டால் காற்றோ அலையோ அதைக் கரைக்குத் தள்ளிக் கொண்டு போய்விடுமாம். கரையில் நடமாடும் ஏதேனும் ஒரு மிருகத்துக்கு இரையாகிவிடாமல் தற்காத்துக் கொள்ளவே வாத்து நன்றாகத் தூங்கினாலும் துழாவத் தவறுவதில்லை. மீன்கள் தண்ணீரின் அடிமத்துக்குப் போய் தரையில் தூங்குமாம். சில ஐரோப்பியப் பறவைகள் ஆகாயத்தில் இரண்டு மைல் தூரத்துக்குக் கூட்டமாகப் பறந்து போய்ச் சிறகுகளை விரித்துக் கொண்டு தூங்குகின்றன. சில வண்டுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு பந்து போல் இணைந்து தூங்குகின்றன. சில இனவண்டுகள் ஆண்கள் வேறு பந்தாகவும் பெண்கள் வேறு பந்தாகவும் தூங்குகின்றன. பூக்களில் தூங்கும் வண்டுகளும் உண்டு. எறும்புகள் எப்போதும் முன் ஜாக்கிரதையோடு தூங்குபவை. விரோதிகள் உள்ளே புகுந்துவிடாமல் தடுக்கத் தூங்குவதற்கு முன்னால் அவை மண்ணைக் கொண்டு தங்கள் புற்றின் வாசலை அடைத்துவிடும். விழித்ததும் மனிதர்களைப் போலவே அவை உடம்பை நீட்டி நெளிக்கின்றன. கொட்டாவியும் விடுகின்றன. தூங்கும்போது மனிதர்களைப்போல பிராணிகளும் கனவு காண்பதுண்டு. கனவில்லாமல் எந்த ஜீவராசியும் உயிர்வாழ்வதில்லை - இவ்வாறு ஜீவராசிகள் குறித்த பல வினோதத் தகவல்களை இக்கட்டுரை கொண்டிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு சுவைப்பட்ட விஷயங்களே இவரது கட்டுரைகளில் இடம்பெறுகின்றன

அழகிரிசாமி 'படிக்கும் பழக்கம்' என்று ஒரு விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் தமிழனின் புத்தகம் படிக்கும் பழக்கத்தைக் கடுமையாகச் சாடும் அவர் தமிழ்ப் புத்தகங்களைப் படிக்காமல் தமிழ்

என்றைக்கும் வளர முடியாது தமிழ் எழுத்தாளனின் நிலையும் உயராது என்று தன்னுடைய உள்ளக் குமுறலைத் தீவிரமான வார்த்தைகளில் கொட்டுகிறார். கம்பரையோ, வள்ளுவரையோ, இளங்கோவையோ, பாரதியாரையோ, பாரதிதாசனையோ பாராட்டுகிறார்கள். முதலில் அவர்கள் எழுதிய நூல்களைப் படிக்காமல் ஊரானுக்குப்படி என்று எப்படி உபதேசம் செய்ய முடியும் என்று கேட்கிறார். அவர் மேலும் எழுதுகிறார் - "நாகரிகமடைந்த பிற சமூகங்களில் காணப்படாததும், நம் சமூகத்தில் காணப்படுவதுமான ஒரு பெரிய குறை என்னவென்றால் புத்தகம் படிக்கும் பழக்கம் நம்மவர்களிடம் அதிகமாக இல்லாததுதான். நம் இலக்கியங்களை நாம் படிக்காமல் நம் இலக்கியங்களைத் தலைச் சிறந்தவை என்று பிரசங்கம் செய்தால், பத்திரிகைகளில் எழுதினால் அதைவிடப் பரிகசிக்கத் தக்க காரியம் வேறு எதுவுமில்லை. தமிழ்ப் புத்தகங்களைப் படிக்காமல் தமிழை வளர்க்க முடியுமா? இலக்கியங்களைப் புகழுவதைக் குறைத்து அவற்றைப் படிக்கத் தொடங்குவதே இன்று செய்ய வேண்டிய காரியம்."

இன்று பல்லாயிரக் கணக்கான வள்ளுவர் பிரியர்களும், கம்ப ரசிகர்களும், பாரதிதாசன் பக்தர்களும் இருக்கிறார்கள். ஆனால் பல்லாயிரக்கணக்கான திருக்குறள் புத்தகங்களோ, கம்பராமாயணப் புத்தகங்களோ, பாரதிதாசன் புத்தகங்களோ விற்பனையாகின்றனவா என்றால் அதுதான் கிடையாது. கலிங்கத்துப் பரணிபோன்ற சிறந்த தமிழ் இலக்கியம் ஆயிரம் பிரதிகள் விற்கப் பதினைந்து வருஷங்கள் ஆகின்றன. எட்டணா விலையுள்ள நந்திக்கலம்பகத்தின் சில பிரதிகள் விற்கவே பல வருஷங்களாயிருக்கின்றன மக்களின் ஆதரவில்லாத காரணத்தினால் பல அருமையான தமிழ் நூல்கள் வழக்கொழிந்து போய்விட்டன.

ஒரு சிறந்த எழுத்தாளன் தான் எழுதுவதைக் கொண்டு உயிர் வாழ்வதற்குச் சாத்தியமிருந்தால்தான் அவன் தன்னுடைய முயற்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்து தன்னுடைய நேரத்தையெல்லாம் இலக்கிய ஆராய்ச்சியில் செலவழித்து மேலும் மேலும் உயர்ந்த நூல்களை எழுத முடியும் என்று அழகிரிசாமி கருதுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் சந்தித்த ஒரு ஸ்வீடன் தேசத்துக்கவிஞர் ஒருவரின் உதாரணத்தைக் கூறி தமிழ் எழுத்தாளனின் நிலையை அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி கூறுகிறார். ஐந்து கவிதைத் தொகுதிகளே வெளியிட்டுள்ள அந்த ஸ்வீடன் கவிஞர் அதனால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஆசியச் சுற்றுப்பயணம் செய்யக் கிளம்பியிருக்கிறார். இப்படி ஆராய்ச்சியிலும் சுற்றுப் பயணத்திலும் ஈடுபட்டுத் தன்னுடைய் இலக்கிய அனுபவங்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு தமிழ் எழுத்தாளனுக்கு இருக்கிறதா என்று கேட்கிறார்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அழகிரிசாமி கருதுவது தமிழ்நாட்டில் படித்தவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்பப் புத்தகங்கள் வாங்கிப்படிக்கப்படுவதில்லை என்பதுதான். படித்து நல்ல நிலையில் இருப்பவர்கள் கூட காசு கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிக்க மனமில்லாமல் இருக்கிறார்கள். மேல் நாடுகளிலெல்லாம் வீட்டில் அடுப்பு இருப்பதுபோல் அத்தியாவசியமானதாக ஒரு நூல் நிலையமும் இருக்கிறது. புத்தகம் படிப்பதற்கென்று நேரத்தை ஒதுக்குவது என்பது அன்றாட வாழ்க்கையின் ஒரு நியதியாக இருக்கிறது. நம்மவர்களில் பெரும்பாலோர் புத்தகம் படிப்பதை ஒரு அவசியமான காரியமாகவே கருதுவதில்லை. ஆனால் புத்தகங்கள் படிக்கப்படுவதற்கான ஒரு சூழலை உருவாக்காமலேயே தமிழ் வாழ வேண்டும், வளர வேண்டும், எங்கும் பரவ வேண்டும் என்ற உரத்த கோஷங்கள் மட்டும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு தமிழர்கள் புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் பழக்கம் அற்றவர்களாக இருப்பதால் நல்ல இலக்கியங்களைப் படைப்பதற்கு வாய்ப்புள்ள ஒரு எழுத்தாளன் கஷ்டப்பட நேர்கிறது அவன் பணத்திற்காக எதையாவது எழுதிக்குவித்தால் எழுத்தின் தரம் குறைகிறது. புத்தகங்களை வாங்காமலும் படிக்காமலும் இரவல் வாங்கிப் படிப்பதுமாக இருந்தால் தமிழ் எந்த யுகத்திலும் வளரப போவதில்லை வளராத எதுவும் வாழ முடியாது என்று கடுமையாகக் கூறுகிறார் அழகிரிசாமி

அழகிரிசாமி இக்கட்டுரையை எழுதிப் பல வருடங்கள் கழிந்த பிறகும் இந்த நிலைமை பெரிதும் மாறிவிடவில்லை. அதனால் இன்று முழு நேரத் தமிழ் எழுத்தாளர்களைப் பார்ப்பது என்பது அரிதானதாகவே இருக்கிறது

இலக்கியத்தில் தரமான ஆனால் அதிகம் கவனத்துக்கு வராத பல விஷயங்கள் பற்றி அவர் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவருடைய வாழ்க்கைச் சூழலும் மதிப்பீடுகளும் கிராமியப் பின்புலத்தையே அடித்தளமாகக் கொண்டிருந்ததால் நாட்டுப்புற இலக்கியம் குறித்த செறிவான தகவல்களையும் பார்வையையும் அவர் கொண்டிருந்தார் படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் உருவாக்கும் இலக்கணத்தை அதிகம் சார்ந்த ஒரு வகையான உயிரற்ற இலக்கியத்தை விட படிக்காத கிராமத்து மக்கள் உருவாக்கிய பாடல்களில் இசைத் தன்மையும், உணர்ச்சிகளும், உயிர்ப்பும் இருந்தன என்பதைக் 'கட்டபொம்முவும், இலக்கியமும்', 'கிராமிய இலக்கியம்', 'தமிழர் நாட்டுப்பாடல்கள்' ஆகிய மூன்று கட்டுரைகளிலும் தெளிவுபடுத்துகிறார்.

கட்டபொம்முவும் இலக்கியமும் கட்டுரை தன்னுடைய ஆங்கிலயே எதிர்ப்பினாலும், வீரத்தினாலும் மக்கள் மனதில் இடம் பெற்ற கட்டபொம்முவைப்பற்றி எப்படிப்பட்ட இலக்கியங்கள் உருவாயின என்பதைக் குறிக்கும் ஒரு கட்டுரை. உண்மையில் பாஞ்சாலங்குறிச்சி வட்டாரத்தில் நடைபெற்ற வீர தீரச் செயல்களும், கட்டபொம்முவுடைய அஞ்சா நெஞ்சமும் பொது மக்களையும், புலவர்களையும் சரித்திர ஆசிரியர்களையும் ஒருங்கே க்வர்ந்ததின் விளைவாகவே அவனைத் தலைவனாகக் கொண்ட சிந்துகளும், காவியமும், வரலாற்று நூல்களும் தோன்றின. கட்டபொம்முவைப் பற்றிய இலக்கியங்களில் இன்று தெரிய வருபவை ஒரு சில தனிப்பாடல்களும், ஒரு பெரிய சிந்து நூலும், ஒரு காவியமும்தான். மற்றவை அழிந்திருக்க வாய்ப்புண்டு என்று அழகிரிசாமி கருதுகிறார்.

கட்டபொம்முவைப் பற்றிய சித்தரிப்பாக அவர் முன்வைக்கும் சில தனிப்பாடல்களும், சிந்துப்பாடல்களும், நமசிவாயப் புலவரின் கலியுகப் பெருங்காவியத்தின் சில பாடல்களும், 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சரவணப் பெருமாள் என்ற புலவர் எழுதிய சீட்டுக்கவிகளும் பழைய தமிழ் இலக்கியப் பாடல்களைப் போன்றே தரமும், சுவையும் கொண்டவையாக இருக்கின்றன.

கறந்த பாலையும்
காகம் குடியாது
கட்டபொம்மு துரை
பேரு சொன்னால் - என்ற சிந்துப் பாடலும்
புந்தியால் இகழ்ந்து கட்ட
பொம்மனைப் பழிந்த பேர்கள்
தந்தங்கள் உதிர்ந்தாற் போல
தாரகை உதிர்ந்த தன்றே

என்ற கலியுகப் பெருங்காப்பியப் பாடலும் அக்காலகட்ட மனநிலையின் பிரதிபலிப்பாகவே அமைந்திருக்கின்றன. நம்மிடையே வாழ்ந்த மக்கள் நாயகர்களைப் பற்றிய இலக்கியங்கள் குறித்த கவனம் ஒரு சமூகத்துக்கு வேண்டும் என்பதையே இக்கட்டுரையில் அழகிரிசாமி வலியுறுத்துகிறார்.

அதே போல் அவருடைய 'கிராமிய இலக்கியம்' என்ற கட்டுரையும் படிக்காதப் பாமர மக்களால் உருவாக்கப் பட்டிருக்கும் கிராமிய இலக்கியம் அதன் உணர்வு, சந்தம் மற்றும் இயல்பான நேரடித்தன்மை ஆகியவற்றால் தோற்றத்தில் வடிவச் செழுமை அற்றது போல் காணப்பட்டாலும்

தனக்குரிய வசீகரத்தைக் கொண்டுள்ளது என்பதை வலியுறுத்துகிறது இலக்கியத்தை ஏதாவது ஒரு அளவில் அனுபவிக்கக்கூடிய சக்தி என்பது எல்லோருக்கும் இருப்பதுதான் பாமரமக்களின் இலக்கியம் என்று சொல்லப்படும நாட்டுப் பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி, பழமொழிகள், கிராமியக் கதைகள் ஆகியவை சிருஷ்டிக்கப்படுவதற்கான மூலகாரணமாக இருந்திருக்கிறது என்று கருதுகிறார் அழகிரிசாமி.

பாமர இலக்கியத்தின் தோற்றம் குறித்து அழகிரிசாமி இவ்வாறு கூறுகிறார்-பாமர மக்களை ஒரு இலக்கியம் வசீகரிக்க வேண்டுமானால் அதில் இசைப் பாங்கும் வாழ்க்கையுடன் இணைந்த இயற்கை உணர்ச்சிகளின் பிரதிபலிப்பும் ஒரு அலங்காரமான வெளிப்பாடும் வேண்டும் இப்படிப்பட்ட இலக்கியங்களே காலம் காலமாக அவர்களால் உருவாக்கப்பட்டும், அனுபவிக்கப்பட்டும் வந்திருக்கினறன. ஆண் பெண உறவு நிலைகள் அதை ஒட்டி ஏற்படும் பிரிவு மரணம், போட்டி சண்டைகள், ஏக்கங்கள், ஆசைகள், கனவுகள் இவையே பாமர இலக்கியத்தின் மூலப் பொருள்களாக இருந்திருக்கினறன பின், வறுமை மற்றும் அதனால் ஏற்படும் வாழ்க்கைக் கஷ்டங்கள வறுமையின் நடுவே தாங்கள் ஆசைப்பட்டவற்றைப் பாடியிருக்கிறார்கள். அல்லது உடலை வருத்தி வேலை செய்யும்போது வேலைக் கஷ்டம் தெரியாமலிருககப் பாடியிருக்கிறார்கள் அல்லது கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கடவுளை நோக்கிப்பிரார்த்தனை செய்யக்கூடிய பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். அவையே ஒப்பாரியாகவும், தாலாட்டாகவும், வீர வழி பாடாகவும் நீதி போதனை செய்யும் பழமொழிகளாகவும் வெளிப்பட்டன.

படித்தவர்களின் உயிர்ப்பற்ற இலக்கியங்களைவிட இயறகை உணர்ச்சியின் ஸ்ருதியில் லயித்து உணர்ச்சி உந்த ஆடிக்கொண்டும் வேலை செய்து கொண்டும் பாடும் பாமரனின் பாடலில் அதிக அழகு இருக்கிறது என்கிறார்.

ஆற்றுக்கு அக்கரையில்
அத்தை மகன் ஒருவனுண்டு-அவன்
வாய் திறந்து பாடையிலே
வாடைப் பட்டு சூலானேன்-என்ற காதலியின் பாடலிலும்
மாசிமழை பேயாதோ
மலையில் வெள்ளம் சாயாதோ
எத்துமீன் ஏறாதோ
எங்கள் பஞ்சம் தீராதோ-

என்ற மழையை வேண்டும் குடியானனின் பாடலிலும் உள்ள அழகும் இதயப் பண்பும் பல படித்தப் புலவர்களின் பாடலிலும் கிடையாது என்கிறார். அழுகிணிச் சித்தர், குதம்பைச் சித்தர் முதலியவர்களின் பாடலும் குறவஞ்சி, பள்ளு, காவடிச் சிந்து, அம்மானை நூல்களும் இந்த நாட்டுப் பாடல் பாணியிலேயே அமைந்தவை. சமூக மற்றும் கலாச்சார நிலைமைகள் மாறி புதிய நாட்டுப்புற இலக்கிய உருவாக்கத்துக்கான சூழ்ல்கள் இன்று மறைந்துகொண்டு வந்தாலும் எண்ணற்ற பழைய நாட்டுப்புற இலக்கியங்கள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவது ஒரு கலாச்சாரத்தின் வளமைக்கு அவசியமானது என்புதை அழகிரிசாமி இக்கட்டுரையில் பலவிதமாக வலியுறுத்துகிறார்.

அதே தொனியில் அவர் எழுதியுள்ள 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' என்ற கட்டுரை நா.வானமாமலை தொகுத்த 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' என்னும் தொகுப்புக்கு அவர் வழங்கிய மதிப்புரையாகும். கடந்த இருபது முப்பது ஆண்டுகளாகத்தான் நாட்டுப் பாடல்களைச் சேகரிக்கவும் நூல்வடிவில் தொகுக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடும் அழகிரிசாமி அப்படித்தொகுக்கப்பட்ட நூல்கள் அனைத்திலும் சிறந்து விளங்குவது நா.வானமாமலையின் இத்தொகுப்பு என்று தனது மதிப்புரையில் குறிப்பிடுகிறார். மேலும் இத்தொகுப்பு வெளிவந்திருக்கா விட்டால் பல அரிய பாடல்கள் அழிந்திருக்கும் என்றும் அவ்வகையில் வானமாமலையின் பணி உவே.சாமிநாதய்யரின் பணிக்கு அடுத்த படியாகச்சொல்லத் தக்கது என்றும் கூறுகிறார். அவருக்கு இந்தப் பாடல்களைச் சேகரித்து அனுப்பிய எஸ் எஸ் போத்தையா, எஸ்.எம்.கார்க்கி, எம்.பி எம் ராஜவேலு, குமாரி பி.சொர்ணம், கவிஞர் எஸ்.எஸ சடையப்பன், கு.சின்னப்ப பாரதி,வாழப்பாடி சந்திரன் ஆகிய ஏழு பேருடைய பணிகளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கிறார் தமிழ்ப் புலவர்களோ சர்வ கலாசாலைகளோ, அரசாங்கமோ, தமிழ் வளர்ப்பதற்கென்று லட்சக்கணக்கான மூலதனத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்களோ சங்கங்களோ செய்யாத, செய்யவும் நினைக்காத ஒரு ஒப்பற்ற பணியை இந்த தொகுப்பாசிரியரும் அவருக்கு உதவி செய்த இந்த ஏழுபேரும் செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் திரட்டப்பட்ட இப்பாடல்கள் தெய்வங்கள், தாலாட்டு விளையாட்டுகள, காதல், திருமணம், குடும்பம், சமூகம், உழைப்பும் தொழிலும், ஒப்பாரி ஆகிய 9 பகுதிகளில் மொத்தம் 372 பாடல்களாக உள்ளன ஒவ்வொரு பாட்டுக்கும் பொருத்தமான தலைப்பும் அதில் காணும் வட்டார வழக்குகளுக்குப் பொருளும் அதைச்சேகரித்தவரின் பெயரும்

கொடுக்கப்பட்டு ஒவ்வொரு பாட்டுக்கும் சுருக்கமான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன என்று அழகிரிசாமி பாராட்டுகிறார்.

தொகுப்பு குறித்துச் சில விமர்சனங்களை முன் வைத்து சில விடுபடல்களையும் குறைகளையும் சுட்டிக்காட்டுகிறார் சமூக மற்றும் வரலாற்றுப் பின்னணியுடனேயே முன்னுரையும், பாடல் விளக்கமும் அமைந்திருந்தாலும் அழகியல் கோணத்துடனும் அவை அணுகப்படவேண்டும் என்கிறார். சமூகக் கதைப் பாடல்களில் சுடலை மாடன் வில்லுப்பாட்டும், கான் சாகிப் சண்டையும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். 1876ல் ஏற்பட்ட தாது வருஷப் பஞ்சத்தைப் பற்றிச் சில நாடோடிப் பாடல்களே குறிப்பிடுகின்றன. புலவர்கள் யாரும் அதைக் குறிப்பிடவில்லை என்று வானமாமலை சொல்லியிருப்பதற்குப் பதிலாக சிவகங்கையை அடுத்த பிரமனூரில் வாழ்ந்த வில்லியப்ப பிள்ளை தாதுவருஷப் பஞ்சத்தைப் பற்றி பஞ்சலட்சணத் திருமுக விலாசம் என்ற ஒரு அரிய நூலை இயற்றி 1899 ல் அதை அரங்கேற்றியதைக் குறிப்பிடுகிறார். அதே போல் 1892ம் ஆண்டு நடைபெற்ற சிவகாசிக் கொள்ளை பற்றிய நாடோடிப் பாடல் உண்மையில் கோவில்பட்டி கணபதி நாயுடு இயற்றிய பாடலாக இருப்பதற்கு வாய்ப்பிருப்பதாக கூறுகிறார் இவ்வாறு சில குறைகளைச் சுட்டிக்காட்டும் அழகிரிசாமி தொகுப்பிலுள்ள சிறப்பான பாடல்களையும் விரிவாகக் குறிப்பிடுகிறார் இப்படி நூற்றுக் கணக்கான அழகிய நாட்டுப் பாடல்களைக் காப்பாற்றித் தமிழ் மக்களுக்குக் கொடுத்ததற்காக தொகுப்பாளர்களுக்கு நன்றியைத் தெரிவிககிறார் இம்மூன்று கட்டுரைகளும் அழகிரிசாமியின் நாட்டுப்புறவியல் ஈடுபாட்டுக்கான சிறப்பான அடையாளங்களாக அமைகின்றன நாட்டுப்புற இலக்கியங்களின் அருமைகள் உணரப்பட்டு அவை முறையாகச் சேகரிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும என்பதற்கான ஒரு ஆழ்ந்த குரல் இக்கட்டுரைகளில் ஒலிக்கிறது .

அழகிரிசாமியின் 'இலக்கியத்தில் ஆபாசம்' என்னும் கட்டுரை ஒரு முக்கியமான கட்டுரையாகும் மிகுந்த பொறுப்புணர்வோடும், ஆபாசம் குறித்த தவறான பார்வைகளுக்குப் பதில் சொல்லும் விதமாகவும் மிகவும் சிறப்பாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. உள்ளத்தில் ஆபாசத்தைத் தேக்கி வெளியே முற்போக்கு வேஷம் போட்டுக் கொண்டு சமூகத்தின் ஒழுக்கம் கெட்டுப் போய் விடும் என்று புலமபும் போலி இலக்கியவாதிகளைச் சாடும் விதமாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது உடற்கூறு சம்பந்தப்பட்ட சில மேலோட்டமான குறிப்புகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு நல்ல நோக்கம் கொண்ட இலக்கியத்தை ஆபாசம்

என ஒதுக்கித் தள்ளுவது ஆரோக்கியமான பார்வை அல்ல என்பதை இக்கட்டுரையில் நிறுவுகிறார் அழகிரிசாமி.

அவர் இவ்வாறு எழுகிறார்: "தமிழ் இலக்கியம் சம்பந்தப்பட்ட மட்டில் காதல், தூது, உலா, மடல், முதலிய பிரபந்தங்களில் முக்கியமாகக் காதல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாமே ஒளிவு மறைவின்றி அநேகமாக கூறப்படும். இந்தப் பிரபந்தங்கள் மக்களுக்குக் காம உணர்ச்சி ஊட்டவே எழுதப்பட்டவை என்பதற்கு ஒரு சிறு சான்று கூடக்காட்ட முடியாது. அவை சில பாட்டுடைத் தலைவர்களைப் புகழுவதற்காகத்தான் பாடப்பட்டனவே ஒழிய அவர்களுக்குக் கெட்ட உணர்ச்சியூட்டுவதற்காக அல்ல. அந்தப் பாடல்களை வாசிப்பவர்கள் கெட்டுப் போக வாய்ப்புண்டு என்றால் அது குருவி உட்காரப் பனம் பழம் விழுந்த மாதிரிதான். அப்படிக் கெட்ட மனப்பக்குவத்துக்கு இலக்கியத்தையே குற்றம் சாட்டுவது நேர்மை அல்ல-இலக்கியம் போய்த்தானா காம உணர்ச்சியை சொல்லிக் கொடுக்க வேண்டும். மதன சாஸ்திரங்களைப் பிரமாதமாக ஆராய்ந்து எழுதியிருக்கும் மேல் நாட்டு அறிஞர்கள் எல்லாம் சமூக அமைப்பின் சீர்கேட்டில்தால் சமூகத்தின் ஒழுக்கம் பாழாகிறதென்று சான்றுகளோடு எழுதியிருக்கிறார்கள்-சமூகத்தின் ஒழுக்கம் எப்படிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற விஷயங்கள் இன்னும் சர்ச்சையில் தான் இருந்து கொண்டிருக்கின்றனவே ஒழிய திட்டமான ஒரு முடிவை எட்டவில்லை இப்படிப்பட்ட நிலையில் நாம் முன்கூட்டியே நம் இலக்கியங்களை ஆபாசம் என்று வீண் குற்றம் சாட்டியதோடு நில்லாமல் அவைகளை இருக்கும் இடம் தெரியாமல் அரசாங்கமும், மெஜாரிட்டியாக இருக்கும் வேஷக்காரக் கும்பலும், நாமுமாகச் சேர்ந்து பண்ணியது மிகவும் விசித்திரமாகவும் விபரீதமாகவும் இருக்கிறது- காதல் சம்பந்தப்பட்ட விவகாரங்களை அரைகுறையாகவும் ஒளித்தும் மறைந்தும் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற ரீதியில் சொல்வதும் எழுதுவதும் தான் காம உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதன் மூலம் கெட்ட விளைவுகளுக்குக் காரணமாகவும் இருக்க முடியுமே ஒழிய, சாஸ்திரோக்தமாகவும், விஷயத்தைத் தெரிவிக்கும் முறையில் கலைப் பண்போடும் உண்மைகளை, காதலின் ரகசிய அம்சங்களை எழுதுவது கெட்ட உணர்ச்சிகளைப் பூதாகரமாகப் படமெடுத்து ஆடச் செய்துவிடாது என்பது சமூக நலனையும் மனித உணர்ச்சிகளையும் அனுதாபத்தோடு கவனித்துக் கருத்துகளைப் பொறுப்போடும் நாணயத்தோடும் வெளியிடும் அறிஞர்களின் கூற்று ஆனால் இன்று ஆபாசமில்லாதவை என்று கூறப்பட்டு பகிரங்கமாக வெளியில் உலவும் இலக்கியங்கள் தான் மேற்சொன்னவாறு மக்களிடையே ஆவலைக் கிளப்பிவிடும் தோரணையில் இருக்கின்றன இயற்கை ரகசியங்களை இலக்கியத்தில்

படிப்பதின் மூலம் இளைஞர்கள் மனம் பாழ்படும் என்பது அபத்தம். அதற்குப் பதிலாக அவர்கள் சரீர மர்ம சாஸ்திர ஞானத்தையும் சரீர மர்ம நிகழ்ச்சிகளைப் பற்றிய சுகாதாரத்தையும் நன்கு உணர்ந்து கொள்ள வழி ஏற்படுகிறது அதனால் தாம்பத்ய வாழ்வில் காம சாஸ்திர ஞான மின்மையால் ஏற்படும் ஆபாசமான விவகாரங்களையும் பூசல்களையும் தீராக் குரோதங்களையும், வீண் பயங்களையும் போக்கிவிட முடியும். நல்ல இலக்கியங்களில் இப்படி விஷயங்கள் கூறப்பட்டால் கீழ்த்தரமான பாணியில் எழுதப்படும் புத்தகங்களின் மதிப்பைக் குறைத்துவிட முடிகிறது என்று சரீர மர்ம சாஸ்திரத்தைத் தத்துவ ரீதியில் ஆராய்ந்துள்ள பிரபல நிபுணர் ஹேவ்லாக் எல்லிஸ் கூறுகிறார். சித்திரத்தில் நிர்வாணத்தைப் பார்த்துப்பழகிக் கொண்டவன் பிரத்யட்சத்தில் பார்க்கும் நிர்வாணக் கோலத்தைச் சித்திரத்தைப் பார்ப்பது போலவே பார்க்க முடியும் என்பது ஹீலர் என்ற அறிஞனின் வாசகம்- மேற்சொன்ன தப்பான மனோபாவம் நாட்டில் நிலவுவதின் காரணமாக இலக்கிங்கள் மட்டுமல்லாமல் நூற்றுக்கணக்கான நாட்டியப்பதங்களும் இருப்பதா சாவதா என்றிருக் கின்றன- இப்படிப் பட்ட இலக்கிய நூல்களும் பத சாஹித்யங்களும் இந்த நிலையில் இருந்து வந்தால் இந்தத் தலைமுறையோடு இலக்கியத்திலும் சங்கீதத்திலும் ஒவ்வொரு முக்கியமான பகுதி அழுகி விழுந்து விடும் அவைகளை இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் பாதுகாக்கத் தவறினால் அவைகளுக்கு ஆபத்து என்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.''

பாலியல் தன்மையையும் ஆபாசத்தையும் தரம் பிரித்து உணரத் தெரியாமல் வாழ்வின் இயல்பான உணர்ச்சி வெளிப்பாடுகளை மலினப் படுத்திப் பார்க்கும் வறட்டுப் பார்வைக்குப்பதிலாக அமைந்த இக்கட்டுரை ஒரு சமூகம் ஆரோக்கியமானப் பார்வையுடன் இலக்கியத்தில் தென்படும் வாழ்வியல் தன்மைகளை அங்கீகரிக்க வேண்டும் என்ற அழகிரிசாமியின் ஆழ்ந்த ஆதங்கத்தைப் புலப்படுத்துகிறது

இதே போல் 'புரியும் கதை புரியாத கலை' என்ற கட்டுரையில் தங்களுக்குப் புரியாத விஷயங்களை ஒரு கோஷ்டியினர் புரியாத கலை 'என்று முத்திரை குத்தி ஒதுக்கும் மனப்போக்கைக் கடுமையாக சாடுகிறார் இவ்வாறு புரியாத விஷயங்களை முத்திரை குத்தி ஒதுக்கும் மனப் போக்குக்குப் பின்னால் உள்ள தவறான பார்வைகளை இக்கட்டுரையில் அழகிரிசாமி அம்பலப்படுத்துகிறார். பொது ஜனங்களுக்குப் இது புரியாது என்று சொல்பவர்கள் உண்மையில் தங்களுக்கு அது புரியவில்லை என்பதை மறைப்பதற்காவே பொது ஜனங்களை கேடயமாகப் பயன் படுத்துகிறார்கள் உண்மையில் தங்களுக்கு ஒரு விஷயம் புரிந்து விட்டு.

மற்றவர்களுக்கு அது புரியாமல் போனால் அவர்களுக்கு அறிவில்லை என்று கூற இவர்கள் தயங்குவதில்லை. அதனால் இந்த புரியவில்லை என்கிற கோஷம் பெரும்பாலும் தன்னிலை சார்ந்தவைதான். ஆனால் உண்மையில் பொதுநல நோக்கில் ஒரு விஷயம் எல்லோருக்கும் புரிய வேண்டும் என்று விரும்புபவர்களும் இருப்பார்கள். அவர்கள் இலக்கியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறை செய்து கொண்டவர்கள். தங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கும் வரையறை களுக்கும் அப்பாற்பட்ட எதையும் அவர்கள் இலக்கியமாகக் கருதுவதில்லை. ஆகையால் அவர்களுடைய வாதமும் பொருட்படுத்தக் கூடியதல்ல என்று அழகிரிசாமி கருதுகிறார். ஒரு தனி நபருக்கோ அல்லது ஒரு சிறு கூட்டத்துக்கோ அன்றி மெஜாரிட்டியான கூட்டத்துக்கோ புரியவில்லை என்பதற்காகக் கலையைக் கலையல்ல என்று முடிவு கட்ட முடியாது என்று கூறுகிறார்.

ஒரு கவிஞன் என்பவன் தன்னுடைய கவிதைப் பொருளுக்கே அதிகம் கட்டுப்பட்டவனாக இருக்கிறான். கவிதைக்கு எளிமை தேவைதான் ஆனால் எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடிய விஷயங்களைத்தான் எழுத வேண்டும் என்று அவன் தன்னை நிர்ப்பந்தித்துக் கொண்டால் அவனால் என்றைக்கும் உயர்ந்த இலக்கியம் படைக்க முடியாது சமூகச் சீர்திருத்தக்காரர்களும் பொழுது போக்கு ஆசாமிகளும் தங்களுடைய கைக் கருவியாக மட்டும் இலக்கியத்தைப் பயன்படுத்த முயலுவது அறியாமையே. இலக்கியத்தை சிருஷ்டிக்கும் கர்த்தாவின் பிரதான நோக்கம் மனித இதயத்தை ஆராயும் இலக்கியம் தான். அப்பட்டமான பிரச்சாரமோ பொழுதுபோக்கோ அல்ல. விக்டர் ஹ்யுகோ, சார்லஸ் டிக்கன்ஸ், லியோ டால்ஸ்டாய் ஆகியோர்களின் இலக்கியங்கள் இலக்கியங்களாக இருந்ததுடன் சமூகத்தைச் சீர்திருத்தவும் பயன்பட்டன. எல்லா நல்ல இலக்கியங்களும் தமக்குரிய பின் விளைவுகளை உள்ளடக்கியவை. இலக்கியம் அமைவதைப் பொறுத்து இந்த விளைவுகள் தாமே உருவாகின்றன.

சாதாரண பொதுமக்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் வரையறைகள் கொண்டவை. அக்கறையுள்ளவர்கள் சிறிது சிறிதாக நல்ல இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து தங்கள் ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நிலையிலேயே உயர்ந்த இலக்கியங்களை அவர்கள் அனுபவிக்க முடியும். ஆனால் எந்த முயற்சியும் செய்யாமல் மகம்மதை நோக்கி மலை வரட்டும் என்றிருந்து இலக்கியம் வேலைக்காரனைப் போலவோ காதலியைப் போலவோ தங்களுக்கு உதவியும் உவகையும் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களுக்கும் இலக்கியத்துக்கும்

சம்பந்தமே கிடையாது. கவிஞடைய ஸ்தானத்துக்கு இல்லாவிட்டாலும் கவிஞனுடைய சிருஷ்டிகளை அனுபவிக்கும் தகுதிக்காவது தங்களை உயர்த்தப் பாடுபடுவதுதான் கலையனுபவத்தை விரும்பும் மக்கள் கடமை என்று அழகிரிசாமி கருதுகிறார்

உண்மையில் கலை முயற்சியில், அக்கறைக் கொண்ட ஒரு சிறுகூட்டம் தான் இலக்கியத்தைப் பேணி வளர்க்கிறது எந்தக் காலத்திலும் எல்லோரும் இலக்கியத்தையும், நுண் கலைகளையும் புரிநது கொண்டிருக்கிறார்கள் என்றோ விரும்பி அனுபவிக்கிறார்கள் என்றோ சொல்லமுடியாது அதனால் பொது ஜனங்களின் தற்போதைய ரசனைக்குக் கவிஞன் இறங்கி வந்து தானும் முன்னேறாமல் பொது ஜனங்களையும் முன்னேற விடாமல் கெடுத்துவிடக் கூடாது ஆனால் இந்த புரியும் கலை கோஷ்டியினர் இத்தகைய ஆபத்துக்கே வழி கோல முயலுகிறார்கள் பல சந்தர்ப்பங்களில் சிருஷ்டிக் கலைஞனுக்கே தன்னுடைய கலையை விளக்க முடியாத சூழ்நிலைகள் நேர்வதுண்டு ஆங்கிலக் கவிஞர் ராபர்ட் ப்ரௌனிங்க் குக்கும், தமிழ் எழுத்தாளர் புதுமைப்பித்தனுக்கும் கூட இது நேர்ந்திருக்கிறது ஒரு அதீத நிலையில் புனைந்த ஒரு இலக்கியத்தின் பொருளை ஒரு சராசரி விளக்கத்துக்கு உட்படுத்துவது எளிதான காரியமல்ல' புரியாத இலக்கியம எனறு தூஷிபபவர்கள் தாங்களும் பொதுமக்களும் கலையனுபவத்தில் என்றைக்கும் முன்னேற்றம் அடையப்போவதில்லை என்று நம்புகிறார்கள் முன்னேற்றம் கூடாது என்றும் வற்புறுத்துகிறார்கள் என்று தங்களுடைய கற்பனைக் குறைவைச் சரிககட்ட கோஷடி கட்டும் மனப்பான்மையைக கடுமையாக விமர்சிக்கிறாா அழகிரிசாமி

புரியவே புரியாத கலை என்றுஎதுவுமே கிடையாது படைப்பாளிக்கும் பொதுவாசகனுக்கும் இடையே எப்போதும் ஒரு சிறிதான இடைவெளி நிலவுகிறது ஆனால் அது எப்பொழுதும் கடக்கக் கூடியதே சில அரைகுறை இலக்கியவாதிகளால்தான் அந்த இடைவெளி பெரிதாகிறது என்கிற கருத்துக்கள் இன்றும் கவனம் கொள்ளத்தக்கவைகளாக உள்ளன

'அச்சக மையின் அபார சக்தி' என்ற தனது கட்டுரையில அழகிரிசாமி பத்திரிகைத துறையில் தனக்கு ஏற்பட்ட எதிர்ப்பாராத அதிர்ச்சிகளையும், ஆபத்துக்களையும் பற்றி விரிவாகக் கூறிவிட்டு எவவளவு விரோதங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் எவ்வளவு நாள் பட்டினி கிடக்க நேர்ந்தாலும் இந்த ஒரு தொழில் தான் எனக்குப் பிடித்தத் தொழில் அதுதான் கறுப்பு மையின் அபார சக்தி இந்த மைக்கு முன் எந்த மந்திரவாதியின் மையும் நிற்க முடியாது என்கிறார்

பிரம்மச்சாரி கல்யாணத்தைப் பற்றியும் கல்யாணம் செய்து கொண்டவன் அதிலிருந்து விடுபடுவது பற்றியும் கவலைப்படுவது போல ஒவ்வொரு எழுத்தாளனும் பத்திரிகைத் தொழிலில் புகுவதற்கு முன்னும் பின்னும் கஷ்டத்தைத் தான் அனுபவிக்கிறான். ஆனால் அந்தக் கஷ்டத்தில் ஒரு மாயச்சுகமும் இருக்கிறது. அந்த மாயக் கவர்ச்சியால் இழுக்கப்பட்டு, பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க வேலையை உதறிவிட்டு வந்தவர் தானே அழகிரிசாமி. ஆரம்ப காலத்தில் அவர் எழுதிய சாதாரண கதை கட்டுரைகளைக் கூட அப்படியே பிரசுரித்து வந்த ஒரு ஆசிரியர் அவர் பத்திரிகையில் இவர் உதவி ஆசிரியராகச் சேர்ந்ததும் இவருடைய நல்ல கதைகளையும் கட்டுரைகளையும் கூட திருத்த ஆரம்பித்ததைக் கூறுகிறார் அதனால் அந்தப் பத்திரிகையை விட்டு விலகும் வரையில் எதையும் எழுதுவதில்லை என்று இவர் முடிவு எடுக்க வேண்டி வந்தது. ஒரு முறை சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக வாய்ப்புள்ள ஒரு தியாகியை ஆதரித்து இவர் கட்டுரை எழுதியிருந்த பத்திரிகையின் இன்னொரு பக்கத்தில் தலைமை ஆசிரியர் இவர் கட்டுரை எழுதியது தெரியாமல் போட்டி வேட்பாளரை ஆதரித்து அவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இரண்டும் பிரசுரமாகி விமர்சனங்கள் வந்த போது சங்கடத்துக்குள்ளாகி பயத்துடன் ஆசிரியரை அணுகிய போது அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று ஆசிரியர் கூறி இவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் அதே போல் ஒரு முதலாளியின் போக்கைக் கண்டித்து ஒரு தொழிலாளி எழுதிப் பத்திரிகையில் பிரசுரமான ஒரு கடிதத்தில் இருந்த ஒரு மோசமான உருது வார்த்தைக்காக அழகிரிசாமி பல சங்கடங்களை அனுபவிக்க வேண்டி வந்தது

இவையெல்லாம் அவருக்குப் பல அனுபவங்களை அளித்தாலும், பல சந்தர்ப்பங்களில் அவர் பத்திரிகைத் தொழிலை விடுவதற்கு மனமில்லாமல் பேசினாலும் பத்திரிகை வேலை இலக்கிய ஆற்றலைச் சிதைக்கக் கூடியது என்பதில் அவர் உறுதியான கருத்து கொண்டிருந்தார். அதிலும் முக்கியமாகத் தினசரி பத்திரிகையில் வேலை செய்வது படைப் புணர்வுக்குச் சாவுமணி அடித்துவிடும். புதுமைப் பித்தன் போன்ற மேதைகள் தான் அதைத் தாக்குப்பிடிக்க முடியும் தன்னால் இயலாது என்று அழகிரிசாமி கருதினார் ஆனால் தன்னடக்கமாக அழகிரிசாமி இவ்வாறு கூறினாலும் பத்திரிகையில் இருந்து கொண்டே தன் குறுகிய வாழ்நாளில் முழுநேர எழுத்தாளர்களைக் காட்டிலும் அதிகமான இலக்கியப் பங்களிப்புகள் செய்திருக்கிறார் ஆனால் அதற்கு அவர் கொடுத்த விலைதான் சோகமானது

'கவிதையைக் கண்டறிந்தவர்' என்ற கட்டுரையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பண்டிதர்களும், புலவர்களும் தமிழின் யாப்பிலக்கணப்படி இயற்றப்பட்ட செய்யுள்களையே கவிதைகள் என போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எது கவிதை என்று உணர்வுப்பூர்வமாகக் கவிதைய்யைப்பிரித்து உணரக் கூடிய ஒரு ரசனை முறையை உருவாக்கி அதைப்பிரபலபடுத்தியவர் என்று டி கே.சியின் தமிழ்த் தொண்டை நினைவு கூர்கிறார் அழகிரிசாமி.

கவிதைக்கு ஒரு உருவம் உண்டு, பாவம் உண்டு தாளலயம் உண்டு என்பதைத் தக்க விளகங்களுடன் எடுத்துரைத்து யாரும் கவிதையை ரசிக்க முடியும் என்கிற உணர்வை உருவாக்கியவர் டி கே சி இவ்வாறு கவிதையின் உண்மை இயல்பைப் பல்லாண்டுக் காலம் சொல்லி கவிதையைப் பண்டிதர்களிடமிருந்தும புலவர்களிடமிருந்தும் விடுவித்தவர் டி கே சி என்கிறார் கவிதை உணர்ச்சி அழிந்தொழிந்த காலத்தில் தமிழக் கவிதைக்குபபுத்துயிர் கொடுததவர் பாரதியார் என்றால் தமிழ்க் கவிதையை இனம் கண்டு விளக்குவதற்குப் பிறந்தவர் டி கே சி என்று குறிப்பிடுகிறார் இலக்கணப்பித்து சமயப்பித்து ஆகியவற்றுடன் அவர் கவிதையை அணுகியதில்லை திருவாசகத்தையும, காரைக்கால் அம்மையார் பாடியவற்றையும் கவிதையாகப போற்றும் அவர் பெரிய புராணத்தையோ திருவிளையாடற் புராணத்தையோ கவிதை நூல்கள என்று கூறுவதிலலை கமபராமாயணத்தை ஒப்பற்ற இலக்கியமாகப் போற்றும் அவர் நம்மாழ்வாரைக் கவிஞர் என்று சொல்வதில்லை புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பாவில் வெணபாவின் பிரத்யேக உருவமோ கவிதைக்கு இருக்கவேண்டிய சிறப்புகளோ இல்லை என்பதை எடுத்துக் கூறி முத்தொள்ளாயிர வெண்பாக்களதான் சிறப்பானவை என்பதை நிலைநாட்டியவர்

டி கே சி யின் ரசனை முறையைக் கூறும்போது ஒரு பாடடை எடுத்து வைத்துக கொண்டு அதைப் பாடும் போது தோன்றும் ஓசை நயத்தையும தாள லயத்தையும் அவர் கூர்ந்து கவனிப்பதாகக் குறிப்பிடுகிறார் பாட்டின் பொருளுக்கேற்பச் சொற்களிலும் சந்தத்திலும் வேகமும் உணாசசியும் இருக்கிறதா என்றும் கவனிபபார் ஒரு கருத்தை ஒரு உருவ அமைதியுடன், பூரணமான உணர்ச்சிச் செறிவுடன் பாட்டு எடுத்துரைக்கிறதா மேலும் பொருள் நயம், ஓசை நயம், உருவம்,பாவம் போன்ற அம்சங்கள் எல்லாம் ஒருங்கே காணப்பட்டால் தான் அதைக்கவிதை என அங்கீகரிப்பார் இவ்வாறு அரசியலோ, சமயமோ, பழமை மோகமோ, இன்றி தர்க்கப்பூர்வமாகக் கவிதை குறித்த அணுகுமுறையைத் தரப்படுத்தி

அனைவரும் உணர்ந்து ரசிக்க வகை செய்து, கவிதையின் மதிப்பை உயர்த்தியவர் என்று டி கே சி.யின் இலக்கியத் தொண்டை நினைவு கூர்கிறார்.

ஆனால் டி.கே.சியின் கருத்துக்கு மாறுபட்டுக் கவிதையை வேறு விதமாக அணுகக்கூடிய அணுகுமுறைகளுக்கும் இடமுண்டு என்பதை ஏற்கிறார் அழகிரிசாமி. இன்று கவிதைக் கோட்பாடுகள் மேலும் செழுமையடைந்துள்ள காலகட்டத்தில் கவிதையைக் குறித்த மாறுபட்ட அணுமுமுறையை முதலில் பிரபல படுத்திய டி.கே.சியை அழகிரிசாமி நினைவுகூர்ந்த செயல் அவரது கவிதை ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாகவே உள்ளது.

அதே போல் 'தமிழ்ச் சிறுகதைகளின் பொற்காலம் இது' என்ற கட்டுரையில் சிறப்பான சிறுகதைகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் கவனத்தைச் சிறுகதையின் பக்கம் திருப்பிய சாதனையாளர்களை நினைவு கூர்கிறார். தமிழ்ச் சிறுகதையில் சிறப்பான சாதனைப்புரிந்தவர்கள் என்று புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், ஜானகிராமன், சுந்தர ராமசாமி ஆகிய நால்வரையே முக்கியமாகக் குறிப்பிட்டாலும் ந.சிதம்பர சுப்ரமணியம், பி எஸ். ராமையா, சி.சு செல்லப்பா, க நா.சுப்ரமணியம், ந.பிச்சமூர்த்தி, ஆ.மாதவன், கிருஷ்ணன்நம்பி, ஆகிய சிறுகதை ஆசிரியர்களையும் குறிப்பிட்டு இத்தகைய எழுத்தாளர்களால் ஏற்பட்டுள்ள சிறுகதை வளர்ச்சி மற்ற மொழிகளில் எழுத்தாளர்களால் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மகத்தானது என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இலக்கியம் சார்ந்தும் நுண்கலைகள் சார்ந்தும் சமூகப் பணி சார்ந்தும் சிறப்பான சாதனையாளர்களைப்பற்றி எழுதுவதைத் தம் கடமையாகக் கருதுகிறார். தம்முடைய இசைச் சிறப்பாலும், கவிதைச் சிறப்பாலும் படிப்போரையும் பாமரரையும் வசீகரித்த ராமலிங்க அடிகளாரைப் பற்றியும், இந்தியக் கலைகள் மற்றும் கலாச்சாரத்தின் பெருமைகளை உலகறியச் செய்த ஆனந்த குமாரசாமியைப் பற்றியும், தமிழ்ப் பத்திரிகைத் துறையிலும் புத்தக வெளியீட்டுத் துறையிலும் முன்னோடியாகவும், சாதனையாளராகவும் திகழ்ந்த வை கோவிந்தன் பற்றியும், வெளிநாட்டில் பிறந்தவரானாலும் இந்தியாவைத் தம் தாய்நாடாக ஏற்று இங்கு அரசியல் விழிப்புணர்வுக்காகவும் சமூக விழிப்புணர்வுக்காகவும் பாடுபட்ட அன்னி பெஸண்ட் பற்றியும் எழுதப்பட்ட கட்டுரைகள் அவர்களுடைய அரிய சாதனைகளை நினைவு கூர்பவை இனனும் சிற்றிலக்கியங்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், நக்கீரரிலிருந்து புதுமைப்பித்தன் வரை 1300 ஆண்டுக் காலத்தில் 74 ஆசிரியர்களின் உரைநடை பாணியைப் பற்றிய அவர்

கட்டுரையும, டி.கே.சியிலிருந்து புதுமைப்பித்தன் வரை அவர் சந்திக்க நேர்ந்த எழுத்தாளர்களுடன் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிய கட்டுரையும், பாரதியார் பயன்படுத்திய கோவில்பட்டி வழக்குகள் பற்றிய கட்டுரையும் சிறப்பான மனநிலைகளைத் தாங்கி, அரிய தகவல்கள் கொண்டவை.

புனைவு சார்ந்து பல்வேறு மனித உணர்வுகளையும் வாழ்க்கை நிலைகளையும் வெளிப்படுத்த அழகிரிசாமி சிறுகதைகளைப் பயன்படுத்தியது போல் நடைமுறை வாழ்க்கை சார்ந்தும் அழகியல் அணுகுமுறை சார்ந்தும் பல்வேறு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தக் கட்டுரை வடிவத்தை அவர் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்

# 4
# பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடு

தமிழ் மொழியைப் பொறுத்தவரை இலக்கிய ஈடுபாடு என்பது இரண்டு வகைப்பட்டதாக இருக்கிறது ஒன்று பண்டைய இலக்கியங்களின் வாயிலாக இலக்கியம் பற்றிய உணர்வைப்பெறுவது மற்றொன்று நவீன இலக்கியங்கள்வாயிலாக இலக்கியம் பற்றிய உணர்வு பெறுவது. பெரும்பாலும் பண்டைய இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள் நவீன இலக்கியங்களை ரசிக்கும் மனநிலை பெறுவதில்லை. அதே போல் நவீன இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள் பழைய இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை சிறிய வயதில் பள்ளிகளில் தமிழ் இலக்கியம் பற்றித் தாங்கள் தெரிந்து கொணட விஷயங்களே போதுமானதென்று நினைக்கிறார்கள் ஆனால் இந்த இரண்டு பார்வைகளும் மேலோட்டமானவையே. உண்மையில் இலக்கியம் என்பது புதியது-பழையது என்கிற வரையறைகளுக்குள் அடங்குவதில்லை அது நீண்டு தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு தேடலின் தொடர்ச்சியே ஆகும் வாழ்க்கைக்கான தேடல்கள் எல்லாக்காலத்திலும் மனிதனின் அடிப்படை உணர்வுகளாக இருந்திருக்கின்றன. இலக்கியத்தை வாழ்க்கைத்தேடலின் ஒரு பிரதிபலிப்பாகக கொண்டால் அந்த வாழ்க்கைத் தேடலின் வடிவங்கள் தான் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாறிக் கொண்டிருப்பவை இலக்கியத்துக்கு ஆதாரமான அடிப்படை உணர்ச்சிகள் மாறாதவைகளாகத் தான் இருக்கின்றன பழைய இலக்கியத்தில் உள்ள சுவையை ஆழ்ந்து ரசிக்கும் ஒருவர் அந்த வாழ்க்கைச் சூழலின் மாறுபட்ட இன்றைய வடிவத்தின் பிரதிபலிப்புகளை நவீன இலக்கியத்தில் சுலபமாக அடையாளம் காணமுடியும் அதே போல் நவீன இலக்கியப் போக்குகளின் ஆதாரமான வாழ்க்கை உணர்வுகளை அங்கீகரிக்கும் எவரும் அவைகளின் கடந்தகாலப் பிரதிபலிப்புகளை பண்டைய இலக்கியங்களில் சுலபமாக இனம் காணமுடியும் உண்மையில் ஒரு நவீன இலக்கியப் பார்வைக்கு பண்டைய இலக்கியச சொல்லாடலகள், மரபு, இலக்கிய வரலாறு இலக்கிய கருத்தாக்கங்கள் போன்றவை எலலாம் என்றைக்கும் உத்வேகமூட்டும் விஷயங்களாகவே இருக்கின்றன உண்மையில் அவைகளிலிருந்து உரம்

பெற்றுத்தான் நவீன இலக்கியம் தன்னை வளப்படுத்திக் கொள்கிறது. அழகிரிசாமி பண்டைய இலக்கியக் கருத்தாக்கங்களால் வளம் பெற்ற ஒரு நவீன இலக்கியவாதியாக விளங்குகிறார். பழைய இலக்கியம், புதிய இலக்கியம் என்றெல்லாம் வரையறை செய்து கொள்ளாமல் தான் சிறு வயதில் கற்றுத் தேர்ந்த பண்டைய இலக்கியங்களால் பெற்ற உணர்வுகளின் அடித்தளத்தில் அவற்றின் விரிவாக நவீன இலக்கியங்களை வந்தடைந்துத் தம் பார்வையை வடிவமைத்துக் கொண்டவராக இருக்கிறார்.

அதனால்தான் பழந்தமிழ் இலக்கியங்களை அவற்றின் கவிதைச் சிறப்பு, சொல்வளம், ஓசை நயம் இவற்றுக்காக ரசித்தாலும் அவற்றை வெறும் பண்டித மனப்பான்மையுடன் அணுகாமல் ஆதாரமான வாழ்க்கை உணர்வுகள் மற்றும் மதிப்பீடுகளின் பின்புலத்தில் அவைகளை அணுகக் கூடிய பார்வை பெற்றிருக்கிறார். அக்காலத்தில் மேலோங்கியிருந்த சமய நோக்கு கடவுள் நம்பிக்கை அரச வழிபாடு ஆகியவை கடந்த இலக்கிய உணர்வுகளை அவரால் அடையாளம் காணமுடிகிறது. பல்லாயிரக் கணக்கில் உள்ள இலக்கணப்படி அமைந்த செய்யுள்களிலிருந்து நல்ல கவிதைகளை அவரால் தரம் பிரித்துப் பார்க்க முடிகிறது.புகழேந்தியின் நளவெண்பாவைவிட - முத்தொள்ளாயிர வெண்பாக்கள் மிகச் சிறப்பானவை என்று இனங்காண முடிகிறது. அதே போல் வில்லி பாரதத்தைவிடக் குற்றாலக் குறவஞ்சியையும், பெரிய புராணத்தையும் கந்தபுராணத்தையும் விட முக்கூடற்பள்ளும் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தும் சிறப்பான நூல்கள் என்று அவரால் எடை போட முடிகிறது. இவ்வாறு அவர் பெற்ற தர்க்கரீதியான இலக்கிய அடிப்படைகள் அவருடைய நவீன இலக்கியத் தொடர்பால் அவருக்கு உருவானவையே. இதனால் பழைய இலக்கியங்களின் மேன்மைகளை வாழ்வியல் சார்ந்த புதிய விளக்கங்களுக்கு அவரால் உட்படுத்தமுடிகிறது

இத்தகைய ஒரு இலக்கியத் தேடலில் அவர் கண்ட ஒரு உண்மை நம்முடைய எண்ணற்ற இலக்கியச் செல்வங்கள் முறையாகத் தொகுக்கப் படவில்லை என்பது தான். இன்று நாம் ரசிக்கும் பழைய இலக்கியங்கள் பலவும் ஒரு சிலரின் கடும் முயற்சியால் தொகுக்கப்பட்டவைதான் என்று அவர் கருதுகிறார். தமிழ்மொழியில் தோன்றியுள்ள ஆதி இலக்கியங்களே தனிப்பாடல்களின் திரட்டு தான். புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு குறுந்தொகை போன்ற பழைய நூல்களில் எதுவும் ஒரே புலவரால் இயற்றப்பட்டதல்ல. வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு காலங் களிலும் வாழ்ந்த வெவ்வேறு புலவர்கள் பாடிய பாடலைத்தான் பிற்காலத்தில் தொகுத்துப் புறநானூறு, அகநானூறு என்றெல்லாம் பெயரிட்டு வழங்கினார்கள். சில நூற்றாண்டுகளுக்குப்பின் வந்த

கல்விகேள்விகளில் சிறந்த சில புலர்கள் அந்தப் பாடல்களைத் திரட்டித் தனித்தனி நூல்களாக ஆக்கி நாட்டில் பரப்பினார்கள். இதன் பலனாகவே இன்று நாம் பல்வேறு புலவர்களின் பாடலை ஒரே நூலின் வாயிலாகப் படித்து அறிந்து கொள்ளக் கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். தொகுக்கும் முயற்சியை வள்ளல்களும், புலவர்பெருமக்களும் அக்காலத்தில் மேற்கொண்டிராவிட்டால் அந்தப் பழைய பாடல்கள் அனைத்துமே காலப்போக்கில் மறைந்திருக்கும் என்று அழகிரிசாமி கருதுகிறார். சிலப்பதிகாரம், சிந்தாமணி, போன்றவை பல நூற்றாண்டுகள் வரை மறைந்து கிடந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் டாக்டர் உ.வே.சாமிநாதையரின் உழைப்பின் பயனாகப் புத்துயிர் பெற்றவை. வளையாபதி, குண்டலகேசி போன்றவை நிரந்தரமாகவே மறைந்து விட்டன. ஈடு இணையற்ற பாடல்களைக் கொண்ட முத்தொள்ளாயிரத்தில் சுமார் நூறு செய்யுட்களே இன்று நமக்குக் கிடைக்கின்றன. பெருங்காப்பியங்களே மறைந்து விட்ட ஒரு நாட்டில் தனிப்பாடல்கள் எப்படி நிலைத்திருக்கும் என்று அழகிரிசாமி கேட்கிறார். பெரிய நூல்களை இயற்றிய புலவர்களுடைய அதிக கவனம் பெறாத தனிப்பாடல்களையும் கலம்பகம், கோவை, உலா போன்ற சிறு பிரபந்தங்களை இயற்றிய பிற்காலப் புலவர்களுடைய பல தனிப்பாடல்களையும் ஏன் ஒருவரும் திரட்டித் தனிநூலாக்கவில்லை என்பது அவருக்கு ஆச்சரியமானதாக இருக்கிறது. அதனால்தான் கிடைப்பதற்கு வாய்ப்புள்ள பிற்காலப் புலவர்களின் தனிப்பாடல்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டவராக இருக்கிறார். கழுகுமலைப் பகுதிகளில் வாய்மூலமாகக் கேட்ட 'காவடிச் சிந்து' பாடல்களில் ஈடுபாடு கொண்டு, பின்னர் பல வருடங்கள் அலைந்து திரிந்து அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய காவடிச் சிந்து நூலை ஒரு சிறப்பான முன்னுரையுடன் புதிய வடிவில் அழகிரிசாமி பதிப்பித்ததற்கு இதுபோன்ற ஆர்வமே காரணம்.

பொன்னுசாமித் தேவர், கந்தசாமிக் கவிராயர் போன்றவர்கள் தொகுத்த தனிப்பாடல் திரட்டின் மேன்மைக்காக அவர்கள் செய்த தமிழ்த் தொண்டை நன்றியுடன் நினைவு கூர்கிறார் அழகிரிசாமி வெளியுலகிற்கு அதிகமாகத் தெரியாமல் இப்படிப்பட்டவர்களின் பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுடைய உழைப்பினால்தான் பல இலக்கியங்கள் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன என்று அழகிரிசாமி கருதுகிறார் அதனால் பழைய தமிழ்க் காப்பியங்களுடன் மட்டும் தம்முடைய ஈடுபாட்டை நிறுத்திக் கொள்ளாமல், பிற்காலப் புலவர்களின் எண்ணற்ற(தொகுக்கப்படாத) தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள். நாட்டுப்புற இலக்கியங்கள் என இலக்கிய எல்லைகளை விரிதததுக கொண்டே செல்கிறார் நவீன இலக்கிய ஆசிரியர்களில் அதிகமான தமிழ்

அறிவு பெற்றவர்கள் என்று புதுமைப்பித்தனையும், அழகிரிசாமியையும் க.நா.சு. பாராட்டி இருக்கிறார். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருப்பவர் என்று அழகிரிசாமியைப் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். புதுமைப்பித்தன் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவருக்கு எழுதிய கடிதத்தில் ஆழ்வாரப்பப்பிள்ளை கீர்த்தனங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி எழுதியிருக்கிறார். நாட்டிய சாஸ்திரம் அறிந்த ஒரு தஞ்சாவூர்க் கிழவி கோவில்பட்டியில் அழகிரிசாமி கேட்டுக் கொண்டதின் பேரில் மனப்பாடமாகச் சொன்ன பழைய நாட்டியப் பதங்களையும், மற்றும் பல கிராமங்களிலிருந்து கேசரிக்கப்பட்ட சமுத்திர விலாசம், உலாமடல் மற்றும் காவடிச் சிந்தின் கையெழுத்துப் பிரதிகளையும் அவர் புதுமைப்பித்தனிடம் கொண்டு போய் சேர்த்திருக்கிறார்.

இப்படிப் பல தமிழ் அறிஞர்களால் சில காலம் பாடுபட்டுத் திரட்டப் பட்ட தனிப்பாடல் திரட்டுக்கள் சரிவரக்கவனிக்கப்படாமலும் படிக்கப் படாமலும் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கிருக்கும் நிலை பற்றி வருந்தி இவ்வாறு எழுதுகிறார் "நம் முன்னோர்கள் நமக்காகத்தேடி வைத்திருக்கும் இலக்கியச் செல்வத்தை அனுபவிக்கக்கூட விருப்ப மில்லாதவர்களாக நாம் வாழ்கிறோம் பாரதியார், கூறியதுபோல், 'ஊமையராய், செவிடராய், குருடர்களாய்' இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது தான் உண்மை அவர் கூறியிருப்பது போலவே நாம் 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும். அது போலி முழக்கமாகவோ கட்சிக் காரணங்களை முன்னிட்டுப் போடும் கூச்சலாகவோ இல்லாமல் உண்மையான தமிழ் முழக்கமாக இருத்தல வேண்டும். நம் தாய் மொழியாகிய தமிழ் வளர்வதற்கு தமிழர்களாகிய நாம் அறிவும் பண்பாடும் மிகுந்தவர்களாகத் திகழ்வதற்கு தமிழ் நூல்களைப் படிப்பது ஒன்றே வழி வேறு குறுக்குவழி கிடையாது படிக்கவில்லை என்றால் நாமும் வளர முடியாது. நமது மொழியும் வளரமுடியாது.

அவ்வாறு தனிப்பாடல்களின் அருமையை உணர்ந்து படிக்க வேண்டும் என்று விரும்புவர்களுக்கு உதவும் பொருட்டுத் தனிப் பாடல்களில் மறைந்தவை போல மீதியுள்ள 4000 பாடல்களில் மிகவும் சிறந்த 400 செய்யுட்களைத் தொகுத்து அவைகளில் 48 புலவர்களின் 202 செய்யுட்களுக்குத் தன்னுடைய உரையும் விளக்கமும் அடங்கிய 'தமிழ் தநத கவியமுதம்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார் இந்நூலில் காளமேகப் புலவர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற பிரபலமான தமிழ்ப்புலவர்களின் கவனத்துக்கு வராத சில தனிப் பாடல்களும் உள்ளன உதாரணத்துக்குக் கம்பரின் சில பாடல்களைப் பார்க்கலாம்

குடியானவன்தான் எல்லோரையும்விடப் பெரியவன் என்ற கருத்து கொண்ட பாடல்:

கேழ். பிடிக்கும் கை
வேல் வேந்தர் நோக்கும் கை
ஆழி தரித்தே
அருளும் கை - சூழ்வினையை
நீக்கும் கை; என்றும்
நிலைக்கும் கை; நீடூழி
காக்கும் கை காராளர்
கை.

இருபத்து நான்கு காததூரம் பரவியுள்ள சோழநாட்டைத் தவிர்த்து உலகத்தின் மீதிப்பகுதியைக் கடல் மூழ்கடித்து விட்டதா? நீ கோபித்தால் சென்ற இடமெல்லாம் சிறப்பிக்கப்பெறும் கவிஞர்களாகிய எங்களுக்கு வேறு இடமா இல்லை? என்று கம்பர் சோழனைப் பார்த்துக் கேட்பதாக அமைந்த பாடல்:

காதம் இருபத்து
நான்கு ஒழியக் காசினியை
ஓதக் கடல் கொண்டு
ஒளித்ததோ? - மேதினியில்
கொல்லிமலைத் தேன் சொரியும்
கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கு
இடம்?

ராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டிருக்கும் ஒரு ஏழைக் கிழவிக்கு ராட்டினமே துணையாகப் பொன் போன்ற சொத்தாகிறது என்ற பொருளில் அமைந்த பின்வரும் பாடல்:

நில்லாத பல்லும்
பரிபட்ட கூந்தலும்
நீண்ட கரிப்
பொல்லா அழுக்குப்
புடவையுமாய் வெகு

பூச்சியம் போய்ச்
செல்லாப் பணத்துக்குத்
தேட்டுணும் அற்றுத்
தியங்கி ஒன்றும்
இல்லாத பாவி
தனக்கு ஆர் துணை? பொன்
இராட்டினமே!

மேற்கண்ட தனிப்பாடல்கள் கம்பரின் தலை வணங்காதத் தன்மையையும், வறியவர்பால் உள்ள பரிவையும் வேறொரு கோணத்தில் வைத்துப் பார்க்க உதவுபவை. இதுபோன்ற தனிப்பாடல்களில் வெளிப்படும் கம்பரின் ஆளுமையால் உத்வேகம் பெற்றே அழகிரிசாமி 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்' என்ற தன்னுடைய நாடக நூலில் கம்பரை அரச போகத்துக்கு அடிபணியாது வறியவர்களை நேசிக்கிற ஒரு வேறுபட்ட கவி ஆளுமையாகச் சித்தரிக்க முன் வந்தார். இவ்வாறு பல்வேறு தனிப்பாடல்களை உதாரணம் காட்டி அதிகம் கவனத்துக்கு வராதுபோன பல இலக்கியச் சிறப்புகளை ஒரு எளிய வடிவில் முன்வைத்து அனைவரும் படித்து அனுபவிக்க வேண்டுகிறார்

இதேபோல் கழுகுமலைப் பகுதிகளில் பல காவடிச் சிந்து பாடல்களை பாமர மக்கள் பாடக் கேட்டு அப்பாடல்களின் இசை நயத்தால் வசீகரிக்கப் பட்ட அழகிரிசாமி அவர்கள் பாடும் பாடல்களிலும், பிரசுரமான மலிவுப் பதிப்புகளிலும் பல்வேறு பிழைகள் இருப்பதை அறிந்து மனம் வருந்திப் பல வருடங்கள் அலைந்து திரிந்து அவற்றின் ஆதாரமான அண்ணாமலை, ரெட்டியாரின் காவடிச் சிந்துப் பாடல்களையெல்லாம் முறையாகத் திரட்டிப் பிழைகளற்ற புதிய பதிப்பாக வெளியிட்டது ஒரு சிறப்பான இலக்கிய முயற்சியாகும். காவடிச் சிந்து பற்றிய ஆய்வாக அமைந்த அவரது முன்னுரையில் காவடிச் சிந்தின் சிறப்புபற்றி அழகிரிசாமி இவ்வாறு கூறுகிறார்.

''பிழையில்லாத அச்சுப் பிரதியாக இன்று காவடிச் சிந்து புத்தகம் கிடைப்பது அரிதாகப் போய்விட்டது இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் விரும்பித் தேடினாலும் சுத்தமான பதிப்புக் கிடைப்பதில்லை அநேகர் காவடிச்சிந்து ஓர் இலக்கிய நூல் என்பதையே மறந்துவிட்டார்கள் ஒரு காலத்தில் காவடி எடுக்கும்போது மட்டுமன்றிப் பாட்டுக் கச்சேரி, நாட்டியம், நாடகம், பஜனை, நலங்கு முதலிய பல நிகழ்ச்சிகளிலும் இந்த சிந்துகள் முழங்கிக் கொண்டிருந்தன ஆனால் இன்று அவற்றைப் பாடும் வழக்கம் அநேகமாக நின்றுவிட்டது. பழைய கிராமபோன் இசைத்தட்டுகள்

வாயிலாகவும் ஏககேசமாக ரேடியோ வாயிலாகவுமே காவடிச்சிந்தின் இசை அழகைக் கேட்டு ரசிக்க முடிகிறது.

இயல் தமிழ்ச் செல்வர்களும் இசைத் தமிழ்ச் செல்வர்களும் அநேகமாக மறந்துவிட்ட காவடிச்சிந்து நூலைச் சுத்தமான முறையில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று சுமார் ஆறு வருஷங்களுக்கு முன் தீர்மானித்தேன். உடனே பல கிராமங்களுக்கும் சென்று அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றியும், காவடிச்சிந்துகளைப்பற்றியும் குறிப்புகள் சேகரிக்கத் தொடங்கினேன். காவடிப்பாட்டு பாடுகிறவர்களைச் சந்த லயத்துடன் அவர்கள் ஞாபகத்திலுள்ள சிந்துகளைப் பாடச் சொல்லிக் கேட்டேன். அச்சுப் பிரதிகளிலிருந்து வேறுபடக் கூடிய பாடங்களை குறித்து வைத்துக் கொண்டேன். கோவில்பட்டித் தாலுக்காவில் குருமலையை அடுத்துள்ள கிராமம் ஒன்றில் ஓர் ஏட்டுப் பிரதி இருந்தது. அந்த ஏட்டுப் பிரதி வைத்திருந்தவர் தம் வீட்டிலேயே அமர்ந்து ஏடுகளைப் படித்துப் பார்ப்பதற்கு மட்டுமே எனக்கு அனுமதியளித்தார். அங்கேயே உட்கார்ந்துப் படித்து சில பாடபேதங்களைக் குறித்துக் கொண்டேன். நான் பார்த்த ஓலை ஏட்டுப் பிரதி இது ஒன்றுதான்."

காவடிச் சிந்துகளைத் தான் தேடி அலைந்த பின்புலம் பற்றி மேலே கூறிவிட்டு காவடிச் சிந்துகளின் இலக்கியத் தன்மைகள் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்: "ரெட்டியார் இயற்றிய பிற பாடல்கள் அனைத்திலும் சிறந்தவையாக இருப்பவை காவடிச் சிந்துகளே. பண்டித பாமர ரஞ்சிதமாக அமைந்துள்ள இந்தச் சிந்துகளின் சொல்லழகும், இசை அமைதியும் அற்புதமாக இருக்கின்றன. காவடிச் சிந்தின் முறை ஏற்பட்டது அண்ணாமலை ரெட்டியாரால்தான் என்று உ.வே. சாமிநாதையரும் குறிப்பிடுகிறார். இவருடைய காவடிச் சிந்துகளுக்கு வர்ணமெட்டுக்க ளையோ ராகதாள அமைப்புகளையோ தயார் செய்து கொடுத்தவர் கரிவலம் வந்த நல்லூரில் வாழ்ந்த பொன்னம்மாள் என்னும் ஓர் உருத்திர கணிகை என்றும் கூறுவார்கள்.

ரெட்டியார் காலத்திலேயே காவடிச் சிந்துகள் தமிழ்நாடெங்கும் பரவிவிட்டன. இவ்வளவு விரைவில் பரவிய நூல்கள் மிக மிகச் சொற்பம் எவரையும் ஆட்கொள்ளும் வண்ணம் காவடிச் சிந்துகள் அமைந்திருந்தமையே இதற்குக் காரணம் பிற்காலத்தில் படித்த கூட்டத்தாரில் பலர் காவடிச் சிந்துகளின் நயத்தை அனுபவிக்கத் தெரியாத காரணத்தால் அவற்றைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள் இந்த அலட்சிய புத்தியினால்தான் காவடிச்சிந்து நூல் இன்றுவரை பொது மக்களிடையே பிரபலம் அடையாமல் மூலையில் ஒதுங்கிக் கிடக்கும்படி

ஆகிவிட்டது. இன்றுவரை சுத்தமான ஒரு அழகிய பதிப்பு வெளிவராமல் போனதற்குக் காரணமும் இந்த அலட்சிய புத்தியே. ஆனாலும் வெ.ப. சுப்பிரமணிய முதலியார், டி.கே. சிதம்பரநாத முதலியார், தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், சுத்தானந்த பாரதியார் போன்ற தமிழறிஞர்கள் காவடிச் சிந்தின் பெருமையைத் தங்கள் எழுத்துக்கள் மூலம் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கிறார்கள்.

இலக்கிய உலகிலும் காவடிச் சிந்துக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. சுப்பிரமணிய பாரதியார் பிறப்பதற்கு முன் தமிழ்க் கவிதை உலகில் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணியவர்களில் அண்ணாமலை ரெட்டியாரும் ஒருவர். விறலிவிடுதூது பாடிய குமாரசுவாமி அவதானி, குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர், முக்கூடற் பள்ளின் ஆசிரியர், திருவருட்பா பாடிய இராமலிங்க சுவாமிகள், காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் ஆகியோர் சம்பிரதாயமான செய்யுள் நடையை விட்டுவிட்டும், சில இடங்களில் புது அம்சங்களைப் புகுத்தியும் புதுவிதமான நூல்களை இயற்றினர் இவர்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்குப் பின்னும் பாரதியாருக்கு முன்னும் தமிழ்ப் பாட்டு நடைக்குப் புத்துணர்ச்சியும் புத்துயிரும் ஊட்டித் தமிழைப் பழகு தமிழாக்கி தமிழ்க் கவிதையுலகில் மறுமலர்ச்சியை உண்டு பண்ணியவர்கள்.

இவர்களுக்கெல்லாம் பிறகு தோன்றிய பாரதியார் தலைசிறந்த கவிஞராக இருந்த காரணத்தால் முன்னால் தொடங்கிய மறுமலர்ச்சிக்குப் பரிபூரணத்துவத்தைக் கொடுத்தார். அந்த மறுமலர்ச்சியை முதலில் உண்டு பண்ணிய பிரம்மாக்களில் ரெட்டியாரும் ஒருவர் என்ற உண்மையை இன்று வரையிலும் அநேகர் தெரிந்து கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்க விஷயமே இந்த மறுமலர்ச்சிப் பிரம்மா பழமையின் அஸ்திவாரத்திலேயே புதிய சிருஷ்டி செய்திருப்பது போற்றுதற்குரியது பழைய திணை இலக்கணத்துக்கு இசைய இவர் இயற்றிய சில சிந்துகளை இந்த நூலில் காணலாம். உதாரணமாக 'பாதி ராத்திரி வேளையில்' என்னும் சிந்து பாலைத் திணைக்கும். 'நேமமாய்ப் பணி' என்பது நெய்தலுக்கும், 'செந்தில்மா நகரந்தனில் மேவிய' என்பது குறிஞ்சிக்கும், 'செந்தூர் வளர் முருகநாதா' என்பது மருதத்துக்கும் உரிய சிந்துகள். மற்றொரு திணையாகிய முல்லைத் திணைக்குரிய சிந்து மட்டும் காவடிச்சிந்து நூலில் இல்லை. இந்தக் காவடிச்சிந்துகளில் கடவுள் வணக்கமாகவும், நகர்வளமாகவும் உள்ளவை தவிரப் பிற யாவும் நாயக நாயகி பாவத்தில் பாடப்பட்டவை."

இத்தகைய இலக்கியச் சிறப்பும் இசை அமைதியும் கொண்டு மக்களிடையே ஒரு காலத்தில் பிரபலமாக விளங்கி மறைந்துபோன

இப்பாடல்களுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி புது வடிவம் கொடுத்த அழகிரிசாமியின் இலக்கியப்பணி என்றும் நினைவுகூறப்படும்.

இவ்வாறு காலத்தால் புறக்கணிக்கப்பட்ட பல சிற்றிலக்கியங்களைத் தூசு தட்டி எடுத்து அவற்றின் அருமைகளை விளக்கி, அவை குறித்த மறுபார்வையை வேண்டுகிறார். மேலோட்டமாகப் பார்க்கும்போது காமச்சுவை மிகுந்ததாகத் தோற்றமளிக்கும் கோவை, தூது, உலா, மடல் ஆகிய சிற்றிலக்கியங்களில் பொதிந்துள்ள அழகுகளை வேறு பார்வையில் பார்ப்பதற்கான சாத்தியங்களையும், விளக்கங்களையும் முன் வைக்கிறார். காவடிச்சிந்து பாடல்களும் இதே கதிக்கு உள்ளாக்கப்பட்டு பல வரிகள் நீக்கப்பட்டும், சுத்திகரிக்கப்பட்டும் பிழைகள் மலிந்த நிலையில் தான் அவர் காவடிச் சிந்தின் அசலான பாடல்களைத் திரட்டி மறுபதிப்புச் செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்த்தார். சிற்றிலக்கியங்கள் குறித்தத் தன்னுடைய நிலைப்பாட்டை விளக்கி அவர் இவ்வாறு எழுதுகிறார்: ''விறலிவிடு தூது, கூளப்ப நாய்க்கன் காதல், வருண குலாதித்தன் மடல், காவடிச்சிந்து ஆகியவை இலக்கியம் கற்பவர்கள் படிக்க வேண்டாதவை என்று 'பெரியவர்'களால் கட்டளையிடப்பட்டு அவை இருக்குமிடம் தெரியாமல் மறைந்து கொண்டிருக்கின்றன. அந்தப் புத்தகங்களை நல்லமுறையில் முழுஉருவில் அச்சிடுவது பெரிய விஷயமல்ல, இவைகளை ஆபாசமானவை என்று சொல்லும் தப்பான மனோபாவத்தைக் கொன்றுவிட வேண்டியதுதான் முக்கியம் விறலிவிடு தூதை எடுத்துக் கொள்வோம் இதைப்போல் சாதுரியத்தோடும், கற்பனைச் செறிவோடும், ஹாஸ்ய உணர்ச்சியைப் பிரமாதமாகக் கிளப்பும் முறையிலும் எழுதப்பட்ட நூல்கள் மிகக்குறைவு ஆகவே தமிழ்ப்பாஷை 'பழகு தமிழ்' ஆனதற்குக் காரணகர்த்தாக்கள் மேற்காட்டிய பிரபந்தங்கள்தாம். பாஷையும் மனிதனும் நெருங்கிக் குலவும் முறையில் எழுதப்பட்ட நூல்கள் அவை. அவைகளைப் போன்று வேறு எத்தனையோ தூதுகள், சிந்துகள் முதலியன அபரிதமாக எழுதப்பெற்று சமூகத்தின் கட்டுப்பாட்டினால் இருண்ட மூலைகளிலும், கூரை இறைவாரங்களிலும் அஞ்ஞாத வாசம் செய்தும் கரையானோடு மல்லாடிக் கொண்டும் ஜீவ மரணப் போராட்டத்தில் அவதிப்படுகின்றன ''

இதேபோல் முக்கூடற் பள்ளுவின் இலக்கியச் சுவைகளை விளக்கும் போது இவ்வாறு கூறுகிறார்: நாட்டுப் பாடல்களுக்கு இலக்கிய வடிவம் கொடுக்க வேண்டுமென்று சிறந்த புலவர்கள் சிலருக்குத் தோன்றியது. கிராமத்து மக்கள் பேசிக் கொள்ளும் பாஷையிலேயே தனிப்பாடல்களும் சிறு புத்தகங்களும் இயற்ற விரும்பினார்கள் இந்த விருப்பத்தின் பயனாகத் தோன்றியவையே குறவஞ்சி, பள்ளு, காவடிச் சிந்து,

பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், அம்மானைகள் முதலியன. குடியானவப் பெருமக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கொச்சை மொழிகளை நீக்கி ஆனால் பேச்சு வழக்கை ஒட்டியே இயற்றப்பட்ட நூல் முக்கூடற் பள்ளு. உண்மையில் பேச்சு வழக்கில் பாட்டு இயற்றும் முறை தொல்காப்பியர் காலத்திலேயே இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்திலும் நாடுகாண் காதையில் ஏர்மங்கலம் என்ற ஒரு வகையான பாடலைப்பற்றிக் கூறப்படுகிறது உழத்திப்பாட்டு என்ற ஒருவகைப் புத்தகம் கூடத் தோன்றியிருக்கிறது. இவ்வாறு உழவர் வாழ்க்கை சிறப்பிடம் பெறுவது தமிழ் இலக்கிய மரபுக்கு அந்நியப்பட்டதல்ல என்று கூறிப் பரணிகளில் கலிங்கத்துப் பரணி போலவும், கலம்பகங்களில் நந்திக்கலம்பகம் போலவும் உலாக்களில் விக்கிரமசோழன் உலாப் போலவும் பள்ளு நூல்களில் முக்கூடற்பள்ளு எல்லா இலக்கிய நயங்களுடன் பேச்சு மொழியில் பள்ளர் வாழ்வைச் சித்தரித்துச் சிறப்பிடம் பெறுகிறது என்று குறிப்பிடுகிறார் தமிழ்நாட்டுக் கிராமங்களில் இது மந்தை நாடகமாகவும் நடிக்கப்பட்டது.

மக்களின் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தி அருணாச்சலக் கவிராயர் இயற்றிய இராம நாடகம் ஒரு சிறப்பான நாடக நூல் என்று அழகிரிசாமி குறிப்பிடுகிறார். உண்மையில் பாடுவதற்கென்றே எழுதப்பட்ட நாடகம் இது. இராம நாடகத்துக்கு முன்பு தோன்றிய பள்ளு, குறவஞ்சி நாடகங்களிலும் கூட காட்சிப் பிரிவினைகளோ, வசனங்களோ இல்லாமல் பாடல்களைப் பாடும் நிலையிலேயே நாடகத்துக்கான வடிவமும், உணர்வும் உருவாகியிருக்கிறது. அதேபோல் இராம காதை பாடப்படும் போதும் ஒரு நாடகம் பார்க்கிற உணர்வே ஏற்படும் என்கிறார் அழகிரிசாமி. மேலும் பேச்சு நடைதான் எந்த மொழிக்கும் அசல் நடை, மூலநடை. நாடகப் பாத்திரங்கள் பேச்சு நடையில் பாடல்கள் பாடுவது நாடகக் காட்சிகளைத் தத்ரூபமாகப் பார்ப்பவர் முன் நிறுத்தும் என்கிறார் ராமன், சீதை, அனுமன், ராவணன் போன்ற காவியப்பாத்திரங்கள் சாதாரண மனிதர்களைப் போலப் பேசுவது அந்தப் பாத்திரங்களின் குணாதிசயங் களுக்குப் பொருந்துமா என்றெல்லாம் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாகப் பாமர மொழிபேசி காவியப்பாத்திரங்களை இன்னும் நெருக்கமாகவும் அந்நியோன்யமாகவும் கொண்டு வந்த அருணாச்சலக் கவிராயரின் இலக்கியத் திறமை மேலும் பாராட்டத்தக்கது என்கிறார் ஆகவே கவிராயர் பொதுமக்களின் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தி நாடகத்தை இயற்றியதால் கம்பராமயணம் என்ற ஈடு இணையற்ற ஒரு பேரிலக்கியம் இருந்தாலும் நாடக நூலுக்கும் ஒரு தேவையிருக்கிறது என்பதை உணர்த்திஇருக்கிறார் நாடகம் என்றால்

உண்மைச் சம்பவம் போலவும் நாம் ஒன்றிவிடக்கூடிய தத்ரூபமான பாத்திரங்களோடும் அமைய வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து மகத்தான வெற்றி பெற்றிருக்கிறார். மேலும் பிற்கால நாடகங்களுக்கும் முன்னோடியாக இருந்திருக்கிறார் என்று இராம நாடகம் இயற்றிய அருணாசலக் கவிராயரை வெகுவாகப் பாராட்டிக் கூறுகிறார் அழகிரிசாமி. இவ்வாறு பண்டித மனப்பான்மை இன்றி இலக்கியத்தை வாழ்வியல் தன்மையுடன் தொடர்புபடுத்தி அதன் மதிப்பைக் கண்காணிப்பவராக அழகிரிசாமி விளங்குகிறார்.

இவ்வாறே நாட்டுப்புற இலக்கியங்களில் தென்படும் அழகையும் வாழ்க்கை உணர்வுகளையும் மதித்துப் போற்றுபவராக அழகிரிசாமி இருக்கிறார். சிற்றிலக்கியங்கள் கூட கற்றறிந்த புலவர்களால் உருவாக்கப் பட்டவை. ஆனால் நாட்டுப்புற இலக்கியங்கள் கல்வி அறிவற்ற பாமர மக்களால் உருவாக்கப்பட்டவை. ஆனால் இலக்கியத்துக்கு உணர்வுதானே உந்துதல்? நாட்டுப்புற வாழ்வியலும், நிலவெளியும் எண்ணற்ற உணர்வு களைக் கிளர்ந்தெழச் செய்வதை அழகிரிசாமி நன்கு உணர்ந்தவராக இருக்கிறார். அவர்களின் இயல்பான உணர்வு வெளிப்பாடு, தாலாட்டு, ஒப்பாரி, வீரப்பாடல்கள், ஏற்றம் இறைக்கிறவனின் கீதம், பழமொழிகள், கதைகள் என பலவிதமான வடிவங்கள் கொள்வதை அவர் பார்க்கிறார் அவை எந்த இலக்கணத்துக்குள்ளும் அடங்கா விட்டாலும் ஒவ்வொரு நாட்டுப்புற வடிவமும் தனக்குரிய அழகுடனும் வடிவ ஒழுங்குடனும் விளங்குவதை அவர் உணர்கிறார். அதனால்தான் நாட்டுப்புறப் பாடல்களும் கதைகளும் பழமொழிகளும் முறையாகத் தொகுக்கப்படும் போது எந்த இலக்கியத்துக்கும் இணையாக அவற்றின் மதிப்பையும் எல்லோரும் உணரக்கூடிய நிலை ஏற்படும் என்று கருதுகிறார் வானமாமலை தொகுத்த நாட்டுப் பாடல்கள் தொகுப்பை மிகவும் பாராட்டி அதுபோன்ற தொகுப்புகள் மேலும் வரவேண்டும் என்று விரும்புகிறார் அதில் அவர் குறிப்பிட்டுக் காட்டியுள்ள சில பாடல்களை உதாரணத்துக்குப் பார்க்கலாம்.

காதல் பாட்டில் பெண் சொல்கிறாள்-

எண்ணெய்த் தலை முழுகி
என் தெருவே போறவரே
பாரா தீர் என் முகத்தை
பழிகள் வந்து சேர்ந்திடுமே

காதலன் சொல்கிறான்:

பகைச்சனடி என் சனத்த
பார்த்தனடி உன்முகத்த
கேட்டனடி கேவலங்கள்
கிளி மொழியாள் உன்னாலே

கணவன் மனைவி உறவு முறிந்த செய்தி-

அச்சடிச் சேலை வாங்கி
அஞ்சுமாசம் வச்சுடுத்தி
முந்தி கிழிய முன்னே
முறிஞ்சதையா நம் உறவு

பேயனுக்கு வாழ்க்கைப்பட்ட துரதிருஷ்டம் பற்றி-

மாமன் மகன் இருக்க
மாலையிடும் சாமிஇருக்க
பேசும்கிளி நான் இருக்க
பேயனுக்கு வாழ்க்கைப்பட்டு
பெருங்கஷ்டம் ஆனாச்சே-

என்றெல்லாம் வெளிப்படும் உணர்வுகள் எந்த இலக்கியத்துக்கும் குறைந்தவை அல்ல என்பது அழகிரிசாமியின் கருத்து. இலக்கியத்தை அதன் உண்மையான பொருளில் பார்க்க அவர் நன்கு கற்றிருந்தார்.

கவிச்சுவையும், உருக்கமும், சமுதாய உணர்வுகளும் இசைக்கூறுகளும் நிரம்பிய இராமலிங்க அடிகளாரின் தமிழ்த் தொண்டை உயரிய இடத்தில் வைத்துப் போற்றுகிறார் அழகிரிசாமி தமிழ்க் கவிதைக்குப் புதியதொரு அழகும் புதியதொரு நடையும் புதியதொரு உயிரும் கொடுத்துப் பாரதியார் போன்ற கவிஞர்களுக்குப் பல வகைகளிலும் முன்னோடியாக விளங்கிய இராமலிங்க அடிகளால் தமிழ் இலக்கிய உலகம் அடைந்த நன்மைகள் அளவிட முடியாது என்கிறார் இனிமையும் எளிமையும் கலந்த ஒப்பற்ற இசைப் பாடல்களால் தமிழ் இசை உலகத்தையும் அவர் மேம் படுத்தியிருப்பதை நினைவு கூர்ந்து அம்பலத்தரசனிடம் அழியாக் காதல் கொண்ட ஒரு இளம்பெண் பாடுவது போல் அமைந்த பின்வரும் இசைப்பாடலை உதாரணமாகக் காட்டுகிறார்-

அற்புதப்பே ரழகாளர்
சொற்பதம் கடந்து நின்றார்
அன்பர் எல்லாம் தொழமன்றில்

இன்பநடம் புரிகின்றார்.
சிற்பரர் எல்லாரும் வல்ல
தற்பரர் விரைந்திங் குன்னைச்
சேரவந்தார், வந்தார் என்று
தெருவில் நாதம் சொல்கின்றதே!

அதே போல் பாரதியாரின் 'எங்ஙனம் சென்றிருந்தீர்' பாடலை ஷெல்லியின் பாடலுடனும் அவருடைய 'காணிநிலம்' பாடலை அதேப் பொருள் கொண்ட சில ஐரோப்பியக் கவிஞர்களின் பாடலுடனும் ஒப்பிட்டுப் பாரதியாரின் கவிதைச் சிறப்பும் பார்வையும் மேலும் உயர்வானது என்பதை நிறுவுகிறார். 1926 இல் ஆநந்த குணபோதினி என்ற மாதப்பத்திரிகையில் வெளியாகி எத்தொகுதியிலும் இடம்பெறாத பாரதியாரின் கவிதை ஒன்றைக் கண்டெடுத்து வெளியிட்டார்

கண்ணிலான் காலிற்
கவின் மணியை யெற்றிவிட்டால்
மண்ணி லதுதான்
மதிப்பகன்ற தாய்விடுமோ?
பொய்த் தொழிலோன் மைதிலியாம்
பூவைதனைப் புன்காவல்
வைத்ததனா லன்னை
மதிப்பிழந்து போயினளோ?
ஐவர் முன்னே பாஞ்சாலி
யாடை உரிந்தார் கயவர்
மை வளர்த்த கண்ணாளின்
மாண்பகன்று போயினதோ?-

என்பதுதான் அக்கவிதை. இவ்வாறு இலக்கிய வரலாற்றெங்கும் இறைந்து கிடக்கும் கவிச்செல்வங்களை இனங்கண்டு உரைக்கும் ஆற்றலும் மனமும் கொண்டவராக இருந்தார் அழகிரிசாமி.

காலத்துக்குக் காலம் செய்யுள் நடை வேறுபடுவது போல உரைநடையும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. இம் மாறுதல் தான் மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமான அடையாளமாகக் கருதும் அழகிரிசாமி வழிவழிவந்த வசன நடை என்று கி பி 7 ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படும் களவியல் உரையிலிருந்து புதுமைப் பித்தன் கதைகள் வரை சுமார் 1300 ஆண்டுக் காலத்தில் தமிழ் உரைநடையை

எவ்வாறெல்லாம் புலவர் பெருமக்களும் பிறரும் கையாண்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ளும் விதமாக 74 பேரின் வசன நடைகளில் மாதிரிக்குக் கொஞ்சமாக எடுத்து ஒரு தொகுப்பாகத் தொகுத்துக் தந்துள்ளார் பேச்சு வழக்கில் பயிலும் தமிழையும் கல்வெட்டுத் தமிழையும் பழைய நாடக வசனங்களையும் கூட இதில் சேர்த்திருக்கிறார் 'என்றுமுள தென்றமிழ்' என்று கம்பர் கூறியதுபோல எக்காலத்திலும் தமிழ் உயிர்ப்பு கொண்டு விளங்குகிறது என்பதை மெய்ப்பிக்கும் விதமாக இத்தொகுப்பு நூல் அமைந்துள்ளது

இதில் இடம் பெற்றுள்ள நக்கீரர், இளம் பூரணர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர்,வீரமாமுனிவர், ஆனந்தரங்கம் பிள்ளை மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உ வே சாமிநாதய்யர், சங்கரதாஸ் சுவாமிகள் வ உ.சி மறைமலை அடிகள், தேசிக விநாயகம் பிள்ளை,பாரதியார், டி கே சி., வ ரா , ரா பி சேதுப்பிள்ளை, விபுலானந்தர், புதுமைப்பித்தன் என வெவ்வேறு காலகட்டங்களில் தமிழுக்குச் சிறப்பு செய்த சாதனையாளர்களின் உரைநடையை ஒரு சேரப் பார்க்கும் ஒரு வாய்ப்பை இத்தொகுப்பின் மூலம் அழகிரிசாமி வழங்கியுள்ளார் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் இன்று சிறப்பாக வளர்சசியடைந்து உலகத் தரத்திற்கு இணையான படைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் தமிழ உரைநடையில் துரிதமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தமிழ் உரைநடை மேலும் செழுமைப் படுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அழகிரிசாமியின் நோக்கமாக இருக்கிறது. கம்பரை நாயகனாக்கிய அவர் நாடகப் படைப்பு உரைநடை வளத்தையும் கவிதை வளத்தையும் இணைத்த ஒரு படைப்பு

இவ்வாறு அழகிரிசாமியின் பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடு பழைய இலக்கியங்களின் மேல் ஆர்வம் கொண்டு அவைகளை முறையாகக் கற்கவும் வெவ்வேறு காலகட்டங்களில் உருவான பல்வேறு இலககியங் களின் சிறப்புகளை அடையாளம் கண்டு வளர்ந்து வரும் இலக்கியப் போக்குகளின் அடிப்படையில் அவைகளை மதிப்பீடு செய்யவும், அதன் தொடர்ச்சியாகப் புதிய இலக்கியங்களை உருவாக்குவதற்கான உத்வேகங் க்ளையும் பெறவும் அவருக்கு ஒரு செறிவான பின்புலத்தை வழங்கியிருக்கிறது

# 5
# இசை ஈடுபாடு

இலக்கியத்தைப் போலவே இசையும் சிறுவயதி லிருந்தே அழகிரிசாமியின் ஈர்ப்புக்குரிய விஷயமாக இருந்திருக்கிறது. உண்மையில் இசைதான் அவரைப் பண்படுத்தித் தேர்ந்த இலக்கியங்களை நாடக்கூடிய மனநிலையை அவரிடம் உருவாக்கி இருக்கிறது. சிறுவயதில் அவருடைய கிராமத்தின் தெருக்கள் வழியாக மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் பஜனைப் பாடல்கள் பாடிக்கொண்டே செல்லும்போது அழகிரிசாமியும் அதில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பாடுவார். சுருதிப் பெட்டியின் மனம் லயிக்கும் ஸ்ருதி, மத்தளத்தின் கும்கார ஓசை,மானுடக் குரல்களோடு பின்னிவரும் புல்லாங்குழல், கலீரெனத் தட்டும் ஜால்ராவின் ஒலி இவை எல்லாம் மனதில் பல நெகிழ்ச்சிளை உண்டு பண்ணும் பஜனைப் பாடல்களை கேட்டுக் கேட்டு சொந்தத்தில் இட்டுக் கட்டிப் பாடக்கூடிய திறமையையும் வளர்த்துக் கொண்டார். இவருடைய சிறுவயதுத் தோழரும் பக்கத்து வீட்டுக்காரருமான கி.ராஜநாராயணன் சிறுவயதிலிருந்தே இவருடைய எல்லா இசையனுபவங்களிலும் பங்கு கொண்டவர். இவர்கள் இருவருடைய குடும்பமும் தெலுங்குக் குடும்பமாக இருந்ததால் தியாகையரின் கீர்த்தனைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். தியாகராஜரின் கிருதிகளை அர்த்தம் உணர்ந்து உணர்ச்சியுடன் அனுபவித்து அழகிரிசாமி பாடுவார் என்று ராஜ்நாராயணன் குறிப்பிடுகிறார். திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை திருவீழிமிழலை சகோதரர்கள், எஸ் ஜி கிட்டப்பா, விளாத்திகுளம் சுவாமிகள், அரியக்குடி ராமானுஜம் ஆகிய கர்நாடக வித்துவான்களின் உயர்ந்த சங்கீதங்களைக் கிராமபோன் இசைத் தட்டுகளில் கேட்பது இருவருக்கும் பிடித்தமான பொழுதுபோக்காக இருந்தது. ராஜரத்தினத்தின் தோடிராக ஆலாபனையையும், திருவீழிமிழலை சகோதரர்களின் 'ஸ்வரராக ஸுதா' வையும் கிட்டப்பாவின் 'எவ்ரினீ' ஆகிய இசைத் தட்டுக்களையும் குறைந்தது பதினாயிரம் தரமாவது போட்டுப் போட்டுக் கேட்டிருப்போம் என்கிறார் ராஜநாரராயணன் "வருஷத்துக்கு ஒருதரம் ராஜரத்தினம் பிள்ளை கடம்பூருக்கு வருவார். பன்னிரெண்டு மைல்கள் நடந்து விடிய விடிய முழித்திருந்து அவருடைய வாத்தியத்தைக்

கேட்போம். அந்தச்சிறிய வயதில் நடந்த அலுப்பும், தூங்காமல் ஒருநாள் முழித்த முழிப்பும் அசதியும் காரணமாகவும் பல நாட்கள் எங்கள் காதுகளில் அந்த நாதஸ்வர ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும். அந்த ஓசை மனசை என்னவோ செய்யும். அழுகை வருவதற்கு முன்னால் நெஞ்சை அடைக்கும் அல்லவா, அந்தமாதிரி ஒரு வலி ஏற்படும். துன்பம் தரக்கூடிய பரவசமான ஒரு வலி, ஒரு ஆனந்தக் கிறக்கம், ஒரு நிலை'' என்று தங்கள் இசை அனுபவத்தை ராஜநாராயணன் குறிப்பிடுகிறார்.

அதேபோல் காருக்குருச்சி அருணாசலம் அவர்களுடைய ஊரில் சம்பந்தம் வைத்திருந்ததால் அங்கே அடிக்கடி வருவார் அவர் வரும் போதெல்லாம் அவரைப் பாடச் சொல்லி இருவரும் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அதேபோல் விளாத்திகுளம் சுவாமிகள் அங்கே வரும்போதெல்லாம் சங்கீதக் கச்சேரிதான். விளாத்திகுளம் சுவாமிகளுடைய இசை ஞானம் மற்றும் ராக விஸ்தாரத்தின்மேல் இருவருக்கும் அளவு கடந்த அபிமானம் இருந்தது. இசையை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் நாதஸ்வர வித்துவான் பொன்னுசாமிப் பிள்ளையிடம் இருவரும் இசை பயின்று ஓரளவு இசை குறித்தத் தெளிவு பெற்றார்கள் ''நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் இசை, இலக்கியம் போன்ற எண்ணற்ற கனவுகளில் மூழ்கியிருந்தபோது பல மனக்கோட்டைகள் கட்டினோம். ஒரு குருவிடம் முறையாக இசை கற்பது, சாகித்தியங்கள், நாட்டியப பதங்கள் பண்ணுவது, பின்னாளில் இசை அறிந்த பெண்ணையே மணமுடிப்பது இப்படி சொல்லி வைத்ததுபோல் எனது அன்பனுக்கு இவையெல்லாமே முடிந்தது'' என்று ராஜநாராயணன் குறிப்பிடுகிறார்.

தோடி, ஆனந்தபைரவி, பைரவி, உசேனி ஆகியவை அழகிரிசாமிக்கு மிகவும் பிடித்தமான ராங்கள். ஒருமுறை கன்னியாகுமரிக்கு இருவரும் சென்றிருந்தபோது ஒரு அமைதியும் துக்கமும் கலந்த சூழலில் அழகிரிசாமி அனுமதோடியில் அவர் இயற்றிய 'தேனூறச் சொல்வதற்கு.. என்ற பாடலையும், உசேனி ராகத்தில் அமைந்த 'நேற்றந்தி நேரத்திலே நீராடும் கரைதனிலே நெருங்கி உம்மை ஜாடை காட்டி அழைத்தவர் யார் சுவாமி' என்ற சுப்பராமய்யர் இயற்றிய பதத்தையும் பாடி ராஜநாராயணனை மகிழ்வித்திருக்கிறார் நாட்டியப் பதங்களைச் சேகரிப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது தஞ்சாவூரிலிருந்து வந்த நாட்டிய குலத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார் சொல்லி நிறைய நாட்டியப்பதங்களைக் குறித்து வைத்துக் கொண்டார் இவையெல்லாம் சேகரித்து வைக்காவிட்டால் அழிந்துவிடும் என்று அழகிரிசாமி கருதினார் 'ராகங்களின் உயிரான இடங்கள் எல்லாம் அர்த்த பாவத்தில் இழைந்து

பரிபூரணமாகப் பேசுவதும் கொஞ்சுவதும் நாட்டியப் பதங்களில்தான் தியாகப் பிரும்மம், முத்துசாமி தீக்ஷிதர் போன்ற தமிழ் நாட்டின் சங்கீத வல்லுநர்கள் தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் முறையே நிகரில்லாத கீர்த்தனைகளை இயற்றி இருப்பதைப் போல தமிழில் பாடிய மற்ற சாகித்ய கர்த்தாக்கள் பதங்களைத்தான் பிரமாதமாக அமைத்துப் பாடியிருக்கிறார்கள். தமிழ்ப் பதங்களில் இருப்பதைப் போல சங்கீத சுகம் அவ்வளவு பரிபூரணமாகத் தமிழ்க் கீர்த்தனங்களில் இல்லை யென்று சங்கீதத் தேர்ச்சி பெற்ற பலரும் கூறுவதோடு அனுபவத்தில் அறிவதும் அதுவேயாகத்தான் இருக்கிறது' என்று அழகிரிசாமி ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார் மறைந்து கொண்டிருக்கும் சிற்றிலக்கியங்களைப் போலவே பத சாஹித்யங்களும் மறையத் தொடங்கினால் இலக்கியத் திலும் சங்கீதத்திலும் ஒவ்வொரு முக்கியமானப் பகுதி நிச்சயம் அழுகி விழுந்து விடும் என்று கருதி எங்கெல்லாம் நாட்டியப் பதங்களைச் சேகரிக்க முடியுமோ, அவற்றையெல்லாம் தனிப்பாடலகளைத் திரட்டியது போல சேகரித்தார். கர்நாடக இசை விரிந்து பரந்து வேறுபாடு பாராது சகல ஒலிக்கற்பனைகளையெல்லாம் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதே அழகிரிசாமியின் ஆசையாக இருந்தது.

அவர் ராஜநாராயணுக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம் சங்கீதத்தில் தான் மேற்கொண்ட புதிய முயற்சிகள் பற்றியும் சங்கீத உலகில் நடந்து வரும் விஷயங்களைப் பற்றியும் விவாதிக்க மறந்ததே இல்லை உசேனி வர்ணமும் நடன பைரவி கீர்த்தனத்தின் சரணங்களும், பல ராகங்களில் புதிய சாகித்யங்களும் அவர்கள் கடிதங்களில் இடையறாது இடம் பெற்றிருக்கும் இலக்கியத்துக்கும் சங்கீதத்துக்கும் உள்ள தொடர்பு அறாது இருவரும் அதைப் போற்றிப் பாதுகாத்தார்கள். நம்முடைய சங்கீதத்தின் மேன்மைகள் பற்றி விரிவாக ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார் - ''தமிழனுக்குக் கிடைத்த ஒரு தனிச் செல்வம் கர்நாடக சங்கீதம் இதற்கு இணை உலகில் வேறு எந்த சங்கீதமும் இருக்குமா என்று தெரியவில்லை இந்தத் தனிப்பெரும் செல்வத்தைச் சம்பாதிக்காமல் இருந்தால் அந்தத் துர்ப்பாக்கியத்தை என்னவென்று சொல்வது? எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும் உலகில் எல்லோரும் ரசிக்கக் கூடியதாக இருக்கிறது ஆனால் சங்கீதம் அப்படி இல்லை சங்கீதம் தேசம்வாரியாக வேறுபட்ட அமைப்புகளில் அமைந்த ஒரு விசித்திரமான கலை ஆனால் நம் விளாத்திகுளம் சுவாமியவர்கள் ஆங்கிலப் பண்களை நம் கர்நாடக ராகங்கள் சிலவற்றில் பொருத்திப் பாடினார்கள். சங்கீதத்தில் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் உறவு தேடிக் கொடுத்த பெருமை நம் சுவாமியவர்களையே சேரும் அன்று முதல் இங்கு உயர்ந்த ஆங்கிலச்

சங்கீதம் நிரம்பிய பல படங்களைப் பார்த்தேன். நம் உள்ளத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டுதான் ரசிக்க வேண்டும். அவர்கள் ஆலாபனம் செய்யும்போது அதிதுரிதமாக ரவைகள் புரளுகின்றன. அது ஒன்றேதான் அதிலுள்ள சிறப்பு, இந்துஸ்தானி சங்கீதத்தில் குரலினிமையை நெளித்து நெளித்துக் காட்டுகிறார்கள். தேன்பாகுபோல் சாரீரம் இருந்தும் இசையைக் கேட்க முடிவதில்லை. ஆனால் நம் கர்நாடக ராகம் ஒன்றை முரட்டுத் தொண்டையில் ஒருவன் பாடினாலும் அதில் என்ன 'ஜீவு' இருக்கிறது தெரியுமா?

"ஆ"... என்ற ஒரு ஓசையில் எத்தனையோ கோடிக்கணக்கான ஒலி அணுக்கள் இருக்கின்றன. மனிதனுடைய குரல் பேதங்களில் லக்ஷம் விதமான அணுக்களும் இருக்கின்றன. ஒலியின் ஏற்றமும் இறக்கமும் இஷ்டப்படியெல்லாம்தான் சஞ்சரிக்கின்றன. ஆனால் மனிதனுடைய குரலையே ஏழு பிரிவுகளுக்குள்ளே அடக்கிவைத்த நம் முன்னோர்களின் பெருமைதான் என்ன! ஏழு ஏழு ஸ்வரங்கள். ஒரு எழுத்தை மாற்றி மற்றொரு எழுத்தைப் போட்டு ஏதோ ஒரு வரிசைக்கிரமமான அமைப்பை உண்டாக்கிவிட்டால் அதில் ஒரு தெய்வ நாதம் கிளம்பி விடுகிறது. அந்த நாத இழையின் நெளிவு ராகமாக உருப்பெற்று மணிக்கணக்காகச் சஞ்சரிக்கிறது. அதற்கு ஆதியும் அந்தமுமே இல்லை. இவ்வளவுதான் என்று வரையறுக்க முடியாத ஒரு உருவில் ரீங்காரம் செய்கிறது ராகம். ஆனால் காலத்தின் எல்லைக் கோட்டுக்குள் அடங்கின மனிதன் எல்லையற்ற அகண்டத்தில் ஒரு பரிபூரணத்துவத்தைக் கண்டதுபோல் ஒரு ராகத்தை முடிக்கிறான். இப்படி எத்தனை ஆயிரம் ராகங்கள், சாதாரணமாகக் கூவும் ஒரு குரலை இத்தனை பகுதிகளில் ஒழுங்குபடுத்திய தமிழனுடைய இசை ஞானத்தை இனி உலகம் என்றாவது மறக்குமா?

கவிக்குச் சிறப்பு கொடுப்பதும் இசைதான். இசையில்லாத சொற்கள் மனித உணர்ச்சியைப் புலப்படுத்தாது. இசை சேரும் போதுதான் உணர்ச்சி வெளிப்படுகிறது. வசனத்தினால் ஒரு உணர்ச்சியைத் தெரிவிக்கலாம். ஆனால் அந்த விஷயத்தை மனசுக்குள்ளிருந்து தள்ளும் உணர்ச்சியை வசனத்தில் எப்படி எழுதுவது? அங்கே இசைதான் வந்து உதவ வேண்டியிருக்கிறது. அடுத்தவன் உணர்ச்சியை நம் மனசில் குடியேற்றுவது இசைதான். இசையில்லாத சொற்களல்ல. அவை வெறும் எழுத்துக்கள்.

அழகுபெற்ற ஒலிதான் இசையென்று சொல்லிவிடலாம். ஆனால் எது அழகு? இதைப்பற்றி ஆராய்ந்தால் அதற்கு முடிவே இல்லை. அழகுத் தத்துவத்தைப் பற்றி மேல் நாட்டு ஆசிரியர்கள் பக்கம் பக்கமாக எழுதி வைத்திருக்கிறார்கள். மொத்தத்தில் பலவகைப்பட்ட பொருள்களின் ஒரு

ஒழுங்குபட்ட சேர்க்கையை அழகு என்று கருதுகிறார்கள் பலர். ஆகவே ஒரு ஒழுங்குக்குப்பட்ட பல பொருள்களின் சேர்க்கையை அழகு என்று நாம் கொள்ளலாம் அல்லவா? நம் ராகம் ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். சில ஸ்வரங்கள் வரிசைக் கிரமமாக அமைந்துவிட்டன. அவற்றின் ஐக்கியத்தில் அவை ஒன்றோடொன்று கட்டித் தழுவியாடும் 'அலகிலா விளையாட்'டில் நெஞ்சை உருக்கும் தீங்கானம் பிறக்கிறது. அந்த இசையைக் கேட்டு இது நல்ல ஒலியா அழகான ஒலியா என்று தீர்மானிப்பது நம் மாமிச அவயங்களல்ல. நமக்குள் ஒரு நல்ல ரசிகன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் இசையின் ஸ்பரிசத்தில் தன்னை மறந்து கண்களைப் பரவசத்தில் மூடி அனுபவிக்கிறான். நல்ல இசையில் அவன் பாம்பாகக் கட்டுண்டு சுருளுவான் இப்படிப்பட்ட இசைக்கு உள்ள சக்தியை வரையறுக்க முடியாது.

இன்பானுவத்துக்குக் கன்பூஷியஸ் கலைகளை நாடினாராம் இசையைப் பற்றி அவர் சொல்கிறார்: 'மனித சமுதாயத்துக்குப் பொருந்திய நற்குணங்களில்லாத மனிதனுக்குத் தான் இசை பயன்படாமல் போகும்' சேக்ஸ்பியரோ சங்கீதத்துக்கு உருகாதவன் சண்டாளன் என்கிறார் சீனாவில் ஒரு பழம் புத்தகத்தில் இவ்வாறு காணப்படுகிறது,. ''ரிஷிகள் இசையில் இன்பத்தை அனுபவித்தார்கள். மனிதர்களை நல்வழிப்படுத்த அது பயன்படும் என்று கண்டார்கள். மனிதனை இசை ஆட்கொண்டு அவன் பழக்க வழக்கங்களை மாற்றிவிடுவதால் பழைய காலத்து அரசர்கள் சங்கீதத்தின் மூலமாக பல சாஸ்திரங்களைப்போதிக்கச் செய்தார்கள்.''

இந்தியர்களாகிய நாமோ சங்கீதம் ஜீவாத்மாவைப் பரமாத்மாவோடு ஒட்டச் செய்யும் சக்தி வாய்ந்தது என்று நம்புகிறோம். இந்தியாவில்தான் இசையை தெய்வமாகப் போற்றியிருக்கிறார்கள் இந்த அமுத ஓடை ஓடும்போது பார்த்துக் கொண்டே நம் கலைப்பசி தீருமா?'' - என்றெல்லாம் நம் சங்கீதத்தின் மேன்மைகளைக் குறிப்பிடுகிறார்

இலக்கியத்திலும் இசையிலும் அழகிரிசாமிக்கும் ராஜநாராயணனுக்கும் சமமான ஈடுபாடு இருந்ததால் இருவரும் வெவ்வேறு ராங்களில் புதுப்புது சாகித்யங்கள் செய்து அவைகளைப் பரிமாறிக்கொண்டார்கள். இருவருக்கும் இசையில் சோதனை பண்ணிப் பார்க்கும் ஆவல் இருந்தது அழகிரிசாமி பத்திரிகைகளில் வேலை செய்து வந்ததால் ஸ்வரப்படுத்திய சாகித்யங்களை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்டும் வந்தார் ஒருமுறை ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார் ''இன்று முகாரியில் ஒரு அருமையான சாகித்யம் செய்தேன் ரொம்ப ரொம்பச் சுகமாக அமைந்துவிட்டது உண்மையில் சாகித்யங்கள் நிறையத்

தான் செய்யலாம் என்று தோன்றுகிறது. இந்தச் சாகித்தியத்தை உடனே உன்னிடம் பாடிககாட்ட வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. இத்துடன் மொத்தம் பத்து சாகித்யங்கள் இயற்றி இருக்கிறேன். ஸ்வரப்படுத்தும் ஆற்றல் இல்லாததால் பத்திரிகைகளில் இவற்றை வெளியிட முடியாமல் பேசாமல் எழுதி வைத்திருக்கிறேன். ஊருக்கு வருவதற்குள்ளாக ஒரு நாலைந்து• சாகித்யங்களை இயற்றி முடித்துவிட வேண்டும். வந்து வாத்தியாரையாவைக் கொண்டு ஸ்வரப்படுத்தி எங்கள் காரியாலயத்தி லேயே ஒரு அழகான புத்தகமாக வெளியிடப் போகிறேன். மொத்தம் சாகித்யங்கள் இருபதாவது வேண்டும்-என் நடன பைரவி ராகப் பாட்டு 'இசை' என்னும் சம்மந்தமூர்த்தி ஆச்சாரியாரின் பத்திரிகையில் வெளிவந்தது. நம் ஊரில் இருந்தபோது செய்த சாகித்யங்களை விரைவில் ஸ்வரப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வேன் உண்மையில் அந்த சாகித்யங்கள் மிகமிகச் சுகமாக இருக்கின்றன. 'தேனூறச் சொல்லுதற்கு .' என்ற பாட்டை இப்போது பாடினாலும் இடைசெவல் பாலத்தில் உப்போடை ஓரத்தில் உட்கார்ந்து பிறைச்சந்திரனைப் பார்ப்பதுபோன்ற அமைதியும் விச்ராந்தியும் ஏற்படுகிறது - நான் அடிக்கடி சங்கீதக் கச்சேரிகளுக்குப் போகிறேன் மதுரைமணி, ஜி.என்.பி., மாஸ்டர் மகாலிங்கம், அய்யம்பேட்டை வேணுகோபால், செம்பொனார் கோவில் சகோதரர்கள், குழிக்கரை பிச்சையப்பா வீருசாமி முதலியோரின் நாதஸ்வரம் முதலியவற்றைப் பல தடவைகள் கேட்டேன். நீடாமங்கலம் தவிலை நேற்றுக் கூடக் கேட்டேன் உண்மையில் தவில் வித்வான் அல்ல இவர் தவில் வாசிக்கவென்று பிறந்த ஒரு தெய்வம் நேற்று ஒரே கச்சேரியில் மொத்தம் 5 தவில்கள் ராகவன், தங்கவேலு, நீடா மங்கலம், அவர் மகன். மற்றொருவர் பிரமாதம்! பிரமாதம்! ஜி.என்.பி. பாட்டு இப்போது மிகவும் நன்றாக அமைந்துவிட்டது. எத்தனைத் தடவைகள் வேண்டுமானாலும் கேட்கலாம் இனி ஒரு வாரத்துக்குள் நீங்கள் சொன்ன காம்போதி, அடாணா சாகித்யங்களைத் தயாரித்துக் கட்டாயம் அனுப்புகிறேன். கம்பர் வள்ளுவர் பாடல்களும் அதோடு வரும் - பிரசண்ட விகடனுக்கு இரண்டொரு நாட்களில் 'படர்ந்தொளி பரந்துயிர்' என்ற கம்பர் பாடலை ஸ்வரப்படுத்தி அனுப்பவும் குழந்தைப் பாட்டுகளும் முத்தொள்ளாயிரப் பாட்டுகளை வைத்துக் கட்டுரைகளும் எழுதி எனக்கு அனுப்பு'' இவ்வாறு இசையுணர்வை இலக்கியத்தில் விஸ்தரித்துப் பார்க்க வேண்டும் என்று அழகிரிசாமி தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டார்.

சிறுவயதிலிருந்தே அழகிரிசாமிக்கு தியாகய்யரின் கீர்த்தனைகளில தீராத மோகம் இருந்தது இசை மேதை பீத்தோவனைக்கூட ஜெர்மனி தேசத்து தியாகப் பிரும்மம் என்றே குறிப்பிடுவார். ஒருமுறை

நாகர்கோவிலில் தியாகய்யர் பற்றிய திரைப்படம் ஒன்றை ராஜநாராயணனுடன் சேர்ந்து பார்த்தபோது படத்தில் தியாகய்யரின் பாட்லகள் இடம்பெறாதது குறித்து மிகவும் அதிருப்தி தெரிவித்தார். தியாகய்யரின் பாடல்களின் வாயிலாகத் தான் படம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறி தியாகய்யருடைய சில கீர்த்தனைகளைப் பாடிக் காட்டினார் என்று ராஜநாராயணன் குறிப்பிடுகிறார். அதில் மோகன ராகத்தில் அமைந்த 'நன்னு பாலிம்ப நடசிவச்சிதிவோ?' (என்னைப் பரிபாலிக்க நடந்தே வந்தாயோ என்று ராமனைப் பார்த்துக் கேட்கிறார்) என்ற கீர்த்தனையும் உண்டு. தியாகய்யரைப்பார்க்க திருவையாறுக்கு ராமன் எப்போது நடந்து வந்தான்? ஆனாலும் அப்படி நடந்ததாகவே அவர் சொல்கிறார். இதை ஒரு காட்சியாக ஏன் கொண்டு வந்திருக்கக் கூடாது? படத்துக்கு என்னைக் கதை எழுதச் சொன்னால் தியாகய்யரின் பாடல்களிலிருந்தே அவரை உருவாக்குவேன். அதுதான் நிஜமான கதையும்கூட என்று அழகிரிசாமி சொன்னதாக ராஜநாராயணன் குறிப்பிடுகிறார். அப்போது அழகிரிசாமியின் மனசுக்குள் விழுந்த இந்த விதைதான் பின்னால் 'திரிவேணி' கதையாக வந்தது. கம்பருடைய பாடல்களைக் கொண்டே கம்பரை உருவாக்கும் உத்தியைக் 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்' நாடகப் படைப்பில் அவர் கையாண்டிருக்கிறார்.

அழகிரிசாமியிடம் கலந்தாலோசித்தே தொ.மு.சி. ரகுநாதன் 'சுருதிபேதம்' என்ற இசை குறித்த ஒரு கதை எழுதினார். காண்டீபம் என்ற பத்திரிகையில் வந்த அக்கதை சில சர்ச்சைகளுக்கு உள்ளானது. ஒரு வாசகர் 'நீங்கள் உங்கள் கதையில் மேளகர்த்தாக்கள் 32 என்று எழுதியிருக்கிறீர்கள். அது எப்படி? 72 மேள கர்த்தாக்களல்லவா? மேலும் கல்யாணி ராகத்துக்கு கைசிகி நிஷாதம் என்று எழுதியிருக்கிறீர்கள். காகலி நிஷாதம் அல்லவா?' என்று கேட்டிருந்தார். தொ.மு.சி. அழகிரிசாமியிடம் விளக்கம் கேட்ட பிறகு அடுத்த வாரம் இப்படி ஒரு பதில் வெளியானது - மேளகர்த்தாக்கள் 32 தான். 72 என்று குழப்படி செய்தவர் வேங்கடமகி. ஸ்தானமில்லாத ஸ்வரங்களைக் கொண்டு தாமே 40 மேள கர்த்தாக்களை அதிகப்படியாக உற்பத்தி செய்துவிட்டார். உதாரணமாக கனகாங்கி ராகத்தையே எடுத்துக் கொள்வோம், காந்தாரத்துக்கு சதுஸ்ருதி ரிஷபத்தையும், நிஷாதத்துக்கு சதுஸ்ருதி தைவகத்தையும் சேர்த்துக் கொண்டு கனகாங்கி என்ற ஒரு ராகத்தை உண்டாக்கினார். ரிஷபம் எப்படி காந்தாரமாகும்? இதேபோல ஒரு ஸ்வரத்துக்கு வேறு பெயரைக் கொடுத்துப் பல ராகங்களை உண்டாக்குவதை ஒப்புக் கொள்ள முடியுமா? ஆகவே மேள கர்த்தாக்கள் 72 என்பது அபத்தம். 32 கர்த்தாக்களுக்குத்தான் ஸ்வரங்கள் உண்டு. கல்யாணி ராகத்துக்கு ஞாபகமறதியாகக் கைசிகி நிஷாதம் என்று போட்டுவிட்டேன். காகலி நிஷாதம் என்றுதான் இருக்க

வேண்டும். சங்கீத சம்பந்தமாக மேற்கொண்டு நான் சர்ச்சை செய்ய விரும்பவில்லை. நான் எழுத்தாளனே ஒழிய சங்கீத வித்வானல்ல' - இவ்வாறு அவர் இசையின் செயல்பாடு குறித்த ஒரு தர்க்க ரீதியானப் பார்வை கொண்டிருந்தார். தான் எழுதிய சில வானொலி நாடகங்களுக்கு அவரே பாடல்கள் எழுதி இசை அமைத்திருக்கிறார்.

இசையுணர்வை இலக்கியத்தில் விஸ்தரித்துப் பார்ப்பது மட்டுமில்லாமல் இசையுணர்வின் வாயிலாகவே இலக்கியத்தை முக்கியமாகக் கவிதைகளை அளவிடக்கூடிய பார்வை அவரிடம் உருவானது பல சிற்றிலக்கியங்களிலும் நாட்டுப்புற இலக்கியங்களிலும் உள்ள இசைக் கூறுகளின் தன்மைகளை அடையாளம் கண்டு அவையும் சிறப்பான இலக்கியங்களே என்று அவைகளின் மேன்மைகளை எடுத்துரைத்தார். காவடிச் சிந்து பாடல்களின் மேன்மையை அவர் உணர்ந்ததும் இவ்விதமாகவே பம்பைமேள ஒலியுடன் பாமர மக்கள் இப்பாடல்களைப் பலவிதமாக லயித்துப் பாடுவதைக் கேட்ட பிறகே அவர் காவடிச்சிந்தின் மதிப்பை உணர்ந்தார். சில வரிகள் ரசமில்லாதவை என்று திருத்தப்பட்டும், சுத்தகரிக்கப்பட்டும் தவறுதலாகப் புழங்கப்பட்டு வந்த நிலையில் சரியான வரிகளைப் பலர் சொல்லக் கேட்டும் அலைந்து திரிந்து சேகரித்தும் புதிய பதிப்பாகக் கொண்டு வந்து அதில் உள்ள இசைக்கூறுகளின் பின்புலத்தில் சரியான வரிகளுடன் காவடிச் சிந்துப்பாடல்களை ரசித்து அனுபவிப்பதற்குரிய ஒரு சூழலை உருவாக்கினார்

அதேபோல் நம்முடைய தெம்மாங்குப் பாடல்களும், அம்மானை போன்ற நாட்டுப் பாடல்களும் இலக்கண அடிப்படையில் அமையாவிட்டாலும் தமக்குரிய இசைப் பண்புகள் கொண்டவை என்பதைப் பல பாடல்களைக் காட்டி நிரூபணம் செய்தார் தமிழ் மொழியில் உள்ள இசைப்பாடல்கள் வெறும் கீர்த்தனைகளாக மட்டும் இல்லாமல் கண்ணி, ஆனந்தக் களிப்பு, சிந்து போன்ற பல வடிவங்களில் வெளிப்படுவதைக் குறிப்பிடுகிறார் உதாரணத்துக்கு வள்ளலாரின் கீழ்க்கண்ட பாடல்:

''பொருள் நான் முகனும்மாலும்
தெருள் நான் மறையும் நாளும்
போற்றும் சிற் றம்பலத்தே
ஏற்றும் மணிவிளக்காய்
அருள் நாடகம் புரியும்
கருணாநிதியர் உன்னை

ஆளவந்தார் வந்தார் என்றெக்
காளநாதம் சொல்கின்றதே''

இதுபோன்ற வள்ளலாரின் இசைப்பாடல்களால் அவர் தமிழ்த்தொண்டு மேலும் சிறப்புப் பெறுவதைக் காண்கிறார். உண்மையின் காவடிச்சிந்தின் இசைக் கூறுகளையும் வள்ளலாருடைய பாடல்களின் இசைத் தன்மையையும்தான் பாரதியார் தனக்கு முன்னோடியாகக் கொண்டார் என்று அழகிரிசாமி குறிப்பிடுகிறார்.

இலக்கியத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையின் எல்லாவிதமான இயக்கங்களிலும், ஓசைகளிலும் இசை ஊடுருவி இருப்பதை அவரால் அடையாளம் காண முடிகிறது. சம்பிரதாயமான இசைக் கட்டுகளுக்குள் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாமல் எங்கும் ஒரு கட்டற்ற இசையின் வீச்சை அவர் பார்க்கிறார். உயிரற்ற இயற்கை இனிய ஒலிகளை உண்டாக்குவதுபோல் உயிருள்ள இயற்கை இன்னும் அதிக இனிமை பொருந்திய ஒலிகளை உண்டாக்குகிறது. அதனால்தான் ஏற்ற மிறைக்கிறவர்களின் கீதம் காலையில் ஊர்க்கோவிலில் வாசிக்கும் நாதஸ்வரத்திலிருந்து பிறக்கிற பூபாள ராகம், இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள தண்டவாளத்தில் சீட்டியடித்துக் கொண்டு ஓடும் ரயில் முழக்கம் ஆகிய மண்ணுலகத்து ஓசைகள் எல்லாம் அவருக்கு நல்லோசைகளாக இருக்கின்றன.

சின்னப் பறவையின்
மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற்காற்றே

என்று பாடும் பாரதியார்

மண்ணுல கத்துநல்
ஓசைகள் காற்றெனும்
வானவன் கொண்டு வந்தான்
பண்ணில் இசைத்தவ்
வொலிகள் அனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்

என்று மண்ணுலகத்து ஓசைகளைப் பாராட்டுவதுபோல் அழகிரிசாமியும் ''சென்னையில் முள்ளங்கி விற்கும் அந்த சிறுவர்களின் குரலையும், மொக்கு மாவு விற்கும் ஏழைப் பெண்ணின் உதய ராகத்தையும், தூங்குமூஞ்சி மாமா என்று தினந்தோறும் அதிகாலையில் துயிலெழுப்பும் அந்தத் தெய்வ மதலை மாலதியின் மதுரமான சாரீரத்தையும் நான் திரும்பவும் கேட்கும் நாள் என்றோ? அவையெல்லாம் என் செவிக்கினிய நல்லோசைகள்'' என்கிறார்.

காற்றெனும் வானவன் கொண்டுவரும் நல்லோசைகளை அனுபவிக்கக் கூடிய உள்ளத்துக்கு மண்ணுலகத்தில் உள்ள ஒவ்வொன்றின்மீதும் அன்பு பிறக்கிறது. ஒவ்வொன்றிலும் அழகு குடிகொண்டிருப்பது புலனாகிறது. மனிதத் தன்மையைப் பரிபூரணமாகச் சம்பாதித்துக் கொள்ளவும் முடிகிறது என்று அழகிரிசாமியே குறிப்பிடுவதுபோல் அவருடைய அழகியல் நிலைப்பாடுகளுக்கெல்லாம் அவருடைய இசையுணர்வே ஆதாரமாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

# 6
# நாடகங்கள், நாவல்கள், மொழிபெயர்ப்புக்கள்

மற்ற இலக்கிய வடிவங்களான கதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஆகியவற்றில் அழகிரிசாமியின் இலக்கிய ரீதியான பங்களிப்பு இருந்த அளவுக்கு நாடகத்தில் அவருடைய பங்களிப்புக் குறைவானதாகவே இருந்தாலும் எழுதப்படும் நாடகங்கள் குறித்தும் நிகழ்த்தப்படும் நாடகங்கள் குறித்தும் அவர் தீர்க்கமான கருத்துக்கள் கொண்டவராக இருந்திருக்கிறார். நிகழ்த்தப்படும் நிலையிலேயே நாடகம் முழுமையான வடிவம் கொள்கிறது என்றும் படிப்பதற்காக எழுதப்படுபவைகளை வெறும் இலக்கியப் பிரதிகளாகத்தான் கருத முடியுமே தவிர அவைகளை முழுமையான நாடகங்கள் என்று சொல்ல முடியாது என்றும் அழகிரிசாமி கருதினார் அருணாசலக் கவிராயரின் ராமநாடகம் பற்றிய மதிப்பீட்டில் கூட அது பாடுவதற்காகவே எழுதப்பட்ட நாடகம் என்றாலும் அந்தப் பாடல்களைப் பாடும் நிலையிலேயே அவை நாடக வடிவம் கொண்டு நாடக உணர்வுகளை எழுப்புவதைக் குறிப்பிட்டு அவ்வகையில் அது ஒரு சிறப்பான நாடக இலக்கியம் என்கிறார் அதேபோல் முக்கூடற் பள்ளுப்பாடலகளையும் படிப்பதைவிட மேடையில். நடிப்போடு பாடும்போது அனுபவிப்பதே அதிக ரசானுபவத்தைக் கொடுக்கும் என்கிறார் கிராமிய மெட்டுகளில் இந்தப் பாடல்கள் மந்தை நாடகங்களில் பாடப்படும்போது நம்முடைய முன்னோர்கள் இவைகளைக் கேட்டு அனுபவித்ததை அவர் குறிப்பிடுகிறார் காவடிச் சிந்து பாடல்களைக் கூட இசை வாத்தியங்களின் துணையுடன் ஒரு நிகழ்வு சார்ந்த பின்புலத்தில் கேட்டுப் பரவசமான நிலையிலேயே அந்தப் பாடல்களின்மீது மோகம் கொண்டார் அழகிரிசாமி அதனால் வெறும் படித்தல் என்று இல்லாமல் நிகழ்த்துதலின் மூலமாக ஒரு நாடக உணர்வைப் பெறுதல் என்பது நாடகத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி என்பதை அழகிரிசாமி நன்கு அறிந்தவராக இருந்தார் இசை ஒலிகளின் பல்வேறு இயக்கங்கள் உருவாக்கும் பாதிப்புகள் பற்றி அவர் கொண்டிருந்த பல நுட்பமான உணர்வுகள் இத்தகைய ஒரு மனநிலையிலிருந்தே பெறப்பட்டவை

ஆகும். அதனாலேயே நம்முடைய காவடிச் சிந்து, குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு, இராம நாடகம் ஆகிய இசை சார்ந்த பாடல் இலக்கியங்களை நாடகமாக விரித்துப் பார்க்கக் கூடிய பார்வை அவரிடம் உருவானது.

அதேபோல் நம்முடைய வடநாட்டு நாடகாசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய நாடகாசிரியர்களின் படைப்புகளை யெல்லாம் படித்து நாடகம் குறித்த ஒரு செறிவான பார்வை கொண்டிருந்தார். வெறும் கேலிக்கூத்தான பொழுதுபோக்கு நாடகங்களை ஒதுக்கி பழைய கிரேக்க ஆசிரியர்கள், சேக்ஸ்பியர், மோலியர், இப்ஸன், பிரெக்ட், காளிதாசன் போன்ற மேடையில் மட்டுமின்றி இலக்கிய உலகிலும் இடம் பெறக்கூடிய நாடகங்கள்தான் நீண்ட நெடுங்காலத்துக்கு அழியாமல் நிலைத்து நின்று மக்களைக் கவர்ந்து கொண்டிருக்கும் என்று அழகிரிசாமி கருதினார்.

அதனால் அவர் வெறுமனே படிப்பதற்காகவென்று நாடகங்களை எழுத விரும்பவில்லை. வானொலியில் கேட்பதற்கென்று அவரைக் கேட்டுக் கொண்டதின் பேரிலும், மேடையில் நிகழ்த்தவென்று சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் குழுவினரால் வற்புறுத்தப்பட்டதின பேரிலும் அவர் நாடகங்கள் எழுத முன் வந்தார் இவ்விதமாக அவர் எழுதியவைதான் வானொலிக்கான சில சிறு நாடகங்களும், கவிச் சக்கரவர்த்தி, வஞ்சமகள் ஆகிய முழுநீள நாடகங்களும். அவருடைய வஞ்சமகள் மற்றும் கவிச்சக்கரவர்த்தி ஆகிய முழுநீள நாடகங்களிலேயே நாடக வடிவத்தில் சோதனை செய்து பார்க்க வேண்டும் என்ற அவரது எண்ணம் ஈடேறியது என்று சொல்ல வேண்டும்

உண்மையில் நிர்ப்பந்தங்களின் காரணமாகவே அழகிரிசாமி இந்த இரண்டு நாடகங்களையும் எழுதினாலும் கம்பராமாயணத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடும் கம்பர் மீது அவர் வைத்திருந்த பெருமதிப்புமே இந்த நாடகங்கள் உருவாகக் காரணமாக இருந்தன. கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று குறிப்பிடும் பாரதியார் கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும் என்று சொல்வதுபோல இத்தகைய ஒரு அரிய காவியம் எப்படி ஒரு மானுடச் செயலால் உருவானது என்ற வியப்புடன் அத்தகைய கம்பரின் வரலாற்றை இலக்கியமாக்குவதற்குத் தமக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பு என்றே இந்த நாடக முயற்சியைக் கருதினார். கம்பராமாயணப் பாடல்களைக் கொண்டே கம்பரை உருவாக்கும் ஒரு உத்தியையும் அவர் மேற்கொண்டார் கம்பருடைய வாழ்க்கைச் சம்பவங்கள் என்று ஆதாரப்பூர்வமாகச் சொல்லப்படுபவை மிகச் சிலவே என்பதால் கம்பருடைய பாடல்களில் தெரியும் ஆளுமைக்கு ஏற்பச் சில

புனைவுகளின் அடிப்படையில் கவிச்சக்கரவர்த்தி நாடகத்தை அழகிரிசாமி எழுதியிருக்கிறார்.

ஒரு பெருங்கவிஞனின் எழுச்சியை உருவகப்படுத்தும் விதமாக அரசு அதிகாரத்துக்கும் போகத்துக்கும் அடிபணியாது தன்னுடைய கவித்திறத்தின்மீது தான் கொண்டுள்ள நம்பிக்கையையும், உறுதியையும் வெளிப்படுத்தும் விதமாகக் கம்பரை இந்த நாடகத்தில் அழகிரிசாமி சித்தரித்துள்ளார். போலிச் சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்படாத ஒரு தன்மையையும், வறியவர்கள்பால் கம்பர் கொண்டிருந்த பரிவையும் வெளிப்படுத்திக் கம்பரின் அதிகம் வெளியே தெரியாத ஒரு முகத்தையும் அழகிரிசாமி வெளிக்கொணர்கிறார். ஒரு செவ்வியல் சார்ந்த படைப்பில் கூடச் சமூக உணர்வுக் கண்ணோட்டத்தைப் புகுத்தித் தன்னுடைய சமகால உணர்வுகளுக்கும் நியாயம் செய்பவராகவே அழகிரிசாமி இந்த நாடக உருவாக்கத்தில் வெளிப்படுகிறார்.

கம்பருடைய வாழ்க்கையில் நடந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்களையும் கற்பனையாகப் புனையப்பட்ட சில நிகழ்ச்சிகளையும் வைத்து அமைக்கப்பட்டுள்ள இந்த நாடகம் கம்பர் தமது 'ஏர் எழுபது' நூலைச் சடையப்ப வள்ளல் இல்லத்தில் அரங்கேற்றம் செய்யும் நிகழ்ச்சியுடன் தொடங்குகிறது. உழவுத் தொழிலையும், உழவரையும் சிறப்பிக்கும் இந்நூல் அனைவரது பாராட்டையும் பெறுகிறது கம்பருடைய கவித்திறமையைக் கேள்விப் பட்டுச் சோழ மன்னன் குலோத்துங்கன் அவரை அரசவைக்கு அழைக்கிறான். ஒட்டக்கூத்தர், அங்கே அரசவைப் புலவராக இருக்கிறார். அரசவையில் நடனமாடிய நாட்டிய மங்கையின் கலைத்திறமையைப் பாராட்டி கம்பர் தம் காலில் அணிந்திருந்த பொற்சிலம்புகளைக் கழற்றி அவளுக்குப் பரிசாக அளிக்கிறார் கம்பர் போன்ற கவிஞர்கள் சம்பிரதாயத்தை மீறுவது இயல்பானதே என்பதை உணரும் குலோத்துங்கன் தனது நீண்ட ஆசையான இராமகாதையின் தமிழ் ஆக்கத்தை ஒட்டக்கூத்தரிடமும் கம்பரிடமும் ஒப்படைக்கிறான். போர்க்களத்தில் பகைவரைவென்று திரும்பும் குலோத்துங்கனுடைய போர்ப் பராக்கிரமங்களை ஒட்டக்கூத்தர் பாட ரத்தமில்லாத உழவர்களின் நெல் போர்க்களத்தைக் கம்பர் பாடுகிறார். தாங்கள் இருவரும் வேறுபட்டவர்கள் என்பதைக் கம்பர் ஒட்டக்கூத்தருக்கு எடுத்துரைக்கிறார். குலோத்துங்கனுக்குக் கம்பரின் கவித்திறமைமீது உண்மையிலேயே அபிமானமும் மதிப்பும் இருந்தாலும் எதிரி நாட்டுக்கு நெல் அனுப்பிய சடையப்ப வள்ளலைக் கம்பர் போற்றிப் பாராட்டுவது அவன் மனதில் சிறிய விரிசலை உண்டு பண்ணுகிறது. கம்பரின் பாட்டில் உள்ள ஒரு சாதாரணப் பிரஜையின் வாக்கில் நடமாடிய துமி என்ற வார்த்தையின்

பொருளை அறியாது அவமானமுற்ற ஒட்டக்கூத்தர் அரசன் மனதில் உள்ள விரிசலைப் பெரிதாக்குகிறார் தாம் இயற்றிய இராமாயணப் பாடல் களையும் கிழத்தெறிகிறார் இந்தச் சூழலில் அங்கு இராமாயணக்காவியம் இயற்றுவதற்கு வாய்ப்பில்லை என்று தெரிந்து கம்பர் சடையப்ப வள்ளலின் இருப்பிடத்துக்கே வருகிறார்.

சடையப்ப வள்ளல் இனி மன்னனின் அனுமதியின்றிப் பகை நாட்டுக்கு நெல் அனுப்பக் கூடாது என்று சோழ மன்னன் உத்தரவிட்டதைச் சிறு செயல் எனக்கம்பர் விமர்சிக்கிறார் ஒட்டக்கூத்தர் அவர்கள் விரிசலுக்கு மேலும் தூபமிடுகிறார். இந்நிலையில் கம்பர் ராம காவியம் இயற்றும் பணியில் தீவிரமாக ஈடுபடுகிறார். சடையப்ப வள்ளலின் முன்னிலையில் இரவும் பகலும் பாடல்கள் இயற்றப்பட்டு அனைவரின் பரவசங்களுக்கு இடையே ராமாயண மகாகாவியம் நிறைவடைகிறது. சடையப்ப வள்ளலின் இருப்பிடத்தில் அதை அரங்கேற்றுவது அவருக்கு மேலும் பல இன்னல்களை உருவாக்கும் என்று வைணவத் தலமான ஸ்ரீரங்கத்தில் வைணவப் பெரியார்களின் ஆசியுடன் கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றுகிறார் அவர் புகழ் எங்கும் பரவுகிறது பாண்டியநாடு, கொங்கு நாடு, ஆந்திரம் எனப்பல நாட்டு மன்னர்கள் கமபரைத் தங்கள் நாட்டுக்கு அழைக்கிறார்கள் இயல்பில் தமிழ்ப்பற்றுக் கொண்ட சோழ மன்னன் குலோத்துங்கனும் கம்பரின் இநத அரிய செயலைப் பாராட்டி அவர் பிறந்த திருவழுந்தூர் வளநாட்டுக்கு அருகில் உள்ள பகுதிக்குக் கம்ப நாடு என்று பெயர் சூட்டி, அதைக் கம்பருக்கே வழங்குகிறான் சோழச் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்திக்குச் செலுத்தப்படும் கல்யாண வரித் தொகைகளை எல்லாம் கம்பருக்கே வழங்குகிறான் சோழன் வழங்கிய கல்யாண வரிக் காணிக்கையை அரங்கேற்றத்தின்போது உடனிருந்த அங்கீகாரமின்றித் தவிக்கும் கொங்கு நாட்டுப் புலவர் களுக்கும் அவர்கள் வம்சத்தாருக்கும் கம்பர் வழங்கிவிடுகிறார்

இதற்கிடையில் காதல் வயப்பட்ட கம்பரின் மகன் அம்பிகாபதியும், சோழன் மகள் அமராவதியும் கைது செய்யப்பட்டுத் தகாத காதல் எனக் குற்றம் சாட்டப்பட்டு அரசனால் மரண தண்டனை விதிக்கப்படுகிறார்கள். தண்டனையை நிறைவேற்றுவதற்குமுன் கம்பரின் வரவுக்குக் காத்திருக்கிறான் சோழன் அரச கௌரவத்தை நிலைநாட்ட அது நியாயமானத் தண்டனை என்பது சோழன் கருத்து கொள்ளைக்காரர்களும் அரசர்களான பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்த்து அவர்களுக்குள் தான் திருமணம் என்பது என்ன நீதி என்ற கம்பரின் வாதங்களுக்குப் பதிலளிக்க முடியாத சோழன் தண்டனையை மாற்ற முடியாது என்கிறான்

மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது கம்பர் விரக்தியுற்று நாடு துறந்து நாடோடியாகிறார். சடையப்ப வள்ளலும் உயிர் துறக்கிறார்.

கம்பராமாயணப் பாடல்கள் மக்களிடையே பரவிப் பலர் இல்லங்களில் நடமாடுவதைக் கம்பர் பார்க்கிறார். அம்பர் மாகாளம் என்ற ஊரில் கம்பர் எழுதிய 'வஞ்ச மகள்' நாடகம் அரங்கேறுகிறது கம்பர் ஒருமுறை அரசவையில் பரிசளித்த நடன மாதின் மகளான சிலம்பி அற்புதமாக அந்த நாடகத்தை நிகழ்த்தியதைக் கம்பர் வியந்து பாராட்டுகிறார் கம்பர் பரிசளித்த சிலம்புகளை அணியாமல் அதைச்செல்வமென அந்த நடனமாதின் குடும்பம் போற்றிப் பாதுகாக்கிறது கம்பர்ச் சிலம்பி என்று பெயரிடப்பட்ட அந்தப் பெண் இனி தன் நடனச் சிலம்பின் பெருமை துலங்க அம்பர்ச் சிலம்பி என அழைக்கப்படுவாள என்கிறார் கம்பர் நாடெங்கும் அலைந்து திரிந்து கடைசியில் பாண்டிய நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட நாட்டரசன் கோட்டையில் அக்கோட்டைத் தலைவனின் பாதுகாப்பில் தங்குகிறார் அங்கு அவர் உயிர் பிரிகிறது இனி கம்பர் எல்லாத் தமிழ் இல்லங்களிலும் புகுந்துவிட்டதை நாட்டரசன் கோட்டைத் தலைவன் சொல்லி அவருக்கு அஞ்சலி செலுத்த நாடகம் முடிகிறது

அழகிரிசாமி ஒரு கதைசொல்லும் பாணியில் வரிசைக்கிரமமாகச் சம்பவங்களை அடுக்கிச் செல்லாமல் கம்பரின் ஆளுமையைப் புலபபடுத்தும் வகையில் சம்பவங்களைத் தோவு செய்து நாடகத்தை நகர்த்திச் செல்கிறார். சடையப்ப வள்ளல், குலோத்துங்க சோழன் மற்றும் ஒட்டக்கூத்தர் ஆகியோருடன் கம்பர் கொண்ட உறவுகளும் முரண்களும் மட்டுமல்லாமல் சோழனின் பட்டமகிஷி புவன முழுதுடையாள், சடையப்ப வள்ளலின் மனைவி மகேஸவரி, மாவண்டூரைச் சேர்ந்த கொலலன் சிங்கன், நாட்டிய மங்கை சிலம்பி, திருவழுந்தூர் நகரவாசியான நாராயண பட்டர் ஆகிய சிறுசிறு பாத்திரங்கள் கூட கம்பரின் ஆளுமை வெளிப்பட பங்களிப்பு செய்கிறார்கள் ஒரு பெருங்கவிஞனின் எழுச்சியையும், ஒரு மகாகாவியத்தின் உருவாக்கத்துக்கான சூழலையும் வடிவமைப்பதறகாகச் சிறுசிறு கூறுகளாக நாடகத்தை நகாத்திச் செல்கிறார். முதலில் ''ஏர் எழுபது'' பாடல் அரங்கேற்றத்தில் வெளிப்படும் கம்பரின் சமூகநோக்கு, சடையப்ப வள்ளலுடன கொண்டுள்ள ஆழ்ந்த பிணைப்பு, பின்னர் அரசவையில் நாட்டிய மங்கைக்குப் பரிசளிப்பதின்மூலம் அரச சம்பிரதாயங்களுக்கு அடிபணியாத ஒரு சுதந்திர மனப்போக்கு, ஒட்டக் கூத்தர் மற்றும் குலோத்துங்க சோழன் ஆகியோருடன் கொண்ட வேறு பாடுகள் மூலம் வெளிப்படும் கம்பரின் கவித்துவப்பார்வை மற்றும் அதிகாரத்துக்கு அஞ்சாத குரல், சடையப்ப வள்ளலின் மீது திணிக்கப்படும்

நிர்ப்பந்தங்களால் கம்பர் கொள்ளும் மனநெகிழ்ச்சி, தன் கவித்துவத்தின் மீது முன் வைக்கப்படும் சவால்களால் பீறிட்டு எழும் படைப்புத் திறன், இராமாயண அரங்கேற்றத்தின்போது சக கலைஞர்களிடம் அவர் காட்டும் பரிவு, எளிய நாடகக் கலைஞரான சிலம்பியிடம் அவர் காட்டும் அன்பு என ஒரு மகா கவிஞனின் படிமம் மெல்ல மெல்ல வெளிப்பட்டு வளர்ச்சியடைகிறது கம்பரின் பற்றற்ற தன்மைக்கும் நாடோடியாக அலைந்து உயிர் விடும் முடிவுக்காகவும் அவர் மகன் அம்பிகாபதி குறித்த நிகழ்வுகள், புனைவுத் தன்மையுடன் அமைக்கப்பட்டிருந்தாலும் கம்பரின் ஆளுமைக்கு அவை பெரிய பங்களிப்புச் செய்யவில்லை அரசின அதிகாரமும் மதிப்பீடுகளும் எப்போப்பட்ட கலைஞனையும் விட்டு வைப்பதில்லை என்பதையே கம்பரின் இறுதிக்கட்ட வாழ்க்கை புலப்படுத்துகிறது.

கம்பருடைய பாத்திரப் படைப்பின் வாயிலாக அழகிரிசாமி ஒரு உண்மையான படைப்புக் கலைஞனின் பிமபத்தை உயர்ததிப் பிடிக்கிறார் ஏர் எழுபது அரங்கேற்றத்திற்குப் பிறகு, கம்பரை அரசவைக்கு அழைத்துச் செல்ல நினைக்கும் புலவர் குணவீர பண்டிதரின கோரிக்கைக்குக் கம்பர் இவ்வாறு கூறுகிறார் ''சோழன் அவைக்களத்துக்குச் செல்ல வேண்டும் என்று எனக்கு விருப்பம் உண்டாகவில்லை சோழன் கேட்டு மகிழ்வதற்காகவா நீங்களும் நானும் பாடுகிறோம் நாம் பாடுவதைக் கேட்டு மகிழ்கிறவர்கள் மகிழட்டும் சோழன என் பாடடை விருமபினால் அவனே சடையப்ப வள்ளலின் இல்லத்துக்கு வருவான் அலலவா?'' அரசவையில் சிறப்பாக நடனம் ஆடிய நாட்டிய மங்கைக்கு உணர்சசிப் பெருக்கில் கம்பர் பரிசளிக்க முன் வந்தபோது அரசன் முனனிலையில அரசச் சம்பிரதாயத்தை மீறுவது முறையல்ல என்று ஒட்டக்கூத்தர் கருததுத் தெரிவிக்கும் நிலையில் கம்பர் இவ்வாறு கூறுகிறார் ''கலையைப் போற்றிக் கௌரவிக்கும் உரிமை சோழச சக்கரவாததிக்கு மட்டும்தான் உண்டா? எந்த ஏழைக்குமே அந்த உரிமை உண்டு என்பது என் எணணம் ஏழை உவச்சனுடைய மகனாக இருந்த எனனை என புலமைக்காகப பெருமைப்படுத்தி அரசவை அழைக்கும அளவுககு எனனை உயர்த்தியவன் ஒரு வேளாளன்! சடையப்ப வள்ளல்!''

மன்னரைப் பாராட்டி கோவை பாடிய குமாரப் புலவா குறித்து கம்பருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் நடக்கும் ஒரு உரையாடல்

கம்பர்: நீங்கள் மன்னர்களைப் போறறும் புகழுரைகளையே நூலாக்கி இலக்கியமும் ஆக்கிவிட்டீர்கள் ஏழு வயதுப் பேதைப் பெண்ணும்கூட மன்னன்மீது காதல் கொண்டதாக உலாப்பாடி இந்த உலகத்தில் பேரும் புகழும் கவிச் சக்கரவாத்திப்

பட்டமும் பெற முடிகிறதைப் பார்த்தால் இந்தப் புலவன் எல்லோரையும் விட ஆயிரம் மடங்கு புகழ்ந்தால் தனக்கும் கவிச் சக்கரவர்த்திப் பட்டம் கிடைக்கும் என்று முடிவு கட்டியிருக்கிறான். என்ன தவறு!

கூத்தர்: உலா இயற்றுவது இழுக்கான செயல் அல்ல.

கம்பர்: கோவை இயற்றுவதும் தான் இழுக்கான செயல் அல்ல.

சோழ மன்னனின் போர்க்களப் பராக்கிரம் குறித்த ஒட்டக்கூத்தர் பாடல் பற்றி ஒரு உரையாடல்:

கம்பர்: பாண்டிய மன்னர்களின் காதலிமாரும் மைந்தரும் வந்து நின்று 'எமது தலையைக் காப்பாற்று. எமது உடலைக் காப்பாற்று. எமது உயிரைக் காப்பாற்று என்று சோழனிடம் பரிதாபமாகக் கெஞ்சுவது கண்ணுக்கினிய ஒரு காட்சியா கூத்தர் பெருமானே? பெண்களும் சிறுவர்களும் இப்படி அலறித்துடிக்கும் வண்ணம் வெற்றி கொள்வதில் சோழனுக்குத்தான் என்ன பெருமை?

கூததைர்: நம் சக்கரவர்த்தியின் வெற்றியைவிட ஒரு இனிய காட்சியும் இனிய செய்தியும் இருக்க முடியுமா கம்பரே? ரத்தமும் மாமிசமும் வெள்ளமாக ஓடிக்கொண்டிருக்க அதன் நடுவே தலையற்ற கவந்தங்கள் கூத்தாடும் போர்க்களச் சிறப்பைப் பாடுவது புலவர் மரபு என்பதை நீர் அறிய மாட்டீரா?

கம்பர்: அது தங்களைப் போன்ற புலவர்களின் மரபு. நானோ புதியதொரு போர்க்களத்தைப் பாடி புதியதொரு மரபைத் தொடங்கி வைத்திருக்கிறேன் 'ஏர் எழுபதில்'

கூத்தர்: அந்தப் போர்க்களம் எப்படிப்பட்டது?

கம்பர்: உழவர்களின் நெல் போர்க்களம். அந்தக் களத்தில் ரத்தமுமில்லை மாமிசமுமில்லை கவந்தங்களும் கூத்தாடாது. ஆனால் திருமகள் கொலு வீற்றிருப்பாள். அங்கே போய் மடி ஏந்தியவர்களுக்கெல்லாம் பசி நீங்கும். அந்தக் களத்தைப் பாடுவதே சிறப்பு.

கம்பருக்கும் குலோத்துங்க சோழனுக்கும் வேறுபாடுகள் தோன்றி முரண்பாடுகள் தலைதூக்கியபோது அவர்களிடையே நடைபெற்ற ஒரு உரையாடல்

சோழன்: நீங்கள் எதற்காக என் மனதுக்கு மாறுபட்டே நடக்க வேண்டும்?

கம்பர்: நீ அரசன். நான் கவிஞன். இதுதான் காரணம்.

சோழன்: இந்த இருவரும் கீரியும் பாம்பும் அல்லவே.

கம்பர்: விரோதிகளல்ல. ஆனால் வேறுவேறானவர்கள் அவரவர் ஸ்தானத்தை எண்ணிப் பெருமைப்படுபவர்கள். என்னை ஆஸ்தானக் கவியாக்குவதும், கூத்தருக்கு இணையாகக் கருதுவதும் என்னை கௌரவிக்கும் செயல் என்கிறாய். ஆனால் நான் ஆஸ்தானக்கவியாக இருக்க எந்தக் காலத்திலும் உடன்படமாட்டேன். கூத்தர் வேறு, நான் வேறு. அவர் நிலைக்கு நான் வரமாட்டேன். என் நிலைக்கு அவரால் வரவே முடியாது. அவர் கவிதையை ஜீவனோபாயமாக ஆக்கிக் கொண்டவர். எனக்குக் கவிதை ஜீவனோபாயமல்ல. ஜீவன். நான் ஆஸ்தானக்கவிஞனாக இருந்து உலாவும் பரணியும் பாடி என் ஆயுளைக் கரைக்க விரும்பவில்லை. எந்த மனிதனும் எந்த மதத்தினனும் எந்த நாடும் பயன்பெறக்கூடிய பேரிலக்கியத்தைப் படைக்கவே எண்ணினேன் என் எண்ணம் நிறைவேறியும விட்டது ''

இவ்வாறு உரையாடல்கள் வழி வெளிப்படும கருததுக்களும், பாத்திரச் செறிவும் நாடகத்துக்கு ஒரு சிறப்பான சூழலை வழங்குகின்றன. இராமாயண உருவாக்கத்தின்போதும் அரங்கேறறத்தினபோதும நிலவும் சூழல பறறிய சித்தரிப்பு நாடக உணாவுகளைக் குவியச் செய்வதாக உள்ளது காவிய உருவாகக சூழல் குறித்த வாணனை இது'' நானகு கால மண்டபம போன்ற ஒரு கொடி வீடு அதனமீது படாந்துள்ள கொடிகள் பூத்திருக்கினறன சுற்றிலும செடிகள் பினனணியில் ஸ்ரீராமனின் பட்டாபிஷேகச் சிலை அதன முன் குதது விளக்கு மற்றும் பூஜா திரவியங்கள் மண்டபத்தின நடுவே உளள பீடததில் கம்பா அமர்ந்திருக்கிறார் அவருக்கு முன்னால் இரு பக்கமும் ஏடு எழுதும் வாலிபாகள் அப்புறம் சடையபப வள்ளல சேதிபன் எதிர்ப்பக்கம் அமாநதிருக்கிறாள் மகேஸ்வரி இணையாரமாாபன கமபருக்குப பினனால் வலதுகைப்புறத்தில் உட்கார்ந்திருக்கிறான் காட்சி ஆரம்பமாகும்போது கம்பர் கூப்பிய கரங்களுடனும குவிநத கணகளுடனும் வீற்றிருக்கிறார் அனைவரும் ஆவலோடு அவர் முகததைப பார்த்துக கொண்டிருக் கிறாாகள் பின்னணியில நரம்பு வாத்தியததின் சனனமான ஒலியிழை உலாவிக் கொண்டிருககிறது அதைத தொடாநது வேதமந்திரங்களின்

ஒலியை வீணை மிழற்றுகிறது. பின்பு ஜயபேரிகை கொட்டும் முழக்கம். கடைசியில் ஓங்கார நாதம். இத்தனையும் சுமார் இரண்டு நிமிஷங்கள் வரை நிகழ்கின்றன. கம்பர் பாடத் தொடங்கியதும் ஓங்கார நாதம் நிற்கிறது. கம்பர் ஒவ்வொரு சொல்லாக உச்சரித்துப் பாடுகிறார். பாடி முடியும்வரை மூடிய கண்களைத் திறக்கவில்லை, கூப்பிய கரங்களையும் எடுக்கவில்லை.'

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலின் அரங்கேற்ற மண்டபச் சூழல் இவ்வாறு விவரிக்கப்படுகிறது: "கம்பர் மேடையில் அமர்ந்திருக்கிறார். முன்னால் இராமாயணச் சுவடிகள் இருக்கின்றன. அவருக்குப் பின்புறம் வலப்பக்கத்தில் இராமர் பட்டாபிஷேகச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இடது புறத்தில் நரசிம்ம மூர்த்தியின் சிலை. கம்பருக்கு முன்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் ஆசனங்களில் வைணவப் பெரியார்கள் அமர்ந்திருக் கிறார்கள். வலது புறம் ஐந்தாறு ஆசனங்களுக்குப் பிறகு ஒரு தவிசில் சடையப்ப வள்ளலும், அடுத்தபடியாகக் குணவீர பண்டிதரும் இருக்கிறார்கள். மற்றவர்கள் கீழே உட்கார்ந்திருக்கிறார்கள்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா நின்
சேவடி செவ்வி திருக்காப்பு

எனற இறைவணக்கத்துடன் அரங்கேற்றம் துவங்க இருக்கிறது".

இவ்வாறு நாடகம் முழுவதும் சிறப்பான நாடக உணர்வுகளும் நாடகத்துக்கான சூழலும் அமைந்துள்ளன

அழகிரிசாமியின் 'வஞ்சமகள்' நாடகம் ராமாயணம் ஆரண்ய காண்டத்திலுள்ள சூர்ப்பனகைப் படலத்தை கம்பரின் வார்த்தைகளைக் கொண்டே எழுதப்பட்ட ஒரு உபநாடகமாகும் இது 'கவிச்சக்கரவர்த்தி' நாடகத்துக்கு முன்னமேயே எழுதப்பட்டிருந்தாலும் இந்த நாடகம் கவிச்சக்கரவர்த்தி நாடகத்துக்குள் நிகழ்வதாக அதன் சுருக்கிய வடிவம் சேர்க்கப்பட்டுள்ளது வஞ்சமகள் நாடகம் கம்பருடைய வார்த்தைகளைக் கொண்டே அமைக்கப்பட்டிருந்தாலும் சூர்ப்பனகையின் பார்வையி லிருந்து இராமாயண நிகழ்வுகள் பார்க்கப்படுவதுபோல் ஒரு தோற்றத்தை உருவாக்கி சூர்ப்பனகையின் பார்வைக்கு அழகிரிசாமி ஒரு அழுத்தம் தந்துள்ளார் சூர்ப்பனகை ஒரு அரக்கியின் வடிவமாக இல்லாமல் அழகும்

ஆசையும் கொண்ட ஒரு பெண்ணாகச் சித்தரிக்கப்பட்டு அவளுடைய உணர்ச்சிகளை மதிக்காமல் இராமனும் இலக்குவனும் அவமானம் செய்வதைக் கண்டு அவள் வெகுண்டு எழுதவதாக நாடகம் தோற்றம் கொண்டுள்ளது. சூர்ப்பனகைப் பாத்திரத்தின்மீது அழகிரிசாமி கொண்டுள்ள பரிவும் இரக்கமுமே நாடகத்தில் வெளிப்படுகிறது.

சூர்ப்பனகை சொல்லொணாத பேரழகியாக நாட்டிய ஜதியோடு நடந்து வரும் தோற்றம் இவ்வாறு சொல்லப்படுகிறது:

**காஙின் உயர் கற்பகம்**
**உயிர்த்தகதிர் வல்லி**
**மேனிநனி பெற்று வினை**
**காமநெறி வாசத்**
**தேனின் மொழி உற்றினிய**
**செவ்விநனி பெற்றோர்**
**மானின் விழி பெற்றுமயில்**
**வந்ததென வந்தாள்.**

அந்தக் காட்டுக்கு அவள் வந்ததின் காரணத்தை இராமன் கேட்க சூர்ப்பனகை இவ்வாறு கூறுகிறாள் ''அம்மாய வல்லரக்கரோடு வாழ்வினை மதிக்கலாதேன்; அறம் தலை நிற்பதானேன், தீவினை தீய நோற்று, தேவரில் பெற்றது . என்கிறாள் மேலும் உலகம மூன்றும் ஆள்பவன் தங்கையாயின் துணையின்றி இங்கே ஏன வரவேணடும் என்ற இராமனின் கேள்விக்கு 'விமல' யான் அச்சீரியரலலார் மாட்டுச் சேர்கிலேன். தேவர்பாலும் ஆரிய முனிவர் பாலும் அடைந்ததெனன, இறைவ, ஈண்டு ஓர் காரியம் உண்மை, நின்னைக் காணிய வந்தேன'', என்று சூர்ப்பனகை சொல்லும் வரிகளில் அரக்கர் பக்கம் சாராமல் அறம சார்ந்து நிற்கவே நான் தனியளானேன் என்ற அவள நிலைபபாடு உண்மையானதாகவே ஒலிக்கிறது இராவணனைப் பிரிந்து சூர்ப்பனகை துணைதேடித் தனியாகக் காட்டில் அலைந்து திரிந்ததாகவே ஆதாரங்கள் கூறுகின்றன இந்நிலையில் அவள் இராமன்மேல் ஆசை கொண்டு வேறு வாழ்க்கை வாழ உண்மையிலேயே விருப்பம கொண்டிருந்ததாகவே நம்ப இடம் இருக்கிறது ஆனால் சீதையின் பிரசனனமும இலக்குவனின் கோபமும் நிகழ்வுகளைத் திசை திருப்பி விடுகின்றன அவள அங்கஙகள சிதைக்கப்பட்டு அங்கிருந்து விரட்டப்பட நேர்கிறது

''தேவர்ப் பராவி நீங்கினேன், அப்பழி பிறவி, காதலில் கலந்த சிந்தை மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் மறைகளே வகுத்த கூட்டம். இஃது இயைந்தபின் எனக்கு மூத்த வேந்தர்க்கும் விரும்பிற்றாகும்... வேறும் ஓர் உரை உண்டு'' என்ற தன்னுடைய நல்லெண்ண உரைகள் சிதைவுற்றது கண்டு ''உன் திருமேனிக்கு அன்பிழைத்த வன் பிழையால் யான்பட்ட படி இது காண்'' என்று இராமனிடம் முறையிடுகிறாள். ஆனால், 'இவர் எனக்கு இரங்கார். உயிரிழப்பன் நிற்கில்' என்றபடி இறுதியாக ''காற்றினிலும் கனலினும் கடியானைக் கொடியானைக் கரனை, உங்கள் கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்' என்று சூர்ப்பனகை சூலுரைத்துச் செல்கிறாள். இராமஇராவண யுத்தத்துக்கான வித்து அங்கே ஊன்றப்படுகிறது.

அழகிரிசாமி இந்த நாடகத்தில் கம்பரின் வார்த்தைகளையே பயன்படுத்தினாலும் சூர்ப்பனகை பற்றிய ஒரு நுட்பமான பாத்திரச் சித்தரிப்பின் மூலமும் அவளுடைய அந்தரங்க மன உணர்வுகள் குறித்த கவனக் குவிப்பின் மூலமும் அவளுக்கு அநீதி இழைக்கப்பட்டதான தோற்றத்தை உருவாக்குகிறார். புராணப் பாத்திரங்களின்மீது சமகால உணர்வுகளைப் பாய்ச்சி புதிய கவனத்தைக் கோரும் அழகிரிசாமியின் உத்தி இந்த நாடகத்தில் சிறப்பாக வெளிப்படுகிறது

டாக்டர் அனுராதா, தீராத விளையாட்டு, புதுவீடு புது உலகம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த அவருடைய தொடர்கதைகள் நாவல்களாக வெளியிடப்பட்டன வழக்கமான மத்தியதர வாகக் குடும்பப் பிரச்னைகள் மற்றும் காதல் தவிர இவைகளில் குறிப்பிடுமபடியான வேறு விஷயங்கள் இல்லை பத்திரிகைகளின் தேவைகளுக்காக எழுதப்பட்ட இதுபோன்ற தொடர்கதைகளுக்கு அதிக முக்கியத்துவும் கொடுக்க அழகிரிசாமியே விரும்பவில்லை ஒருவேளை அவர் சுதந்திரமான எழுத்தாளராக வாழ்ந்த காலகட்டத்தில் நாவல் வடிவத்தை முயற்சி செய்திருந்தால் அவர் வேறுவிதமான நாவல்கள் எழுதியிருக்க வாயப்புக்கள் உண்டு. மேலும் ஒரு படைப்பாளி தான் முயன்ற எல்லா வடிவங்களிலும வெற்றி பெற வேண்டும் என்பது கட்டாயமில்லை தோல்விகளும் படைப்பு முயற்சிகளின் பிரிக்க முடியாத அம்சங்களே அவைகளால் படிப்பினைப் பெற்று அடுத்த சோதனைகளுக்குத் தயாராக இருபபவனே உண்மையான படைப்பாளி அழகிரிசாமி எந்த மிகையான சுய அபிமானமும் இன்றித் தன்னுடைய படைப்புக்கள் பற்றிச் சரியான மதிப்பீடுகள் கொண்டிருந்தார்

அழகிரிசாமி பத்திரிகைகளில முழுநேர வேலை பார்த்ததால் அரசியல், சமூகம் மற்றுய வரலாறு சம்பந்தப்பட்ட பல ஆங்கில நூலகளைப்

படிக்கவும் அவைகளை மொழிபெயர்ப்புச் செய்யவும் அவருக்கு அவசியம் நேரிட்டது. ஆனால் மொழிபெயர்ப்பை வெறும் நிர்ப்பந்தம் காரணமாக ஏற்காமல் அதை முழு ஈடுபாட்டுடன் செய்திருக்கிறார். அவரே கார்க்கி, செகாவ், டால்ஸ்டாய் போன்ற ரஷிய எழுத்தாளர்களின் மொழிபெயர்ப்பு இலக்கியங்களால் உத்வேகம் பெற்றவர்தானே. மொழிபெயர்ப்பு என்பது ஜீவனற்ற எந்திர ரீதியான மொழிபெயர்ப்பாக இராமல் மூல நூலின் அழகையும், ஆத்மாவையும் உள் வாங்கி மூல நூலுக்கு உண்மையானதாக இருக்க வேண்டும் என்பதிலும் மொழி பெயர்ப்பு என்பதும் ஒரு கலைத்தன்மை வாய்ந்த படைப்பு முயற்சி என்பதிலும் அவர் உறுதியான கருத்து கொண்டிருந்தார். இவ்விதமாக அவர் மொழி பெயர்த்த நூல்கள் கார்க்கியின் 'அமெரிக்காவிலே' 'யுத்தம் வேண்டாம்', 'விரோதி பணியாவிட்டால்' மற்றும் 'லெனினுடன் சில நாட்கள்', லாரன்ஸ் பின்யனின் 'அக்பர்', ராஜேந்திர பிரசாத்தின் 'இந்திய ஒருமைப்பாடு' ஆகியவை. இவைதவிர 'பல நாட்டுச் சிறுகதைகள்' என்ற பல்வேறு சிறுகதைகளின் மொழிபெயர்ப்பையும் அவர் செய்திருக்கிறார். இலக்கியம், அரசியல், வரலாறு ஆகியவை சார்ந்து அழகிரிசாமி தான் கொண்ட ஈடுபாடுகளுக்கேற்பவே மொழிபெயர்ப்புகளுக்கான தேர்வு களையும் மேற்கொண்டார். சில பிறமொழிக் கவிதைகளையும் ஆங்கிலத்தின் வழியாக அவர் மொழிபெயர்த்திருக்கிறார்.

# 7

# கடிதங்கள்

தன்னுடைய நெருக்கமான நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதுவது என்பது அழகிரிசாமியின் வாழ்க்கை நியதிகளில் ஒன்றாக இருந்தது. அவர் 1944லிருந்து 1952வரையிலான எட்டு வருட காலகட்டத்தில் தான் தன்னுடைய நண்பர்களுக்கு நூற்றுக்கணக்கான கடிதங்களை எழுதியிருக்கிறார். கிராம சூழ்நிலையை விட்டு பத்திரிகை வேலை விஷயமாக சென்னைக்கு வந்து அவர் பலவிதமான மனப்போராட்டங் களுக்கு உள்ளானது இந்தக் காலகட்டத்தில் தான். வாழ்க்கையில் தாம் கற்ற விஷயங்களால் உரம் பெற்று அவர் மெல்ல மெல்ல ஒரு சிறப்பான படைப்பிலக்கியவாதியாக உருமாற்றம் பெற்றதும் இந்த காலகட்டத்தில் தான். அதனால் இந்த காலகட்டத்தில் அவர் தன்னுடைய நெருங்கிய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் அவருடைய வலிகள், வேதனைகள், சந்தோஷங்கள் பரவசங்கள் அனைத்தையும் தாங்கி அவருடைய வாழ்க்கையின் ஒரு மிக முக்கியமான மன நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்தன மேலும் கிராமச்சூழ்நிலையில் அவருடன் பழகியிருந்த கி. ராஜநாராயணன், அண்ணாச்சி கந்தசாமிச் செட்டியார், லாயல்மில் நடராஜன் ஆகியோரிடையே அவருக்கு ஆழ்ந்த நட்பு உருவாகியிருந்தது. முக்கியமாக இசை, ஓவியம், விளையாட்டு, இலக்கியம் என ஒன்றாகப் படித்து ஒன்றாக வளர்ந்த அவருக்கும், ராஜநாராயணனுக்கும் இடையே ஏற்பட்ட ஒத்த சுவையுணர்வால் தங்களுடைய எல்லா சுகதுக்கங்களையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு அந்நியோன்யமான உறவு இருந்தது. அவர்கள் வாழ்ந்து அனுபவித்த கிராமிய வாழ்க்கை மதிப்பீடுகள் ஆழ்ந்த நேசமும் நெகிழ்வும் மிக்கவையாக இருந்தன. அழகிரிசாமி கிராமத்தை விட்டுத் திடீரென சென்னை வர நேர்ந்ததும் அந்தப் பிரிவு அவர்களுடைய எதிர்காலக் கனவுகளையும் நேசங்களையும் மேலும் உரமிட்டு வளர்க்கக் காரணமாக அமைந்தது மேலும் அழகிரிசாமியின் சென்னை வாழ்க்கை சந்தோஷ மானதாக இல்லை. பொருளாதார நெருக்கடியாலும் உடல் நலக்குறை வாலும் அவர் பெரிதும் அவதிப்பட்டார். அவருடைய நெருங்கிய நண்பரான ராஜநாராயணனும் கடுமையான க்ஷயரோகத்தால்

பாதிக்கப்பட்டு மரணத்திலிருந்து மீளப் பெரும் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார். இந்நிலையில் அவர்கள் எழுதிக் கொண்ட கடிதங்களே அவர்களுக்கு ஆறுதலாகவும் உத்வேகமாகவும் அமைந்தன. அழகிரிசாமி தனக்கு எழுதிய கடிதங்களில் கிடைத்தவை என 27 கடிதங்களைத் தொகுத்து 'அழகிரிசாமியின் கடிதங்கள்' என்ற புத்தகமாக வெளியிட்டார் ராஜநாராயணன்.

அந்தக் கடிதங்கள் இருவருக்கும் மட்டுமே சொந்தமான ஒருவித அந்தரங்கத்தன்மை கொண்டிருந்ததால் அவைகளை வெளியிட ராஜநாராயணன் தயங்கியிருக்கிறார். ஆனால் அந்தக் கடிதங்களின் இலக்கியத் தன்மை கருதியும் நண்பர்களின் வற்புறுத்தலின் பேரிலும் கடைசியில் அவை புத்தகமாக வெளிவந்தன. உண்மையில் அவை வெளியிடப்படாமல் போயிருந்தால் அழகிரிசாமியின் ஒரு பக்கம் வெளியே தெரியாமலேயே போயிருக்கும். ஏனென்றால் ஒரு கால இடைவெளியில் அக்கடிதங்களைப் படிக்கும்போது அக்காலத்திய இலக்கியச்சூழல் குறித்தும் எழுத்தாளனின் வாழ்நிலை குறித்தும், அக்கடிதங்கள் ஒரு சிறப்பான ஆவணமாக விளங்குவதை அறிய முடிகிறது. மேலும் ஒரு எழுத்தாளனின் இலக்கியப் படைப்புகளை மட்டும் வைத்து அவனுடைய முழு ஆளுமையையும் அளவிட முடியாது. சொந்த வாழ்க்கையிலும் வேறுபட்ட மனித உறவுகள் குறித்தும் எழுத்தாளன் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் நிலைப்பாடுகளும், நெருக்கமானவர் களுடன் அவர்கள் பகிர்ந்து கொண்ட உரையாடல்களும், கடிதங்களும் அக்கலைஞனின் அதிகம் வெளியே தெரியாத ஒரு முகத்தின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி அவனுடைய மொத்த ஆளுமையையும் ஒரு முழுமையான கோணத்தில் பார்க்க உதவுகின்றன அவ்வகையில் அழகிரிசாமியின் இக்கடிதங்கள் அவருடைய படைப்புகளில் தென்படும் ஒரு ஆழ்ந்த பரிவுணர்ச்சியை மேலும் வலியுறுத்திக் காட்டுவதாகவே அமைகின்றன

இக்கடிதங்கள் இருவருக்கிடையே உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நிகழ்ந்த உரையாடல்கள் போல் தோற்றமளித்தாலும் அந்த உணர்ச்சிகளின் பின்புலத்தில் தென்படும் வாழ்க்கை மதிப்பீடுகள் மதிப்பு வாய்ந்தவையாக இருக்கின்றன. பீறிட்டெழும் இலக்கிய அபிலாஷைகளுடன் வளர்ந்து கொண்டிருக்கும் இரு படைப்பிலக்கியவாதிகளின் கனவுப் பகிர்தலாகவே ஒரு கால இடைவெளியில் இன்று இவை தோற்றம் கொள்கின்றன. மேலும் இவைவெறும் கடிதங்களாகத் தங்கிவிடாமல் இலக்கிய நிலைமைகள் குறித்த சிறப்பான ஆவணங்களாக நிலைத்து நிற்கக் கூடிய தன்மை கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் கடந்து ஒரு

பரந்த உலகியல் அளவில் இருப்பின் பிரச்னைகள் குறித்தும், அழகியல் நிலைப்பாடுகள் குறித்தும் இக்கடிதங்கள் கோரும் அக்கறையும் கவனமும் இக்கடிதங்களை மேலும் மதிப்புள்ளவைகளாக்குகின்றன.

ஒரு ஐம்பது ஆண்டுகால கலை இலக்கிய வரலாற்றின் ஒரு சிறிய குறுக்கு வெட்டுத் தோற்றம் இக்கடிதங்களில் புலப்படுகிறது. பொதுவாக நாம் ஈடுபாடு கொண்டுள்ள விஷயங்களின் கடந்த காலச் சித்திரங்களும், அவைகுறித்த நினைவுகளும் எப்போதும் மனதில் கிளர்ச்சியூட்டக் கூடியவை. நாம் உத்வேகம் கொள்வதற்கென மீண்டும் மீண்டும் பழைய வாழ்க்கை வரலாறுகளையே புரட்டிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கிராமத்திலிருந்து பிழைப்புக்காக நகரத்துக்கு வந்து அல்லல்பட்ட தமிழ் எழுத்தாளர்களின் தொகை புதுமைப்பித்தன் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அழகிரிசாமியின் நிலையும் வேறுபட்டதல்ல. ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்: "இன்றுவரையும் ஒரு பக்கத்தைக் கூட மன உற்சாகத்தோடு வாசிக்கவில்லை. வாசிப்பதில் எனக்கு இவ்வளவு வெறுப்புத் தட்டியது. இலக்கியத்துக்கு மனஉற்சாகமும் தூண்டுதலும் தான் மருந்துபோல் என்பது உனக்குத் தெரிந்ததே. அந்த மருந்துக்கு உபயோகமாகும் பூண்டுக்கே வியாதி வந்து அதற்கும் மருந்து கொடுக்க எங்கோ கொண்டு போய் விட்டார்கள். எவ்வளவு விபரீதம். வேறு எவ்விதமான கஷ்டமும் இல்லை இங்கே. பொருளாதாரம், உணவு, உடை முதலிய சௌகரியங்களில் எப்போதையும்விட இப்போதுதான் குறைவற்று நிரம்ப இருக்கிறது. ஆனால் ஒன்றைக் காணோம்?... பேசாமலிருந்து பார்த்தேன். நடக்கிறது நடக்கட்டும் என்று. ஆனால் தோல்வி எனக்குத்தான். இப்படி எத்தனையோ தோல்விகள் எனக்கு. இவற்றை நான் லட்சியம் பண்ணுவதில்லை.

இந்தத் தோல்வியிலும் நான் சற்று உயர்ந்த நிலைக்குப் போகத்தான் செய்கிறேன். என்னிடத்தில் பொங்கி வரும் அன்பை என்னால் தடுக்க முடியாது என்று நான் பெருமைப்படுவதில் குற்றம் ஒன்றுமில்லை."

வாழ்க்கை எவ்வளவு நம்பிக்கையற்றதாக இருந்தாலும் எதிர்காலம் குறித்த திட்டங்கள் தீட்டுவதில் நாம் என்றும் சலிப்பதில்லை. ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்: "இனி நம் வாழ்க்கையில் பெரிய மாறுதல்களோடுதான் வாழ வேண்டிவரும் போலிருக்கிறது. நான் அதிகமாய்ப்போனால் வருஷத்துக்கு இருமுறை ஊருக்கு வருவேன். நீயும் சென்னைக்கு அப்படித்தான் வரமுடியும். ஆகவே பூவும் மணமும் போல் பிரியாமல் இருந்த வாழ்க்கை என்ன ஆவது? இதை நினைக்கவே முடியவில்லை. என் உள்ளத்தில் ஒரு திட்டம் செய்துள்ளேன். அதன்படி

சுமார் நாலைந்து வருஷகாலம் சென்னையில் இருந்துவிட்டுப் பழைய படியும் நம் ஊருக்கு வந்து இலக்கியச் சேவை செய்யலாம் என்று நினைக்கிறேன். ஆனால் அதற்கு நடுவில் எத்தனை மாறுதல்களோ? என்னைப் பொறுத்தவரையிலும் எவ்விதமான மாறுதலும் ஏற்படாது என்ற உறுதிதான். நம் பழைய அன்பு வாழ்க்கையின் ஒளி அஸ்தமிக்கப் போவதே இல்லை''.

''காரணமே புரிவதில்லை. சென்னையில் பல உயிர்த்தோழர்கள் கிடைத்தார்கள். என்னைவிட பிராயத்திலும் அறிவிலும் உயர்ந்தவர்கள். பலநாட்டு இலக்கியங்களையும் ஆராய்ச்சி செய்த நிபுணர்கள். உயிருக்குயிராகப் பழகுகிறோம். புத்தகங்களோ இப்போதைக்கு இன்பம் ஊட்ட இருக்கின்றன. ஆனாலும் இதையெல்லாம் கடந்து - உன் இதயத்தைத் தாவிப் பிடிக்க என் அன்பின் மானசீகக்கரங்கள் 400 மைல் நீளம் நீளுகின்றன'' என்று இன்னொரு கடிதத்தில் எழுதுகிறார்.

இசைமீது இருவருக்கும் அளவு கடந்த ஈடுபாடு உண்டு. இசை பற்றியத் தகவல்களும் குறிப்புகளும் அவர் கடிதங்களில் இடம்பெறாமல் போகாது. கர்நாடக இசையின் மேன்மை பற்றியும் அதை முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் அவருடைய கடிதங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. எந்திர ரீதியாகக் கடிதங்கள் எழுவது குறித்து கோபித்து அவர் ராஜநாராயணுக்கு இவ்வாறு எழுதுகிறார்: ''நண்பன் என்பவன் ஒரு விலை மதிப்பற்ற கலாரசிகனைப் போன்றவன். அவன் காதுகளில் இன்னிசை வீணையின் தெய்வ நாதத்தை இசைக்காமல் கணித சாஸ்திரத்தையும் வியாபாரமுறைகளையும் கணக்கெடுத்து ஒப்பிப்பதா? உள்ளத்திற்குப் பூட்டுப்போட்டு சீல் வைக்காதே. அங்கே மெல்லிய தென்றல் புக வேண்டும் அந்த வைரமாளிகையில் மணம் கக்கும் தூப தீபங்களின் பரிமள கந்தம் நேச உள்ளங்களின் சாளரங்களில் புகுந்து வாசம் கொழிக்க வேண்டும்''

இருவரிடமும் பரஸ்பர நட்பு குறித்த ஒரு ஆழ்ந்த உணர்வு இருக்கிறது.'' நண்பர்களுடைய இதயங்கள் உயர்ந்த புஸ்தகங்கள் அவற்றைப் பக்கத்திலிருந்து கொஞ்ச நாள் வாசிக்க வேண்டும். தூரத்திலிருந்து கொஞ்சநாள் வாசிக்க வேண்டும் அவற்றில் 'இலைமறை காய்மறை' யாகக் கிடக்கும் உண்மைகளை ஓரளவாவது படித்துப் புரிந்து கொண்டால் அவன் கவிஞன்தானே'' என்கிறார் ஒரு கடிதத்தில்.'' இன்னும் 50 வருஷம் கழித்து உன் கதை மிகுந்த சிறப்பைப் பெறும்' என்று அவர் கணித்த கணிப்பு அதற்குப் பல வருடங்கள் முன்பே மெய்யாகிவிட்டது. ''ஒரு காலத்தில் இன்ப நாடகத்தைக் கொட்டகைக்குள் முன் வரிசையில

உட்கார்ந்து அனுபவித்தோம். இப்போது காலவசத்தால் கொட்டகைக்கு வெளியே நின்று கொண்டு தட்டியின் இடுக்கு வழியாகப் பார்த்துத் திருப்தி அடையும்படியாக ஏற்பட்டிருக்கிறது'' என்று இழந்துபோன நட்பு வாழ்க்கையை நினைவுகூர்கிறார்.

சென்னைக்கு வந்து புதுமைப்பித்தன், பி.ஸ்ரீ ஆகியோரை ராஜநாராயணன் சந்திக்காமல் திரும்பியது பற்றி வருந்துகிறார். தான் சென்னையில் பார்த்த வாழ்க்கையை நண்பர்களும் வந்து பார்க்க வேண்டும் என்று நண்பர்களையெல்லாம் அழைக்கிறார். சுமார் இருபது சங்கீத சாகித்தியங்களை ஸ்வரப்படுத்தி அவைகளைப் புத்தகமாக வெளியிட விரும்புவதாக ஒரு கடிதத்தில் எழுதிவிட்டு'' உன் கல்யாணத்துக்கு அந்தப் புத்தகத்தைத் தான் பரிசளிப்பதாக இருக்கிறேன். ஆகையால் அதற்குள் கல்யாணத்தை வைத்துக் கொண்டு விடாதே'' என்று ஒரு கடிதத்தில் ராஜநாராயணனுக்கு அன்புக் கட்டளையிடுகிறார்.

தன்னுடைய இசைஉணர்வையும் இடைசெவல் வாழ்க்கையையும் நினைவு கூர்வதற்கு அவர் ராஜநாராயணனுக்கு எழுதும் கடிதங்கள் துணையாக இருக்கின்றன. ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்: ''தேனூறச் சொல்லுதற்கு என்ற பாட்டை இப்போது பாடினாலும் இடைசெவல் பாலத்தில் உப்போடை ஓரத்தில் உட்கார்ந்து பிறைச் சந்திரனைப் பார்ப்பது போன்ற அமைதியும் விச்ராந்தியும் ஏற்படுகிறது.'' மேலும் தன்னுடைய லௌகீகமான கஷ்டங்களிலிருந்தும் மனச்சிக்கல் களிலுருந்தும் விடுபடுவதற்கான ஒரு புகலிடமாக அவருக்கு இக்கடிதங்கள் இருக்கின்றன.' நான் எனக்கோ மற்ற நம் நண்பர்களுக்கோ கடிதங்கள் எழுதுவது உண்மையாக என் துயரத்தின் அளவை சுருக்கிக் காட்டுவதாகவே படுகிறது. கடிதங்களில் அடங்கக் கூடியவனவாகவா நம் கஷ்டங்கள் இருக்கின்றன? சகல விதங்களிலும் கேவலமாக வந்து சென்னையில் நிற்கிறேன். இன்று குறைப்பொழுதில் என்னென்ன நாடகங்களோ?'' என்று சொல்லிவிட்டு 'நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு, காசு பெரிதில்லை...' என்று எழுதுகிறார்.

தன்னுடைய மனக்கஷ்டங்களுடன் இலக்கியத்தாகங்களையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வடிகாலாகவும் அழகிரிசாமிக்கு இக்கடிதங்கள் உள்ளன. ''ஒரு சமயம் வெளிச்சமாகவும் மறுசமயம் இருட்டாகவும் இருப்பதைப் போலத்தான் என் வாழ்க்கையிலும் இன்ப துன்பங்கள் விரவிக்கிடக்கின்றன. என் வாழ்க்கையின் தினசரி நியதி உனக்கே தெரிந்த கதைதான். இந்த லட்சணத்தில் அவரசப் படபடப்பில் ஆழ்ந்த சிந்தனையோடு தத்துவஞானம் நிறைந்த இலக்கியச் சிருஷ்டிகளை

அப்போதைக்கப்போது 'சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்ற கதையாக உண்டாக்க முயற்சிப்பது எப்படி இருக்கிறது?' என்று கூறிவிட்டு எதற்கு என்று எனக்கே புரியவில்லை. ஒரு வேளை ஊரில் அதிகமாக இருந்துவிட்டு வந்ததினாலோ? அல்லது சென்னை நகரம் இடைசெவலுக்கு மந்தை புஞ்சையைப் போலாகி நான் அடிக்கடி வந்து போவதால் தூரத்தின் கொடுமை குறைந்து போய்விட்டதா? எதற்கு என்று தெரியவில்லை. மனம் சற்றுச் சங்கடமில்லாமல் இருக்கிறது. அதைப்பற்றிக் கவலைப்படவா வேண்டும்? வேண்டிய சங்கடங்கள் தாராளமாக வருவதற்கு எத்தனை நாழிகைகளாகும்? என்று மாறிவரும் தன்னுடைய மனநிலைகளைக் கடிதங்களில் உடனுக்குடன் பதிவு செய்கிறார்

கடிதங்களில் அழகிரிசாமி தன்னுடைய துயரங்களைப் பகிர்ந்து கொள்ளுவது மட்டுமல்லாமல் நண்பர்களை எந்த அளவுக்கு உற்சாகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு உற்சாகப்படுத்தத் தயங்குவதில்லை. ஒரு கடிதத்தில் ராஜநாராயணனுக்கு இவ்வாறு எழுதுகிறார் 'நீ ஏன் பாட்டுகளும் கட்டுரைகளும் எழுதக் கூடாது? உன்னுடைய குழந்தைப்பாட்டாகிய பாட்டி சொன்ன பாட்டைப் பின்பற்றி அதே மெட்டில் இரண்டுபேர் வெவ்வேறு ஜில்லாக்களிலிருந்து பாட்டெழுதி அனுப்பியிருக்கிறார்கள் ஆகவே நீ சும்மா இருக்கலாமா? குழந்தைப் பாட்டுகளும், முத்தொள்ளாயிரப் பாட்டுகளை வைத்து கட்டுரைகளும் எழுதி எனக்கு அனுப்பு நான் பல பத்திரிகைகளுக்கும் அனுப்புகிறேன் இதை நீ அவசியம் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தன்னாலான சேவையைத் தமிழுக்குச் செய்ய வேண்டியதுதானே! நீ அடிக்கடி நீண்ட கடுதாசுகள் எழுதிக் கொண்டிருக்க வேண்டும். அவற்றைப் போதைப் பொருள்களாக வைத்துக் கொண்டுதான் நான் நாவல் எழுத வேண்டும். பாலைவனத்திலும் ஈச்சம்பழம் பழுப்பதைப்போல் இந்தத் துயர வாழ்க்கையிலும் என் மனம் கனிந்த அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''

பொதுவாக அழகிரிசாமி எவ்வளவு இடர்ப்பாடுகள் வந்தாலும் வாழ்க்கையை வருத்தங்கள் இன்றி நேசிக்கத் தெரிந்த ஒரு மனிதர் எந்தச் சந்தர்ப்பத்திலும் வேடிக்கைக்குப் பஞ்சமில்லாமல் இருப்பதை அவருடைய கடிதங்கள் புலப்படுத்துகின்றன 22 8 1946ல் எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார் ''என் முந்தைய கடிதத்தைப் போலவே இந்தக் கடிதத்தையும் எழுதத்தூண்டியது ரயில்வே ஸ்ட்ரைக்தான் 24ந் தேதியிலிருந்து தொடங்குவதாகச் செய்தி. இந்தியாவிலேயே மூன்று விஷயங்கள் தற்போது ஒத்திப் போடப் படுகின்றன முதலாவது என் சென்னைப் பிரயாணம். அடுத்தபடி

இந்தியாவின் சுதந்திரம். அப்புறம் ரயில்வே ஸ்ட்ரைக். யானை வருது, யானை வருது என்ற கதைதான் என்றாலும் கடிதம் எழுதத் தூண்டிவிடக்கூடிய முறையில் ரயில்வே ஸ்ட்ரைக் உதவுவதால் அதை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன்."

நெருங்கிய நட்பென்றால் கூட அவர் தவறென்று நினைக்கும் இலக்கிய விஷயங்களை அவர் கண்டிக்கத் தயங்குவதில்லை. ராஜநாராயணன் ஒரு கடிதத்தில் எதுகை மோனைகளை அள்ளித் தெளித்ததற்குப் பதிலாக அழகிரிசாமி இவ்வாறு எழுதுகிறார்: "விஷயத்தின் உண்மைத் தன்மையை மோனை நாசக்காட்டாக்குகிறது. இந்தப் பித்தம் தெளிய வேண்டும். எதிர்காலத்தில் நாம் ஆற்ற வேண்டிய அரசியல், இலக்கியப் பணிகளின் வெற்றிக்கு இந்த 'அக்காத்திக்கும்பல்' வழிமறிச்சான்களாக இருந்து தொலைக்கக் கூடாது. இந்த உபதேசம் உனக்கு மட்டுமல்ல. எனக்கும் சேர்த்துத்தான். சாராயக்கடை சண்டியருக்கும் வீமனுக்கும் வித்தியாசம் என்ன என்று நமக்குத் தெரிய வேண்டும். அதேபோல பொட்டைக் கிறுக்கனுக்கும் ரோமியோவுக்கும் வித்தியாசம் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து அதன்படி நடக்க வேண்டும். இல்லை செத்தோம். மேற்கண்ட விஷயத்தை ஒழுங்குப்படி நான் பிரஸ்தாபித்திருக்கக் கூடாதுதான். ஆனால் இலக்கண ஒழுங்கைப் புறக்கணித்துவிட்டு மனித ஒழுங்கையே தேவையை முன்னிட்டுக் கைக்கொண்டேன்."

அவரிடம் வேடிக்கை தலைதூக்குவதற்கு நேரம் காலமென்று கிடையாது. கொஞ்சம் கடுமையான தொனியில் மேற்கண்டவைகளைக் கூறிவிட்டு உடனே எழுதுகிறார்: "போனவாரம் நம்மூருக்கே நடராஜன் வருவதாகக் கடிதம் எழுதியும் வரவில்லை. அவனுக்குக் காரணங்களா கிடைக்காது? 1. மில் வேலை, 2. வீட்டு ஜோலி, 3. பணக்கஷ்டம். இந்தக் காரணங்களைக்கேட்டால் 'சாக்ரடீஸ்' கூட மேற்கொண்டு கேள்வி கேட்கத் துணிவானா?"

உணர்ச்சிகளின் ஆனந்தமயமான ஆரோஹனத்திலும் துன்பமயமான ஆரோஹனத்திலும் தனக்குப் பல விஷயங்கள் புலப்படுவதாக அழகிரிசாமி தன்னுடைய பல கடிதங்களில் குறிப்பிடுகிறார். லௌகீக இயலாமைகளின் கடுமையிலும் தன்னுடைய தத்துவ விசாரங்களை அவர் கடிதங்களில் பகிர்ந்து கொள்ளத் தயங்கவில்லை, ஒரு கடிதத்தில் சீனக்கதை ஒன்றைக் குறிப்பிட்டு இவ்வாறு எழுதுகிறார்: "சீனாவிலே மூன்று தத்துவ ஞானிகள் ஓரிடத்திலே கூடினார்களாம். ஒரு கம்பத்தில் ஒரு கொடி ஆடிக் கொண்டிருந்ததாம். ஒரு தத்துஞானி கொடியாகிய துணி அசையவில்லை. அசைவது போலத்தான் தோன்றுகிறதே ஒழிய உண்மையில் அசைவது

காற்றுத்தான் என்றாராம் அடுத்தவர் காற்றும் அசையவில்லை. மனம்தான் அசைகிறது என்றாராம். மூன்றாமவர் துணியும் அசையவில்லை. காற்றும் அசையவில்லை. மனமும் அசையவில்லை. எதுவுமே அசையவில்லை என்றாராம். அதைப்போல் இங்கே நிலவிருக்கிறது. தென்றலும் மற்றும் போதுமான உத்வேகமூட்டும் சாதனைப் பொருள்களும் இருக்கின்றன. ஆனால் மனம் செத்துப்போய்விட்டது என்று எழுத நினைத்தேன் ஆனால் தென்றலும் இல்லை நிலவும் இல்லை மனமும் இல்லை என்பதுதான் உண்மையாக இருக்கிறது இதை மனவிசாரத்தினால் ஏற்பட்ட கசப்பான நோக்கு என்று ஒதுக்க முடியாது'' யதார்த்த வாழ்வின் பல்வேறு பிரச்னைகள் கடுமையாக அவரை அலைக்கழித்து அவரது அதிகமான கவனத்தைக் கோரினாலும் அவைகளைக் கொஞ்சம் எட்ட நின்று பார்க்கக்கூடிய மனப்பக்குவமும் அவர் பெற்றிருந்தார் என்பதை அவரது பல கடிதங்கள் புலப்படுத்துகின்றன இந்தப் பக்குவம் அவர் தன்னுடைய இலக்கியக் கல்வியின் மூலம பெற்றது அதனால்தான் கும்மட்டிக்காயை ஒரு ஓரத்தில் கடிக்கச் சொல்லி கசபபைத் தெரிவித்துவிட்டால் போதாதா, டஜன் கணக்கில் கும்மடிககாயைத் தின்றுதான் கசப்பைத் தெரிந்து கொள்ள வேண்டுமா என்று கேட்கிறாா

ஆனால் எந்தச் சந்தாப்பததிலும் அவர் நம்பிக்கையைக் கைவிடுவதே இல்லை. எப்போதும் ராஜநாராயணனைப் பார்த்து 'சுதந்திரப் புருஷனாய்த் தைரியமாய் நிமிர்ந்து நின்று சிரி, பாடு, கூத்தாடு நானும் அதைத்தான செய்கிறேன் உலகமும் அதைத்தான் செய்ய முடியும் நம்மை யார் எது அசைக்க முடியும்' என்று தைரியம சொல்லிக் கொணடே இருக்கிறார் ராஜநாராயணன் கடித்துக்குப் பதில் எழுதத் தாமதம் செய்தால் 'இனி நீ டி பி க்காரன், சிரங்குக்காரன என்பதை மறநது கண் வார்டுக்காரன் என்று பாவித்துப் பிறரைக் கொண்டாவது எழுது' என்கிறார்

தன்னுடைய நண்பன் ராஜநாராயனுக்கு உடல் நலம் தேறிவிட்டது என்ற செய்தியால் சிறகடித்துப் பறக்கும் அழகிரிசாமியின் கவிமனத்திலிருந்து பிறக்கும் கடிதம் ''பாரசீகக் கவிஞன் உமர்கய்யாமின் சீடர்களாக உலகெங்கும் பரந்து வியாபித்துள்ள ஒரு மலர்வனத்தில் நாம் வாழ்வு நடத்துகிறோம் இந்த மலர்வனத்தில் பரவிய நோயின் சின்னம் உன்னுடம்பின் மூலம் வெளிப்பட்டு இப்போது மாய்கிறது. புத்தனும் சகுந்தலையும் பிறந்த இந்தப் பூந்தோட்டம் அழிந்தால் உலகத்தில் தர்மம் ஏது? இதிகாசப் பெருமைபெற்ற இத்தோட்டம் தன் பரம்பரையைக் காப்பாற்றும், இனியும் ஆயிரம் புத்தர்களையும், சகுந்தலைகளையும் பெற்றெடுக்கப் போகிறது இது அன்றெழுதப்பட்ட அத்தனை புராணங்களும், சரித்திரங்களும் உனனுடையதும் என்னுடையதும் ஆன

வாழ்வின் முதற் பகுதியின் நினைவுக்குறிப்புகள். புராண நாயகர்களும், சரித்திர வீரர்களும் வேறு யாரோ அந்நியர் அல்ல. நம்மில் தொடங்கி நம்மில் முடியும் செய்திகள் இவை'' எனத் தங்கள் வாழ்வும் ஒரு அழகிய சரித்திரத்தின் பகுதிதான் என்பதை நினைவுபடுத்துகிறார்.

சென்னையில் கவிஞர்களின் தட்டுப்பாடு பற்றி அழகிரிசாமி வேடிக்கையாக இவ்வாறு எழுதுகிறார்: ''சென்னையில் வேறு யாராவது தமிழ்க்கவி இருந்தால் சொல்லும்படி ரேடியோ நிர்வாகி கேட்டார். ஏற்கனவே உள்ள கவிஞர்கள் முந்தையக் கவியரங்குகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் கவிஞர் அகப்படுவது ஏழை பிராமணனுக்கு பணக்கார மாப்பிள்ளை அகப்படு வதைப்போல, தப்பு தப்பு. அகப்படாததைப் போல் என்று சொல்ல வேண்டும். அகப்படுவது சாத்தியமா, அப்படி ஆகிவிட்டது. ல ச. முத்துசாமி, க.வ.க., கடைசியில் நீ - எல்லோரையும் யோசித்தேன். அந்தோ! கவி ஓர் சென்னை வாசியாக இருக்க வேண்டுமாம்.''

இவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் தங்களுடைய எண்ணற்ற அபிலாஷைகளைப் பகிர்ந்து கொள்ளப் பயன்பட்டவை இக்கடிதங்கள். என் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்கள் என்று இக்கடிதங்களைக் குறிப்பிட வேண்டும்போல் தோன்றுகிறது. அந்த நாட்களை நினைக்கும்போது, உணர்ச்சி வசப் படுகிறேன். அந்த நாட்களுக்குத் திரும்ப முடியாது இனி என்று தன்னுடைய முன்னுரையில் குறிப்பிடுகிறார் ராஜநாராயணன். ராஜநாராயணனும் இன்று சாகித்ய அகாடமி விருது பெற்ற ஒரு சிறப்பான தமிழ் எழுத்தாளராக அறியப்படுபவர். நாட்டுப்புறவியல் சார்ந்த கதைகளாலும், சொல்லாடல்களாலும் தமிழ் இலக்கியத்தை மேம்படுத்தி வருபவர். இக்கடிதங்கள் எழுதப்படும்போது தாங்கள் இந்த நிலையை அடைவோம் என்பதை இருவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

இவ்வாறே அழகிரிசாமிக்கும் எழுத்தாளர் சுந்தரராமசாமிக்கும் இடையே 1958-67 காலகட்டத்தில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்கள் 'இதம் தந்த வரிகள்' என்ற பெயரில் காலச்சுவடு பதிப்பகத்தால் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் இருவரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக அறியப்பட்டவர்கள். தங்கள் ரசனை உணர்வுகளையும், மற்றவர் எழுத்துகளைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களையும் அதனால் உருவான அன்பையும் அபிமானத்தையும் பகிர்ந்து கொள்ளும் விதமாகவே இக்கடிதங்கள் அமைந்துள்ளன

சுந்தரராமசாமி அழகிரிசாமியின் மனதுக்குப் பிடித்த ஒரு எழுத்தாளராக இருக்கிறார். புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் என்று அவர் கருதுவது சுந்தரராமசாமி, ஜானகிராமன், ஜெயகாந்தன் ஆகியோரைத்தான். அதனால் சுந்தரராமசாமிக்கு அவர் எழுதியுள்ள இக்கடிதங்களில் தன்னுடைய அபிமானத்தையே அவர் பெரிதும் வெளிப்படுத்துகிறார். ஒரு கடிதத்தில் இவ்வாறு அவர் எழுதுகிறார்: ''தங்களிடமிருந்து எத்தனையோப் புதுமைகளை, சிறுகதைப் புதுமைகளை நான் எதிர் பார்க்கிறேன். தொடர்ந்து எழுதுங்கள் உங்கள் சீமையின் தனி விஷேசங்களை எல்லாம் அறிமுகப்படுத்துங்கள். அங்கு வாழ்கின்றவர்களின் வாழ்க்கை, வாழ்க்கையின் தனித்தன்மைகள், நடைமுறைகள், அவற்றில் பிரதிபலிக்கும மன உணர்ச்சிகள் முதலிய வற்றை அந்தப் பிராந்தியத்தின் மண் வாசனையோடு எங்களுக்கு எழுதிக் காட்டுங்கள். தங்களுக்கு அது சுலப சாத்தியம் என்பதை நான் அடித்துச் சொல்லுவேன்.''

சுந்தராமசாமிக்கு அழகிரிசாமி எழுதிய கடிதங்கள் எல்லாம் ஒரு இயல்பான உரையாடல் தொனியில் இருக்கின்றன சுந்தரராமசாமியின் கதைகளைப் பாராட்டும்போதும் சில குறைகளைச் சுட்டிக்காட்டுமபோதும் மிகவும் சகஜமாக வெளிப்படையாகப் பேசுகிறார் புளிய மரத்தின் கதை நாவலைப்பற்றியுப் பேசும்போது அதன் வரிகள் சிறப்பானவையாக இருந்தாலும் அதை ஒரு சிறந்த நாவலாகத் தன்னால் கருத முடியவில்லை என்று கூறுகிறார். அகம் சிறுகதை தன்னைக் கவர்ந்த விதத்தை மிகவும் சிறப்பாக குறிப்பிடுகிறார் 'அக்கறைச் சீமையிலே' தொகுபபில் உள்ள கதைகளைப் படித்துவிட்டு, க நா சு ஜானகிராமன், தி.ஜ ர ஆகியோரிட மெல்லாம் அவைகளைச் சொல்லி மகிழ்ந்ததைக் குறிப்பிடுகிறா ஹெப்சிபா ஜேசுதாசனின் 'புத்தம் வீடு' நாவலைச் சிபாரிசு செய்ததற்காக மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிக்கிறார்

அதேபோல் தன்னுடைய கதைகள் குறித்த சுந்தரராமசாமியின பாராட்டு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது கொஞசம் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இவுவாறு எழுதுகிறார் ''என்னுடைய தொடர்கதையைப் பாராட்டித் தாங்கள் எழுதியிருப்பது எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளித்தது இந்த உலகத்தில் இனி யார் பாராட்டாவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. நான் படைத்த கதாபாத்திரங்களைக் கலயாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்படுகிற அளவுக்குப் பாராட்டியிருக்கிறீர்கள் இப்படிப்பட்ட ஒரு பாராட்டு வேறு எந்த இலக்கிய கர்த்தாவுக்கும் கிடைத்திருக்குமா என்பது சந்சதேகமே ஒர வரி இப்படி எழுதி என்னை மகிழ்ச்சிக் கடலிலேயே மூழ்கடித்துவிட்டீர்கள் இந்த மகிழ்ச்சி

யினிடையிலும் உள்ளூர ஒரு பயமும் இருக்கிறது. இவ்வளவு அக்கறையாக நீங்கள் ஏன்தான் படிக்கிறீர்களோ தெரியவில்லை. எனக்குத் தர்ம சங்கடமாக இருக்கிறது. நாவலில் இனி வரக்கூடிய பகுதிகள் நன்றாக இல்லை என்றால் உங்கள் பாடும் கஷ்டம். அதன் காரணமாக என்பாடும் கஷ்டம். முகமறியாத வாசகர்களுக்கு எழுதுவதில் உள்ள துணிச்சலும் சுதந்திரமும் வேறு. தங்களைப் போன்றவர்கள் படிக்கிறார்கள் என்று தெரியும்போது பயமாகவே இருக்கிறது. என்னவோ அகப்பட்டுக் கொண்டுவிட்டேன் நின்று சாதிக்க வேண்டியதுதான்.'' நிர்ப்பந்தங் களின்பேரில் வெகுஜன இதழ்களில் தொடர்களை எழுதும் எழுத்தாளர்கள் சந்திக்க நேரும் சங்கடங்கள் இவை. இந்த வடிவத்தில் தன்னுடைய எல்லைகளை உணர்ந்த அழகிரிசாமி இவை குறித்து எந்த மிகையான எதிர்பார்ப்புகளையும் உருவாக்க விரும்பவில்லை.

கடிதங்களில் அழகிரிசாமி ஆங்காங்கே இயல்பான சொல்வழக்கு களைப் பயன்படுத்துவது ஒருவிதமான நெருக்கத்தை உண்டு பண்ணுகிறது. சுந்தரராமசாமி தன்னுடைய சகோதரிக்கு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் பத்துக் கதைகளுக்கு விஷயம் அகப்பட்டதைப் பற்றி எழுதியபோது, ''ஆடு மேய்ச்சாப்பிலேயும் ஆச்சு. அண்ணனுக்கு பெண் பார்த்தாப்பிலேயும் ஆச்சு என்பதுபோல உங்களுக்கு இந்த கதைப் புதையல்கள் அகப்பட்டிருக்கின்றன'' என்று எழுதுகிறார். அழகிரிசாமி சுந்தரராமசாமிக்கு அனுப்பிய ஓட்ஸ் டின் அவருக்கு உருப்படியாகப் போய் ச் சேருமா என்ற கவலையில்

*ஓடுற தண்ணியிலே*
*ஒரசிவிட்டேன் சந்தனத்தை*
*சேர்ந்திச்சோ சேரலையோ*
*செவத்தப்பிள்ளை நெத்தியிலே*

என்ற நாடோடிப்பாடல் போல் தன் மனநிலை உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

அழகிரிசாமியின் மன இயல்புகள் அவருடைய கடிதங்களுக்கு ஒருவிதமான நெகிழ்வுத் தன்மையையும் நெருக்க உணர்வையும் அளிக்கின்றன. வாழ்க்கைப் போராட்டங்களை நேர்மையுடன் எதிர் கொண்டு அந்த வலிகளை ஒரு வெகுளித்தனமான வெளிப்படைத் தன்மையுடன் கடிதங்களில் வெளிப்படுத்திய அழகிரிசாமியின் குரல் அதிக மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது.

# 8
# இலக்கிய உறவுகள்

அழகிரிசாமி இலக்கியம் சார்ந்தும் உலக அறிவு சார்ந்தும் தான் ஈடுபாடு கொண்டவர்களுடன் ஆழ்ந்த உறவு கொள்ளும் மன இயல்பு கொண்டவராக இருந்தார். இதனால் பலருடைய திறமைகளையும், புலமையையும் அறிந்து கொள்ளவும் அதனால் தான் பயன் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மனிதர்களை என்றைக்கும் பாண்டித்யத்தின் அடிப்படை யிலோ கல்வி அறிவின் அடிப்படையிலோ அணுகாமல் அவர்களிடம் இயல்பாகப் பொதிந்துள்ள அழகியல் உணர்வுகளின் அடிப்படையிலும், விஷய ஞானத்தின் அடிப்படையிலுமே அவர் மனிதர்களை அளவிட்டார். இதனால் இலக்கிய மேதைகளுக்கு இணையாக எழுத்தறிவற்ற சாதாரண மக்களிடமிருந்தும் அவருக்கு எண்ணற்ற பரவசங்களும், உத்வேகங்களும் கிடைத்தன யாருடனும் அரைகுறையாகவும் எந்திர ரீதியாகவும் உறவு வைத்துக் கொள்வதில் அவருக்கு விருப்பம் இல்லை. அதனால்தான் சென்னையில் அவர் வீட்டுக்கு வரும் அக்கம்பக்கத்துக் குழந்தைப் பட்டாளங்களையும் நண்பர்களாகப் பாவித்து அவர்களுடன் ஆழ்ந்த உறவு கொள்ள முடிந்தது. 'தூங்கு மூஞ்சி மாமா' என்று கத்திக் கொண்டே காலையில் அவரைத் தட்டி எழுப்பும் சிறுபெண் அவருக்குத் தேவதையாகத் தோன்றுகிறாள் கோல மாவை 'மொக்கு மாவு' என்று விடியற்காலையில் சங்கீதமாகக் கூவி விற்கும் பெண்ணைக் காணக் காலையில் எழுந்து ஓடுகிறார். 'அன்பளிப்பு', 'காற்று', போன்ற குழந்தைகளின் மனஉலகை மையமாகக் கொண்ட சிறப்பான சிறுகதைகளை எழுதுவ்தற்கு அவர் குழந்தைகளுடன் கொண்ட நட்பே காரணம். கி. ராஜநாராயணன் போன்று இசையையும், இலக்கியத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவருக்குச் சிறுவயதில் உருவான நண்பர்கள் இறுதிவரை அவருடைய இலக்கிய வாழ்க்கையின் அங்கமாக இருந்திருக்கிறார்கள். திறந்த மனத்துடன் அன்புள்ளத்தையும், அறிவுத் திறனையும் மதித்துப் போற்றும் இயல்பு அவருக்கு இருந்ததால் எவருடனும் இயல்பாக அவரால் நட்பு கொள்ள முடிந்திருக்கிறது பார்த்த மாத்திரத்திலேயே இவர் நம்பகமான நட்புக்குரியவர் என்கிற

நம்பிக்கையை அவரால் எளிதாக உருவாக்க முடிந்திருக்கிறது. ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், புதுமைப்பித்தன் போன்ற இலக்கிய மேதைகளெல்லாம் பார்த்த மாத்திரத்திலேயே அழகிரிசாமியின் இலக்கிய ஆளுமையை அடையாளம் கண்டுகொண்டார்கள். பொதுவாக மனிதர்களிடம் அவர் கொண்ட அக்கறைகள்தான் எண்ணற்ற மன இயல்புகள் கொண்ட மனிதர்களை அவருடைய படைப்புகளில் உலவிட்டிருக்கின்றன.

அழகிரிசாமி சென்னையில் பத்திரிகைத் துறையில் வேலை செய்ததால் ஏராளமான இலக்கிய நண்பர்களைப் பெற்றிருந்தார். ஆனந்தபோதினி பத்திரிகை ஆசிரியராக இருந்த நாராயண துரைக்கண்ணன் ஜீவா இவருடைய எழுத்துத் திறமையை அறிந்து இவரைச் சென்னைக்கு அழைத்ததின் பேரிலேயே தான் வாழ்ந்த கிராமப்புறச் சூழலில் தான் பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க வேலையை விட்டுவிட்டுச் சென்னை வருகிறார். சென்னையில் புதிய இலக்கியத் திறமைகளும், உறவுகளும் வளர்வதற்கான அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்கிற அனுமானத்திலேயே அவர் சென்னைக்கு வருகிறார். இங்கு நடைமுறை வாழ்க்கை அதிக சிரமமானதாக இருந்தாலும் அவருக்குக் கிடைத்த இலக்கிய நண்பர்களின் நட்பின் ஆதாரத்திலேயே அவர் சென்னையில் காலம் தள்ளுகிறார். எந்தச் சூழலில் இருந்தாலும் அங்குக் கிடைக்கும் இலக்கிய உறவுகளின் ஆதாரமே அவருக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கிறது.

தனது 18வது வயதிலேயே நாகர்கோவிலுக்குப் பக்கத்தில் புத்தேரி கிராமத்தில் வாழ்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைச் சந்தித்துப் பேசியிருக்கிறார் தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களைப் பள்ளியில் படித்திருப்பதே அவரைச் சந்தித்துப் பேசுவதற்கான தைரியத்தை அழகிரிசாமிக்கு வழங்கியிருக்கிறது. தமிழ் இலக்கியங்களைப் படித்ததினால் அவர் பெற்ற ஈடுபாட்டின் காரணமாகத் தமிழ்ப் படைப்பாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைச் சந்தித்து இலக்கியம் குறித்து உரையாடுவதில் அதிக ஆர்வம் கொண்டவராக இருந்தார். தமது 20வது வயதில் தென்காசிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சார்பதிவு அலுவலக வேலையில் சேர்ந்தபோது பக்கத்தில் குற்றாலத்தில் உள்ள ரசிகமணி டி.கே.சி.யைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக்காகவே பிடிக்காத வேலையானாலும் ஒப்புக் கொண்டார் டி.கே.சியை சந்தித்துப் பேசியது அவருக்கு மிகவும் ஆறுதலாகவும், உற்சாகமானதாகவும் இருந்தாலும் தன்னுடைய இலக்கியப் படைப்பு முயற்சிகளுக்கு சென்னையில் பத்திரிகை வேலையே உகந்தது என்றும் சம்பளம் குறைவாக இருந்தாலும்

பரவாயில்லை என்றும் மனதில் பல அபிலாஷைகளுடன் அவர் சென்னைக்கே வருகிறார். தென்காசியில் இருந்தபோது குற்றாலத்தில் டி.கே.சியைச் சந்தித்தது தவிர தென்காசிக்குப் பக்கத்தில் உள்ள வெள்ளகால் கிராமத்தில் 80 வயது தமிழறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரையும் சந்தித்து உரையாடியிருக்கிறார்

அழகிரிசாமி சென்னையில் இருந்த காலகட்டத்தில் அவருக்கு பல இலக்கிய நண்பர்களின் நட்பு கிடைத்தது முக்கியமாக வ ரா, புதுமைப்பித்தன், ஜானகிராமன், தி ஜ.ரங்கநாதன், ரகுநாதன், திரு.வி க, க.நா. சுப்பிரமணியம் ஆகியோரைச் சந்தித்துத் தங்களுடைய இலக்கியக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கான பல வாய்ப்புகள் அவருக்கு ஏற்பட்டன சிறப்பாகப் புதுமைப்பித்தன் அவருடைய மனதை மிகவும் கவர்ந்த ஒரு எழுத்தாளராக இருந்தார். புதுமைப்பித்தனின் உரைநடையும், விமர்சனப் போக்கும் அழகிரிசாமிக்கு மிகவும் வசீகரமாகவும், புதுமையாகவும் தோன்றின புதுமைப்பித்தனின் அறிவுக்கூர்மையும், நகைச்சுவையும் அழகிரிசாமியை மேலும் மேலும் அவர்பால் ஈர்த்தன. இருபதாம் நூற்றாண்டு உரைநடை இலக்கியத்தின் முனனோடி புதுமைப்பித்தன்தான் என்று அழகிரிசாமி கருதினார். புதுமைப்பித்தன் சிறு வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தது அவருக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது புதுமைப்பித்தனுடன் பழகுவதற்குச் சில சந்தர்ப்பங்களே அவருக்குக் கிடைத்தாலும் அவை மிகப்பெரிய பாதிப்பை அழகிரிசாமியிடம் ஏற்படுத்தின புதுமைப்பித்தனும் அழகிரிசாமியை மிகவும் நம்பிக்கைக்குரிய எழுத்தாளராகக் கருதினார். நவீன எழுத்தாளர்களில் பழந் தமிழ் இலக்கியத்தைப்பற்றி நல்ல அறிவு பெற்றவர்கள் புதுமைப்பித்தனும் அழகிரிசாமியும் தான் எனறு க நா சு ஒருமுறை சொல்லியிருக்கிறார் புதும்மைப்பித்தனும் அழகிரிசாமியும் சேர்ந்து 'சோதனை' என்ற பத்திரிகை நடத்துவது பற்றித் திட்டமிட்டிருக்கிறார்கள் அதற்குள் எதிர்பாராதவிதமாகப் புதுமைப் பித்தன் இறந்து விடவே அந்த எண்ணம் நிறைவேறவில்லை தான் கண்டு சந்தித்த எழுத்தாளர்களைப்பற்றி அழகிரிசாமி எழுதிய 'நான் கண்ட எழுத்தாளர்கள்' என்னும் நூலில் அவர் புதுமைப்பித்தனுடன் பழகிய அனுபவங்களைப் பற்றி மிகவும் சுவையாக விவரிக்கிறார்

பழைய இலக்கியங்களைச் சேகரித்துப் பிரபலப்படுத்த வேண்டும் என்பதில் அழகிரிசாமியைப் போலவே புதுமைப்பித்தனுக்கு அதிக விருப்பம் இருந்தது ஒருமுறை அவர் அழகிரிசாமிக்கு எழுதிய கடிதத்தில் மேலக்கல்லூர் ஆழ்வாரப்ப பிள்ளையின் கீர்த்தனங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி எழுதியிருக்கிறார். நாட்டிய சாஸ்திரம் அறி..

ஒரு தஞ்சாவூர்க் கிழவி கோவில்பட்டியில் அழகிரிசாமி கேட்டுக் கொண்டதின் பேரில் மனப்பாடமாகச் சொன்ன பல நாட்டியப் பதங்களையும் (இவற்றுள் சில ஆழ்வாரப்ப பிள்ளையால் இயற்ப் பட்டவை) பல கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சமுத்திர விலாசம், உலா, மடல் மற்றும் காவடிச் சிந்தின் கையெழுத்துப் பிரதிகளையும் அவர் புதுமைப்பித்தனிடம் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார். ஆனால் புதுமைப்பித்தன் நோய்வாய்ப்பட்டு மரணத்தை எதிர்நோக்குகிற நிலை வந்தபோது அழகிரிசாமி மிகவும் மனம் உடைந்து போனார்.

புதுமைப்பித்தனின் வேடிக்கையான பேச்சைச் சொல்லிச் சொல்லி சந்தோஷப்படுகிறார். ஒருநாள் நண்பர் வீட்டில் புதுமைப்பித்தன், ரகுநாதன், அழகிரிசாமி மூவரும் சந்தித்தபோது புதுமைப்பித்தன் இவ்வாறு கூறியதாக எழுதுகிறார்: "தமிழ்நாட்டில் இன்று யாருக்கு ஐயா கதை எழுத வருகிறது. நம்மூன்று பேரைத் தவிர்த்து" என்றார். நம் மூன்று பேர் என்பது புதுமைப்பித்தன், ரகுநாதன், நான் ஆகியமூவரும்தான். அரைநிமிஷம் மௌனமாக இருந்தார் புதுமைப்பித்தன். அப்புறம் கடகடவென்றுச் சிரித்துக் கொண்டு "நம்மூன்று பேர் என்று தாட்சண்யத்துக்காகத்தான் சொல்லுகிறேன். என்னைத் தவிர்த்து யார் கதை எழுதுகிறார்கள்?" என்றார். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்."

இன்னும் புதுமைத்பித்தனின் பலதுறை ஈடுபாடுகள் மீது அழகிரிசாமிக்குப் பெருமதிப்பு இருந்தது. "இலக்கியத்தில் எல்லாத் துறைகளிலும் அவருக்குப் பரிச்சயம் உண்டு. கதை, கட்டுரை, நாடகம், கவிதை எதை வேண்டுமமென்றாலும் நிகரில்லாத முறையில் எழுதுபவர். மேல்நாட்டு இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஊறித்திளைத்தவர் நாடோடிப் பாடல், சித்தர் பாடல், கிராமியக் கதைகள் பண்பாட்டை ஒட்டிவரும் பழக்கங்கள் முதலியவற்றைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். கம்பரிடத்தில் ஒரே உயிர். கம்பன் தான் எனக்குத் தமிழ் நடையைக் கற்றுத் தந்தான் என்பார். ஒரு கதையில் ஒரு பெண்ணைப் பற்றிக் கூறும் போது 'கவிதா ரசிகனுக்குக் கம்பன் மாதிரி' என்று உவமானமாகக் கூறியிருக்கிறார்" என்றெல்லாம் சொல்லிவிட்டு இன்னும் அவர்களிடையே பலசந்தர்ப்பங்களில் நடந்த சம்பவங்களையெல்லாம் விரிவாகக் கூறுகிறார்.

அதே போல் அவரைக் கவர்ந்த மற்றொரு இலக்கிய ஆளுமை ரசிக மணி டி.கே சி. அவர்கள் பண்டித மனப்பான்மையிலிருந்து வேறுபட்டுக் கவிதையை அதன் செறிவு, உணர்ச்சிப் பெருக்கு மற்றும் இசைக் கூறுகளின் வாயிலாக அடையாளம் கண்டு அதைப் பாடுவதின் மூலம் சுலபமான

விளக்கங்களுக்கு உட்படுத்திய டி.கே.சியின் ரசனை முறை அழகிரிசாமியிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. தமிழின் பழைய தனிப்பாடல்களுக்கு விளக்கங்கள் அளித்து அழகிரிசாமி எழுதிய தமிழ் தந்த கவி அமுதம், தமிழ்தந்த கவிஇன்பம், தமிழ் தந்த கவிச் செல்வம் ஆகிய புத்தகங்களில் ஒரு விதமான டி.கே.சியின் பாதிப்பு இருப்பதைப் பார்க்கலாம். சமகால இலக்கியங்களையும் எழுத்தாளர்களையும் மதிப்பிடுவதில் டி.கே.சியுடன் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழின் பயன்பாடு, நாட்டுப் பாடல் ஈடுபாடு தமிழிசை ஈடுபாடு, உரையாடும் திறன், விருந்தோம்பல் குணநலன்கள் எல்லாம் அழகிரிசாமியைப் பெரிதும் வசீகரித்தன.

அதேபோல் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் எளிய இசைப்பாடல்கள், வையாபுரிப் பிள்ளையின் பரந்த தமிழ் அறிவு, வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள், வ.ரா.வின் சீர்திருத்தக் கருத்துக்கள் வெ.சாமிநாத சர்மாவின் அரசியல் நூல்கள், தி.ஜ.ரங்கநாதனின் கதைகள், பாரதியாருக்கு இணையாகக் சுதந்திர உணர்வை ஊட்டிய டி.எஸ்.சொக்கலிங்கத்தின் பத்திரிகை எழுத்துக்கள் என இந்த எழுத்தாளர்கள் குறித்த பல தகவல்கள் 'நான் கண்ட எழுத்தாளர்கள்' நூலில் விரிவாகத் தருகிறார் அழகிரிசாமி.

அழகிரிசாமியைக் கவர்ந்த மற்றொரு எழுத்தாளர் திரு விக.என்று அறியப்படும் திரு.வி.க்ல்யாணசுந்தரமுதலியார் பெரிய அரசியல் தலைவராகவும்,சொற்பொழிவாளராகவும், தொழிற்சங்கவாதியாகவும் பத்திரிகை ஆசிரியராகவும் பெரிய எழுச்சியை உருவாக்கிய திரு.வி க.வின் மெலிந்த எளிய தோற்றம் அழகிரிசாமிமை வியப்பில் ஆழ்த்தியது. சக்தி பத்திரிகைக்குக் கட்டுரை கேட்க, சக்தி காரியாலயத்துக்குப் பக்கத்துத் தெருவில் உள்ள ஒரு சிறிய வீட்டில் தாம் கற்பனை செய்திருந்த பிரம்மாண்டமான ஆளுமைக்கு மாறாக ஒரு எளிய பலகீனமான தோற்றத்தில் திரு.வி.கவைப் பார்த்தபோது அழகிரிசாமியால் நம்ப முடியவில்லை. அவரது உடல் நலம் கருதி அவருக்குத் தொந்தரவு வேண்டாம் என்று அவரை அடிக்கடிச் சந்திக்க முடியாமல் போனாலும் சந்தித்த சமயங்களில் எல்லாம் திரு வி க. விடமிருந்து வெளிப்பட்ட பரந்த தமிழ் ஞானம் அழகிரிசாமியைப் பெரிதும் வசீகரித்தது பள்ளிப் பருவத்திலேயே திரு.வி.க.வின் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, முருகன் அல்லது அழகு ஆகிய நூல்களைப் படித்திருந்தாலும் அச்சில் வராது திரு.வி.க வின் நினைவில் மட்டும் இருந்த தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றுக்கும் இலக்கிய வரலாற்றுக்கும் தேவையான முக்கியமான குறிப்புகளைத்

திரு.வி.க.வின் மூலம் நேரடியாகக் கேட்டறிந்தது அழகிரிசாமிக்கு மிகவும் ரஸமானதாக இருந்தது. அரசியலில் ஈடுபட்ட முதல் தமிழ்ப் பண்டிதரான திரு.வி.க. தமிழ் பற்றியும் சைவம் பற்றியும் அரசியல் பற்றியும் மிகவும் சிறப்பான கருத்துக்ளைப் பல மேடைகளில் முழங்கியிருக்கிறார். பரந்த உலக அனுபவமும் பல திறப்பட்ட அறிவுத்துறைக்ளில் தேர்ச்சியும் கொண்ட திரு.வி.க. விடம் எந்த விதமான சந்தேகத்தையும் கேட்க அணுகமுடியும் என்று அழகிரிசாமி குறிப்பிடுகிறார்.

அழகிரிசாமி மலேசியாவில் தமிழ்நேசன் பத்திரிகையின் பொறுப்பில் இருந்த ஐந்து வருட காலத்தில் அங்கிருந்த தமிழ் எழுத்தாளர்களை ஒன்று திரட்டித் தமிழ்நாட்டின் சிறப்பான எழுத்துக்களை அவர்க்ள் அறிந்து கொள்ள வகை செய்தார். இதனால் தமிழ்க்கலாச்சார சூழலுக்கும் மலேசியத்தமிழ்ச் சூழலுக்கும் இடையே ஒரு நல்லுறவு ஏற்பட்டு மலேசியத்தமிழ் எழுத்துகள் மேம்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. சிறந்த தமிழ்ச் சிறுகதைகளையும் உலகச் சிறுகதைகளையும் அங்கு அறிமுகம் செய்து சிறுகதைகள் குறித்த விமர்சனக் கூட்டங்களை மாத்மாதம் நடத்தி மலேசிய எழுத்தாளர்கள் சந்திப்புக்கும் உரையாடலுக்குமான ஒரு பின்புலத்தை உருவாக்கினார். இவ்விதமாக புதிய சிறுகதை எழுத்தாளர்களும் உருவாயினர். அழகிரிசாமி இந்த காலகட்டத்தில் அதிகம் படைப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் இலக்கிய உறவுகளை உருவாக்குவதிலும் அவைகளை வலுப்படுத்துவதிலுமே நேரத்தைச் செலவிட்டார் தனக்கான ஒரு வாழ்க்கைத் துணையையும் இங்கு தான் அவர் தேடிக்கொண்டார். இந்த நாட்களில் அவர் மலேசிய வரலாறு, கலாச்சாரம் மற்றும் மலேசியத் தமிழர்களின் நிலை பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மலேசியத் தமிழர்களின் நிலை உயர்வதற்காகத் தமிழ்நேசன் பத்திரிகையில் தொடர்ந்து குரல் கொடுத்தார் இதனால் மலேசியத் தமிழ்ச்சூழலில் அழகிரிசாமி பற்றி சிறப்பான நல்லெண்ணம் உருவாகியது. அழகிரிசாமி மலேசியாவிலிருந்து திரும்பி கிட்டதட்ட 26 ஆண்டுகளுக்குப் பிறகு 'அழகிரிசாமி கதைகள்' என்ற தொகுப்பு அங்குள்ள தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் அமைச்சரின் மதிப்புரைகளுடன் மலேசியாவில் வெளியிடப்பட்டது என்பதிலிருந்து அழகிரிசாமி அங்கு உருவாக்கிய நல்லெண்ணச் சூழலை அறிந்து கொள்ளலாம்

அழகிரிசாமி மலேசியாவிலிருந்து சென்னை வந்த பிறகு கிட்டத் தட்ட 13 வருடங்கள் அதாவது இறக்கும் வரை சென்னையிலேயே இருந்து பத்திரிகைகளில் வேலை செய்தார். இந்த காலகட்டத்தில் தான் அவருக்கு க.நா.சு., சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், ஜானகிராமன் ஆகிய

எழுத்தாளர்களுடன் உறவு ஏற்பட்டது. புதிய எழுத்தாளர்களின் வரவால் தமிழ்ச்சிறுகதையின் முகம் மாறத் தொடங்கிய காலகட்டம் அது. அந்தக் காலகட்டத்தில் சுந்தர ராமசாமி அழகிரிசாமியின் நட்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய எழுத்தாளராக இருந்தார். சுந்தர ராமசாமியின் கதைகளைப் பற்றி க.நா.சு., ஜானகிராமன், தி.ஜ.ர ஆகியோரிடம் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார் பதிப்பாளர் கண.முத்தையா அழகிரிசாமியிடம் மதிப்பும் ஆழ்ந்த நட்பும் கொண்டு அழகிரிசாமியின் பல படைப்புகள் இந்தக் காலகட்டதில் வெளிவரக் காரணமாக இருந்திருக்கிறார். திருவல்லிக்கேணியில் அவர் பதிப்பகத்தில் உட்கார்ந்து கொண்டு இரவு, பகல் என்று பாராமல் அழகிரிசாமி இலக்கியம் பற்றி பேசிக் கொண்டிருப்பாராம்.

அழகிரிசாமி பல ஊர்களுக்குச் சென்று இலக்கிய விழாக்களில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். 1967ல் இலங்கை ராகலை தமிழ் மன்றம் சார்பில் தமிழ் ஈழம் முழுவதும் பாரதி குறித்த இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இலங்கைத் தமிழர்களால் அழகிரிசாமி மிகவும் அன்புடன் வரவேற்கப்பட்டார். முற்போக்கு இலக்கிய ஆய்வாளரான டாக்டர் சிவத்தம்பி அழகிரிசாமியை வரவேற்று அவருடைய இலங்கைப் பயணத்தைப் பத்திரிகைகளுக்கும் எழுத்தாளர் களுக்கும் அறிமுகப்படுத்தி வைக்கிறார் அவர் அழகிரிசாமிபற்றி இவ்வாறு எழுதுகிறார் "காலம் காலமாக வழிதவறாது பாய்ந்து வரும் இலக்கிய ஓடை அழகிரிசாமி திடீரென வரும் வெள்ளப் பெருக்குகள் சப்தமிட்டுப் பாய்ந்து குழிகளுக்குள் வீழ்ந்து தேங்கி நாற்றமெடுத்து வறட்சியடைந்த பின்னரும் எக்காலத்தும் போலச் சலசலப்பற்ற தெளிவுடன் பாய்ந்து கொண்டிருக்கும் சிற்றாறு போன்றவர் அழகிரிசாமி. அவர் இலங்கைக்கு வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய செய்தி. தென்னிந்தியத் தமிழ் இலக்கியம் வாரசஞ்சிகை இலக்கியமல்ல என்பதை இங்குள்ள நண்பர்களுக்கு எடுத்துக் கூறும் செய்தி. இவ்வரிய சந்தர்ப்பத்தினை ஈழத்து எழுத்தாளர்களும் இலக்கிய அபிமானிகளும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'.

அதேபோல் நீலபத்மநாபன், ஆ. மாதவன் போன்ற எழுத்தாளர்களைக் கொண்டுள்ள திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றினார் தன்னுடைய சிறுகதையைப் படித்துத் தன்னை அடையாளம் கண்டு கொண்ட அழகிரிசாமியை எழுத்தாளர் ஆ மாதவன் பெரிதும் பாராட்டிப் பேசினார் பிறகொரு சந்தர்ப்பத்தில் அழகிரிசாமி தாமரையில் வெளிவந்த ஆ.மாதவனின் 'தூக்கம் வரவில்லை' கதை தன்னை மிகவும் பாதித்தாகக் கடிதம் எழுதினார்

இவ்வாறு அழகிரிசாமி இறுதிவரை இலக்கிய நண்பர்களின் உறவுகளைப் பேணிக் காப்பவராக இருந்தார். அவர் இறப்பதற்குச்சில மாதங்கள் முன்பு கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் நண்பர் வட்டக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார். ஜெயகாந்தனும் அப்போது அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். ஜெயகாந்தனின் பேச்சை வெகுவாகப் பாராட்டிய அழகிரிசாமி ஜெயகாந்தனுடனான தனிப்பட்ட உரையாடலில் ஜெயகாந்தனுடைய மரண பயம் குறித்த சிந்தனைகளுக்கு அழகிரிசாமி சமாதானங்கள் கூறியதாகக் குறிப்பிடுகிறார். மரணப் படுக்கையில் இருந்த சமயத்தில் கூட திருநெல்வேலி மாவட்ட சிறுகதைப் போட்டியின் நடுவராக இருக்க ஒப்புக் கொண்டு கதைகளையெல்லாம் படித்துத் தன்னுடைய தேர்வைத் தெரியப்படுத்தினார். எதிர்பாராத விதமாகத் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் 1970 ஜூலை 5ல் அவர் மரணம் சம்பவித்தது. அந்த நாட்களில் பல இலக்கிய நண்பர்கள் அவரை வந்து சந்தித்தபடி இருந்தனர்.

தன் வாழ்நாளில் மனித உறவுகளைக் கௌரவித்து மேன்மைப் படுத்தியவர் அழகிரிசாமி.

# 9
# படைப்பிலக்கியப் பார்வை

தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்று வெகு சிலரையே குறிப்பிட முடியும். புதுமைப்பித்தனும், கு. அழகிரிசாமியும் அதில் முக்கிய மானவர்கள. பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருப்பவர் என்று கு.அழகிரிசாமியைப்பற்றி க.நா.சு. குறிப்பிட்டுள்ளார். ஆனால் புதியது பழையது என்கிற பேதமில்லாதபடி இலக்கியம் என்பது மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்பதால் அது என்றைக்கும் புதியது என்றும் இலக்கியம் என்பது என்றும் தொடரும் ஒரு செயல்பாடு என்றும் அவர் நம்பினார். வாழ்க்கையின் வடிவங்கள் மாறிக் கொண்டிருப்பதுபோல் இலக்கிய வடிவங்களும் மாறிக்கொண்டிருப்பது இயல்பானதுதான் என்று அவர் கருதினார். அதனால்தான் கம்பனையும், கார்க்கியையும் ஒன்றுசேர அவரால் ரசிக்க முடிந்தது. எத்தகையச் சூழலிலும் நம்முடைய சமகால வாழ்க்கைக்கு உத்வேகம் அளிக்க எண்ணற்ற விஷயங்கள் பொதிந்து கிடப் பதை அறிந்து அவர் இலக்கியத்தையும், வரலாற்றையும், தத்துவத்தையும் அணுகினார். அதனால் கடந்த காலம் சம்பந்தப்பட்டதாக நாம் கருதும் பல விஷயங்களில் ஒரு உடனடித் தொடர்புக்கான சாத்தியங்கள் அவருக்குப் புலப்படுகின்றன. பிற்காலப் புலவர்களின் தனிப்பாடல்களில் அவர் கொண்ட ஈடுபாட்டை இவ்விதமாகவே நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இளம் வயதிலிருந்தே இசை அவரிடம் பெரிய பாதிப்பைச் செலுத்தி இருக்கிறது. சாகித்தியங்களையும் இசைக் கூறுகளையும் இணைந்தே பார்க்கக் கூடிய பார்வை இயல்பிலேயே அவருக்கு உருவாகிவிட்டது. பஜனைப் பாடல்களின் மெட்டில் புதிய பாடல்களை இட்டுக்கட்டிப் பாடக் கூடிய திறமையும் ஆர்வமும் சிறுவயதிலேயே அவருக்கு இருந்தன அதனால்தான் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்களை யும், பாரதியாரின் பாடல்களையும், வள்ளலாரின் இசைப் பாடல்களையும் இசைக் கூறுகளின் அடிப்படையில் அணுகி, பாடும் பொருளின் ஒழுங்கு எவ்வாறு இசைத்தன்மையை உருவாக்குகிறது என்பதை உணர்ந்து அவரால் ரசிக்க முடிந்தது. முத்தொள்ளாயிரம் நந்திக் கலம்பகம் ஆகிய பாடல்களின்

இசையும் கருத்தும் பொருந்தி வரும் தன்மையை அவரால் சுலபமாக இனம் காண முடிந்தது. இதுவே நாட்டுப்புற மக்களின் வாய்மொழிப் பாடல்களை நோக்கி அவரை அழைத்துச் சென்றது.

ஆத்துக்கு அக்கரையில்
அத்தைமகன் ஒருவனுண்டு அவன்
வாய்திறந்து பாடையிலே
வாடைப்பட்டுச் சூலானேன்-

என்பதுபோன்ற கிராமிய மக்களின் சாதாரண வழக்கில் உள்ள பாடல்களில் கூட இசைத்தன்மை பொருந்திருப்பதை அவர் பார்க்கிறார். கவிதை என்பது ஒருவகையான இசை நிகழ்வு என்பதான பார்வையே அவர் கொண்டிருந்தார்.

அழகிரிசாமியும் பல கவிதைகள் எழுதியிருக்கிறார் ஆனால் அவையெல்லாம் தொலைந்து போய்விட்டன. ராஜநாராயணனுக்கு எழுதிய கடித்ததில் தன்னுடைய ஒரு கவிதையை அவர் குறிப்பிடுகிறார் காதல் நினைவில் ஒரு காதலி பாட்டு இது நீண்ட கவிதையின் ஒரு பகுதி

''நீண்ட பொழுதாய் எண்ணி
நிலாமுற்றம் மேலேறி
மூண்ட பெரு அன்பில்
மோவாய் கரந்தூன்றி
வேண்டுதலாய்க் கெஞ்சி
வீற்றிருக்க வைத்திட்டான்
ஆண்டருளும் அன்பன்
அன்பினை என்னென்பேனோ''

இவ்வாறு அதிகம் இசைக்கு வயப்பட்டதினால்தான் இசைத் தன்மை தவிர்த்த வசனத்தை ஒட்டிய புதுக்கவிதை அவர் மனதைக் கவரவில்லை. புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றவர்களே புதுக்கவிதை அபிமானிகளாக இருந்தாலும் அழகிரிசாமியால் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை புதுக்கவிதையின் இன்னும் வேறுபட்ட தோற்றங்களை அவர் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போயவிட்டது

ஆனால் குருட்டுத்தனமான பக்தியை விலக்கி அறிவுப்பூர்வமான விசாரணையும், விமர்சன நோக்குமே அவருடைய ஆய்வுகளின் அடிப்படைகளாக இருந்தன. எவ்வளவு பெரிய இலக்கியப் படைப் பானாலும் அதில் உள்ள குறைகளை அவர் சுட்டிக்காட்டத் தயங்கியது இல்லை. அதே சமயம் கவனம் பெறாததும் புறக்கணிக்கப் பட்டதுமான எந்த அம்சத்தையும் மிகவும் நெகிழச்சியுடன் அணுகக் கூடிய மனநிலை அவரிடம் இருந்தது. அதனால்தான் கம்பர் ராட்டினம் சுற்றும் கிழவி யையும், திருவிடைமருதூர் தேவதாசிகளையும் பற்றிப் பாடியதைக் கொண்டாடுகிறார். கோவை, உலா, மடல், தூது போன்ற சிற்றிலக்கியப் பிரபந்தங்கள் ஆபாசம் என்கிற பார்வையில் ஒதுக்கப்பட்ட நிலை கண்டு மனம் வருந்தி சிற்றிலக்கியப் பாடல்களில் வெளிப்படும் இயல்பான பாலியல் தன்மையின் வெளிப்பாடுகளை ஆரோக்கியமான பார்வையில் அணுகி அப்பிரபந்தங்களின் அழகுகளை ரசிக்குமாறு கோருகிறார் அதேபோல் காம சரம் பொருந்தியவை என்று ஒதுக்கப்பட்டு மறைந்து போனநாட்டியப்பதங்களையெல்லாம்தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இந்த நாட்டியப் பதங்கள் அழிந்தால் சங்கீதத்தின் ஒரு முக்கியப் பகுதி மறைந்து போகும் என்பதை வலியுறுத்துகிறார் அதனால் பழைய கலை இலக்கிய வடிவங்கள் குறித்து ஒரு பண்டித மனப்பான்மையும் சம்பிரதாயப் பார்வையும் நீங்கிய ஒரு அழகியலை முன்வைக்கிறார்

கரிசல் காட்டு மனிதர்களும், நிலவெளியும், வாழ்க்கை அவலங்களும் மனித இயல்புகள் குறித்தும் வாழ்க்கை நிலைப்பாடுகள் குறித்தும் மிகவும் நெகிழ்வான புரிதலையும் பரிவையும் அவரிடம் உருவாக்குகின்றன. இவைகளை ஆதாரங்களாகக் கொண்டே அவர் தம் புனைவுகளை உரு வாக்குகிறார். கற்பிதங்களின் அடிப்படையில் மனித நடத்தைகளையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் வகைப்படுத்திப் பார்க்காமல் அவற்றின் பன் முகத்தன்மைகளை அடையாளம் காணக்கூடியவராக அவர் இருக்கிறார் இதனாலேயே அவருக்குப் பல்வேறுபட்ட கதைகளுக்கான சாத்தியங்கள் புலப்பட்டன. வாழ்க்கை உறுதியற்றது. நிச்சயமற்றது என்பதான உணர்வு அவருக்கு ஆழமாக இருந்ததாலேயே அவருடைய கதைகளில் ஒரு தீர்மானமற்ற தன்மையையும் மென்மையான தொனியையும் அவரால் பிரயோகிக்க முடிகிறது. இதனால்தான் மனித பலகீனங்களுக்கு அதிக சலுகைகள் வழங்கவும், வாழ்க்கையின் விசித்திரங்களுக்கும் வேடிக்கை களுக்கும் அதிக இடம் ஒதுக்கவும் அவருக்குச் சாத்தியப்படுகிறது ''அழகிரிசாமியின் கதைகள் மன நிலைகளை நுணுக்கமாக விவரிப்பதாலும் சௌந்தர்ய உணர்ச்சியின் பரிமாணத்தையும் உள் வளைவுகளையும் தாங்கி இருப்பதாலும் ஒரு நூதன சிரிப்புத் தன்மைபொருந்தி இருப்பதாலும்

பிரத்யுட்ச உலகின் தொடர்பு அறாமல் இருப்பதாலும் நம்மைக் கவருகின்றன'' என்று நகுலன் குறிப்பிடுவதுபோல அழகிரிசாமியின் அழகியல்தன்மை புத்துணர்ச்சி கொண்டதாக இருக்கிறது.

வருத்தங்கள் இன்றி வாழ்க்கையை ரசிக்கவும் நேசிக்கவும் தெரிந்த அழகிரிசாமி பல இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் எப்போதும் சிரித்துக் கொண்டு ஒரு வெளிப்படைத்தன்மை கொண்ட வேடிக்கை மனிதராக உலவுகிறார். இன்னும் கூர்மையான அங்கதமும் விமர்சனமும் கொண்ட புதுமைப்பித்தனின் நகைச்சுவை அதனாலேயே அழகிரிசாமியை மேலும் வசீகரிக்கிறது. ஆனால் அதிகபட்ச ரசிப்புத் தன்மை கொண்ட இருவருக்கும் வாழ்க்கை உவப்பானதாக இல்லை. அவர்களுடைய இறுதிநாட்கள் சோகம் நிரம்பியவையாகவே இருந்தன. தங்கள் வாழ்நாளுக்குப் பிறகே அதிகம் அறியப்பட்டவர்களாகவும், அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும் இருவரும் இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்க்கலாச்சாரச் சூழலின் இந்த தவிர்க்க முடியாத விதியை உணர்ந்தவர்களாகவே இருவரும் தங்கள் குறுகிய வாழ்நாளில் அதிகச் சாதனைகள் செய்து மறைந்திருக்கிறார்கள்.

# நூற்பட்டியல்

(புத்தகங்களாக வெளிவந்தவை)

**சிறுகதைத் தொகுதிகள்**

அன்பளிப்பு (சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது)

சிரிக்கவில்லை

தவப்பயன்

தெய்வம் பிறந்தது

வரப்பிரசாதம்

காலகண்டி

கற்பக விருட்சம்

இரு சகோதரர்கள்

கவியும் காதலும்

செவி சாய்க்க ஒருவன்

புதிய ரோஜா

துறவு

**கு. அழகிரிசாமி கதைகள்**

(தொகுப்பாசிரியர் கி.ராஜநாராயணன்)

**நாவல்கள்**

டாக்டர் அனுராதா

புதுவீடு புது உலகம்

தீராத விளையாட்டு

**நாடகங்கள்**

கவிச்சக்கரவர்த்தி

வஞ்ச மகள்

**கட்டுரைத் தொகுதிகள்**

இலக்கியச் சுவை

இலக்கியத் தேன்

இலக்கிய அமுதம்

இலக்கிய விருந்து

தமிமிழ் தந்த கவியின்பம்

தமிழ் தந்த கவிச்செல்வம்

நான் கண்ட எழுத்தாளர்கள்

**மொழிபெயர்ப்புகள்**

இந்தியாவின் ஒருமைப்பாடு( டாக்டர் ராஜேந்திர பிரசாத்)

லெனினுடன் சில நாட்கள்(மாக்சிம் கார்க்கி)

அமெரிக்காவிலே(மாக்சிம் கார்க்கி)

யுத்தம் வேண்டாம்(மாக்சிம் கார்க்கி)

விரோதி பணியாவிட்டால்(மாக்சிம் கார்க்கி)

பல நாட்டுச் சிறுகதைகள்

அக்பர் (லாரன்ஸ் பின்யன்)

**சிறுவர் கதைகள்**

மூன்று பிள்ளைகள்

காளிவரம்

## கு.அழகிரிசாமி பற்றிய வெளியீடுகள்

கு.அழகிரிசாமியின் கடிதங்கள் (கி.ராஜநாராயனுக்கு எழுதியவை- தொகுப்பு: கி.ராஜநாராயணன்)

கு.அழகிரிசாமியின் எழுத்துக்கள்(என்.ஆர். தாசன்)

எழுத்தாளர் கு.அழகிரிசாமி வாழ்க்கை வரலாறு(மு.பரமசிவம்)

**கு.அழகிரிசாமி [1923-1970]:** இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி மற்றும் புதுமைப்பித்தனுக்கு அடுத்த தலைமுறை எழுத்தாளர்களில் முக்கியமானவர்களில் ஒருவராக கு. அழகிரிசாமி கருதப்படுகிறார். தம்முடைய எழுத்தின் மூலமும் இடைவிடாத தேடலின் மூலமும் தேசிய உணர்வுகளும், புதிய சமூக மறுமலர்ச்சிக்கான கருத்துகளும், புதிய இலக்கிய உணர்வுகளும் பெருகிக் கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்த அவர், கரிசல் காட்டு வாழ்க்கைச் சூழலின் பல்வேறு உணர்வுகளை சிறப்பாக படம் பிடித்து காட்டியவர். தம் குறுகிய வாழ்நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட **சிறுகதைகள்**, கட்டுரைகள், நாடகங்கள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், பத்திரிகை, பதிப்பு, கடிதங்கள், பேச்சு என முழு இலக்கியவாதியாக வாழ்ந்தவர். 1970 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி அவருக்கு பரிசு வழங்கிக் கௌரவித்தது.

**வெளி ரங்கராஜன்:** இவர் தம்முடைய நாடக வெளி என்ற இதழின் மூலமாக தமிழில் நாடகம் குறித்த சிறப்பான பதிவுகளை மேற்கொண்டு வருபவர். மேலும் தம்முடைய கட்டுரைகள் மூலம் தமிழில் நிகழ்கலை மற்றும் புனைவு இலக்கியம் சார்ந்த பல்வேறு அழகியல் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி வருகிறார். **தமிழ் நாடகச் சூழல் ஒரு பார்வை, இடிபாடுகளுக்கிடையில்** ஆகியவை இவரது முக்கிய படைப்புகள்.

ISBN 812602207-8

***Ku. Azhagirisamy***
(Tamil) Rs. 25